"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,456,53,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.142,70,87,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.29,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளில் உள்ள கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

@ *207 முதல் 292 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.*

2021 ஆகஸ்ட் 26]

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளில் உள்ள கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகள் மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 15 நிமிடங்களுக்கு மிகாமல் பேச வேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட சட்டமுன்வடிவு ஆய்வு செய்யப்படவிருக்கின்ற காரணத்தினால், அதையும் மனதில் வைத்து சுருக்கமாகப் பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.

***திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் தங்களுக்கு எனது வணக்கம். வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் பேரறிஞர் அண்ணா அவர்கள், எங்கள் நெஞ்சங்களில் நிறைந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற சத்துணவு தந்த சரித்திர நாயகன் புரட்சித் தலைவர் அவர்கள், 14 கல்வி உபகரணம் பொருட்களை விலையில்லாமல் வழங்கி, தமிழகத்தில் மாணவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை

@ *293 முதல் 364 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.*

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2021 ஆகஸ்ட் 26

உயர்த்திக் காட்டி, வரலாறு படைத்த எங்கள் நெஞ்சம் நிறைந்து வாழ்ந்துகொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில் கொண்டிருக்கும் திசை நோக்கி வணங்கி முதலில் எனது வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் நான் முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாடோடி மன்னன் திரைப்படத்தில் புரட்சித் தலைவர் பேசுகின்றபோது ஒரு கருத்தினைச் சொன்னார். அன்றைக்கெல்லாம் அவர் முதலமைச்சராக வருவோம் என்று கனவு கண்டது கிடையாது. இரு வேடங்களில் நடிக்கின்றபோது, மன்னன் நாளை திட்டங்களை நிறைவேற்றப் போகிறேன் என்று சொல்கின்றபோது, நாடோடியாக இருக்கின்ற புரட்சித் தலைவர் அன்றைக்குச் சொன்னார், "மன்னா, நீங்கள் மாளிகையிலிருந்து மக்களைப் பார்க்கிறீர்கள், நான் மக்களோடு இருந்து மாளிகையைப் பார்க்கிறேன்" என்று குறிப்பிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் புரட்சித் தலைவர்தான் தமிழகத்திலே தன்னுடைய வரலாற்றினைப் படைத்துக் காட்டினார்.

சத்துணவு வழங்கினார். சரித்திரம் படைத்தார். இந்திய நாடே வியக்கத்தக்க அளவிற்கு பல்வேறு மாற்றங்களை தமிழகத்திலே உருவாக்கிக் காட்டினார். மனித நேயத்தோடு மக்களுக்குப் பணியாற்றினார். அவர் மறைந்தார். அவர் மறைந்ததற்குப் பிறகு இந்த இயக்கத்தை வழிநடத்திச் சென்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பள்ளிக் கல்வித் துறையைப் பொறுத்தவரைக்கும் பல்வேறு மாற்றங்களை உருவாக்குவதற்கு, மாணவர்களின் எதிர்காலத்தினை மனதில்கொண்டு, கிராமங்களில் இருக்கின்ற மாணவர்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு, யார் நமக்கு இருக்கிறார் என்று கிராமத்தில் வாழ்கின்ற ஏங்கிக்கொண்டிருந்த அந்தப் பெற்றோர்களின் குழந்தைகளை தன் குழந்தைகளாக ஏற்று தமிழகத்திலே பல்வேறு வரலாறுகளைப் படைத்துக் காட்டினார்.

முற்பகல் 10–25

அவருடைய காலம் பொற்காலமாக தமிழகத்திலே உருவாகியிருந்தது. அதைப்போலத்தான் பெருந்தலைவர் காமராசர் அவர்கள், தான் பொறுப்பிலே இருந்தபோது அனைத்துக்

2021 ஆகஸ்ட் 26] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

கிராமங்களிலும் பள்ளிகளைத் தொடங்கினார். புரட்சித் தலைவர் சத்துணவை வழங்கினார். அதைப்போல பல்வேறு தலைவர்களுக்கும் அவர்களுக்கென்று ஒரு வரலாறு இருக்கிறது. குறிப்பாக, திராவிட மண் என்று சொன்னாலே, 1967–க்குப் பிறகு திராவிட மண்தான் தமிழ்நாட்டை ஆள முடியுமே தவிர, வேறு எவராலும் தமிழ்நாட்டை ஆள முடியாது என்ற வரலாற்றைப் படைத்தவர் தந்தை பெரியார் அவர்கள். பெரியார் வழியிலே அண்ணா அவர்கள், அண்ணா வழியிலே புரட்சித் தலைவர் மற்றும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆகவேதான், இந்தத் திராவிட இயக்கம் இன்றைக்கும் தன்னை நிலைநிறுத்திக்கொண்டிருக்கிறது.

1967–க்குப் பிறகும் இந்த இயக்கம் நிலைத்து நிற்கிறது என்று சொன்னால், திராவிட இயக்கத்தில் நாம் மாறி, மாறி வருவோமே தவிர, வேறு எவராலும் தமிழ் மண்ணிலே திராவிட இயக்கத்தை வீழ்த்த முடியாது என்ற வரலாற்றைத் தமிழகத்தில் மக்கள் படைத்து வருகிறார்கள். குறிப்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல திட்டத்தை இங்கே அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், கிராமங்களில் படிக்கின்ற மாணவர்களுடைய எதிர்காலத்தை மனதில் கொண்டு, இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்று முதலமைச்சராக இருந்தபோது, இந்தியாவே வியக்கின்ற அளவிற்கு 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டைத் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) அடித்தளத்தில் இருக்கின்ற மாணவர்களும் மருத்துவர்களாக வர முடியும் என்ற வரலாற்றை தமிழகத்திலே படைத்தார். 435 மாணவர்கள் இன்றைக்கு மருத்துவராக வரக்கூடிய வரலாறு தமிழ்நாட்டிலே உருவாக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே, பொறியியல் கல்லூரிகள், கால்நடை மருத்துவக் கல்லூரிகள், வேளாண்மைக் கல்லூரிகள், மீன் வளத் துறை கல்லூரிகள் போன்ற பல்வேறு தொழிற்படிப்புகளுக்கும் இந்தச் சட்டமுன்வடிவு முன்மொழியப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே அடித்தளத்தில் இருக்கின்ற மாணவர்களுடைய எதிர்காலத்தை மனதில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளதால், இது பயனுள்ளதாக அமையும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை ஏன் குறைந்துகொண்டிருக்கிறது என்பதற்கு சில காரணங்களைச் சுட்டிக்காட்ட வேண்டும். ஏனென்றால், 2012 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை மாணவர்களின் எண்ணிக்கை

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2021 ஆகஸ்ட் 26

குறைந்திருக்கிறது என்று புள்ளிவிவரங்கள் சொல்லிக்கொண்டிருக்கின்றன. மாணவர்களின் எண்ணிக்கை குறைந்திருப்பதற்குக் காரணம், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை ஆங்கிலவழிக் கல்வி பயில வேண்டும் என்ற நோக்கத்தோடு தனியார் பள்ளிகளுக்கு அனுப்பியதுதான். ஆனால், கடந்த ஆட்சியில் எங்களது அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, அங்கன்வாடியில் படிக்கின்ற குழந்தைகளை அருகில் இருக்கின்ற அரசுப் பள்ளிகளில் LKG, UKG வகுப்புகளில் சேர்த்ததன் மூலமாக 42,691 குழந்தைகள் அந்த வகுப்புகளில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, சென்ற ஆண்டு ஏறத்தாழ 1 இலட்சத்து 20,000 பேருக்கு மேல் அனைத்து வகுப்புகளிலும் மாணவர்கள் சேர்க்கை உயர்ந்திருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டில் பார்க்கும்போது, ஏறத்தாழ 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் நம்முடைய அரசுப் பள்ளிகளை நோக்கி வருகின்ற நிலை தமிழ்நாட்டிலே உருவாகியிருப்பதற்குக் காரணம் புரட்சித் தலைவர் அவர்களும், புரட்சித் தலைவி அம்மா அவர்களும்தான் என்பதை நான் இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) புதிய பாடத் திட்டம் உருவாக்கப்பட்டதுதான் முக்கியக் காரணம். இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு வரலாறு தமிழ்நாட்டில் படைக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் CBSE பாடத் திட்டத்தில் படிப்பவர்களே வியந்துபோகின்ற அளவிற்கு வரலாறுகள் படைக்கப்பட்டிருக்கின்றன. ஏனெனில், QR Code system என்று சொல்லப்படுகின்ற Quick Response system என்ற ஒரு வரலாறு தமிழ்நாட்டிலேதான் உருவாக்கப்பட்டிருக்கிறதே தவிர, வேறு எந்த மாநிலத்திலும் உருவாக்கப்படவில்லை.

NEET தேர்வில் கேட்கப்பட்ட கேள்விகளில், கேள்வித் தாளில் இருந்த 180 வினாக்களில் 174 வினாக்கள் தமிழ்நாட்டில் பின்பற்றப்பட்ட பாடத் திட்டத்திலிருந்தே எடுக்கப்பட்ட வரலாறு, தமிழ்நாட்டிலே இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் நான் குறிப்பிட்டுக் காட்டுவதற்குக் காரணம், மாணவர்களுடைய இடைநிற்றல் ஏறத்தாழ 0.75 சதவிகிதம் என்ற அளவில்தான் இருக்கிறது. அதுவும் இருக்கக் கூடாது என்பதுதான் எங்களுடைய கொள்கை. இடைநிற்றலைக் குறைப்பதற்கான முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டோம். ஆனால், பல்வேறு

2021 ஆகஸ்ட் 26] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டபோதும், கொரோனா நோய்த் தொற்று வந்ததன் காரணமாக எட்டு மாத காலத்திற்கு பள்ளிகளைத் திறக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இன்றுவரை அதே நிலைதான் இருக்கிறது. இடைநிற்றலைக் குறைப்பதற்கான திட்டங்களை நாம் வடிவமைக்கின்றபோது, அந்த நிலையில் சில தடுமாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்திலே கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். மனித நேயமிக்க தலைவியான புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு 45,71,675 மடிக்கணினிகள் வழங்கிய வரலாறு தமிழ்நாட்டில் மட்டும்தான் நடைபெற்றிருக்கிறதே தவிர, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவில் வேறு எந்த மண்ணிலும் இல்லை என்பதையும் நான் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

அதைப்போலத்தான், மிதிவண்டிகள். கிராமங்களில் பள்ளிகளுக்கு நடந்து செல்கின்ற மாணவர்களுக்கு மிதிவண்டிகள் இல்லை என்ற வரலாற்றை மாற்றிக் காட்டி மிதிவண்டிகள் வழங்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 59,60,287 மாணவர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் நான் கோடிட்டுக் காட்டுவதற்கு காரணம், 14 கல்வி உபகரணம் பொருட்களை வழங்கினால் மட்டும் போதாது என்ற முறையிலேதான் தொழில்நுட்பத்தை மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தப் பணிகளைச் சிறந்த முறையிலே அம்மா அவர்கள் செய்து காட்டினார்கள். அதோடுமட்டுமல்ல, இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத நிலையில், தமிழ்நாட்டில் 514 கோடி ரூபாயில் புதிதாக Hi–tech Laboratories 6029 உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளிலே உருவாக்கப்பட்டு, வரலாறு படைக்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் நான் எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், வளர்ந்து வருகிற நமது மாநிலம், தமிழ்நாடு இந்தியாவிற்கே ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இந்தப் பணிகளை விரைந்து முடிக்க நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதற்கான நிதிகளை அப்போது வழங்கினார்கள். அன்றைக்கு ஆட்சியில் இருக்கின்றபோது இத்திட்டத்திற்கென நாங்கள் வழங்கிய நிதி ரூ.34,181,73,00,000. மாணவர்களின் எதிர்காலத்தை மனதிலேகொண்டுதான் அந்தளவிற்கு நிதியை வழங்கி இந்தப் பணிகளை நாங்கள் நிறைவேற்றினோம் என்பதை

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [*2021 ஆகஸ்ட் 26*

நான் இந்த நேரத்திலே கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, மாணவர்களுடைய வளர்ச்சிக்காக இருபுறங்களிலும் போட்டி போட்டுக்கொண்டு அரும் பணியாற்றிக்கொண்டிருக்கிற அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை நான் முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், அரசு என்ன பணிகளைச் செய்ய வேண்டுமோ, அந்தப் பணிகளைச் சீரோடும், சிறப்போடும் செய்து வருகிறது.

குறிப்பாக, கிராமங்களிலே இருக்கின்ற பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்களுடைய எண்ணிக்கை குறைந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம். அந்த நிலையை மாற்றுவதற்கான திட்டங்களை நாங்கள் நிறைவேற்றினோம். இரு ஆசிரியர்கள் மட்டும் பணிபுரியும் பள்ளிகள் இருக்கின்றன. இரு ஆசிரியர்கள் இருக்கும் பள்ளியில் ஓர் ஆசிரியர் மகப்பேறு விடுப்பில் சென்றுவிட்டால், ஓராண்டு காலத்திற்கு நீங்கள் போட்டிருக்கின்ற சட்டத்தின் அடிப்படையில் அங்கே விடுப்பாகத்தான் கருதப்படுமே தவிர, அது காலிப் பணியிடமாக கணக்கில் வராது. அப்படியிருக்கின்றபொழுது deputation–ல் பணியாற்ற ஆணையிடப்பட்டவர் அங்கே பணிபுரியச் செல்வதில்லை. இதையெல்லாம் கருத்தில்கொண்டு அரசு பணியாற்றுகிறபோதுதான் மாணவர்களுடைய எதிர்காலத்தை சிறந்த முறையில் எடுத்துச் செல்ல முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தனியார் பள்ளியிலே ஒரு வகுப்பிற்கு ஒரு ஆசிரியர் இருக்கிறார். ஆனால் அரசுப் பள்ளிகளில் 5 வகுப்புகளுக்குச் சேர்த்து 2 ஆசிரியர்கள்தான் இருக்கின்ற நிலை தமிழ்நாட்டிலே இருக்கிறது. ஒரு வளாகத்திற்குள்ளே இருக்கின்ற பள்ளிகளுக்கு நடுநிலைப் பள்ளி ஆசிரியர் தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டும் அல்லது உயர்நிலைப் பள்ளி அங்கே இருந்தால் அங்குள்ள ஆசிரியர் தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்ற ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 2019 ஆம் ஆண்டு அரசாணை எண் 202 பிறப்பிக்கப்பட்டது; நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், ஓர் அரசு என்னென்ன கடமைகளைச் செய்ய வேண்டுமோ, அந்தந்த கடமைகளைச் சீரோடும், சிறப்போடும் செய்துகாட்டியது.

கிராமங்களில் படிக்கின்ற மாணவர்களுடைய எதிர்காலம் எப்படி இருக்கிறது என்பதற்கும், தனியார் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களின் எதிர்காலம் எப்படி இருக்கிறது

2021 ஆகஸ்ட் 26] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

என்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. தனியார் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் பெற்றோரின் நேரடிப் பார்வையில் இருக்கிறார்கள். ஆனால் கிராமங்களில் வாழும் மாணவர்களுடைய பெற்றோர் எங்கோ வேலைக்குச் சென்றுவிடுகிறார்கள். வேறு மாநிலத்திற்கோ, வேறு மாவட்டத்திற்கோ சென்று பணியாற்றுகிறபோது, முதியோர்களிடத்தில் விட்டுவிட்டுச் செல்கிறார்கள். மாணவர்களைக் கண்காணிக்க முடியாத சூழ்நிலையில் அந்த மாணவர்கள் எப்படி எதிர்காலத்தை நோக்கிச் செல்வது, எதிர்காலத்திற்கான திட்டங்களை எப்படி நிறைவேற்றுவது என்பதில் ஒரு கடினமான சூழ்நிலை இருக்கின்ற காரணத்தின் அடிப்படையில்தான் நாங்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு அனைத்தையும் ஒருங்கிணைத்தோம். +2 படிக்கின்ற மாணவர்களுக்கு அங்கே மேல்நிலைப் பள்ளி இருக்குமேயானால் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். ஒரு வளாகத்திற்குள்ளே தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகள் அமைந்திருக்கும் நேர்வுகளில் அந்தந்த தலைமை ஆசிரியர்கள் தங்கள் பொறுப்பு முடிந்தவுடனே சென்றுவிடுகிற நிலை இருந்ததை மனதிலே கொண்டுதான் ஒருங்கிணைப்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. இதற்காக குழு அமைக்கப்பட்டது மட்டுமல்ல; சிறந்த I.A.S. அதிகாரிகளை வைத்துக்கொண்டு எந்த முறையிலே பணியாற்றலாம் என்பதை ஆராய்ந்து, காலிப் பணியிடங்களுக்கு உரிய ஏற்பாடுகள் செய்து, எப்படி மாணவர்களுக்கு அந்தப் பாடத்தை எடுத்துச் செல்லலாம் என்பதற்கெல்லாம் தகுந்த நிலையை நாங்கள் உருவாக்கிக் காட்டினோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். புள்ளிவிவரங்களின்படி *31* பள்ளிகளிலே ஒரு மாணவர்கூட கிடையாது. ஏறத்தாழ *1,255* பள்ளிகளிலே பத்துக்கும் கீழ்தான் மாணவர்கள் இருந்திருக்கிறார்கள். ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் *10* கிலோ மீட்டருக்கு ஓர் ஆரம்பப் பள்ளிதான் இருக்கிறது. பள்ளிக்குச் செல்வதற்கு மாணவர்களுக்குத் தேவையான போக்குவரத்து வசதிக்கான நிதியை வழங்கிவிடுகிறார்கள். ஒவ்வோர் பள்ளியிலும் ஒரு வகுப்பிற்கு ஓர் ஆசிரியர் இருக்கின்ற நிலை அங்கே இருக்கிறது. அதுபோன்ற ஒரு நிலை வருகின்றபோதுதான் தமிழ்நாட்டிலே இருக்கின்ற நிலையும் மாற்றப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், இரு ஆசிரியர்கள் உள்ள பள்ளியில், ஓர் ஆசிரியர் விடுப்பில் சென்றுவிட்டால் மற்றோர் ஆசிரியரால் பள்ளியை நடத்த இயலாது.

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [*2021 ஆகஸ்ட் 26*

ஆகவே, இந்தச் சூழ்நிலையில் சிறந்த முறையில் பணியாற்ற வேண்டும் என்பதற்காகத்தான், அந்த வளாகத்தில் மேல்நிலைப் பள்ளி இருக்குமேயானால், மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் அதற்குப் பொறுப்பேற்று, இங்கே ஆசிரியர் விடுப்பில் சென்றுவிட்டால் அதற்காக deputation என்ற முறையில் அங்கே இருக்கிற ஆசிரியரைப் போட்டு அந்தப் பணிகளை மேற்கொண்டார். உயர்நிலைப் பள்ளி இருக்குமேயானால், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் அந்தப் பணிகளை மேற்கொண்டார்கள். அதற்கான ஆணைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அடித்தட்டில் இருக்கின்ற மாணவனுடைய எதிர்காலத்தினை மனதிலே கொண்டு, கல்வித் திறனை மேம்படுத்த வேண்டுமென்றால், தொடக்கப் பள்ளியிலேயே அதைக் கொண்டுவர வேண்டும் என்பதற்காக இதைச் சொல்கிறேன். அதற்கான பணிகளை நாங்கள் சிறப்பான முறையிலே ஆற்றுவதற்கு கால அவகாசம் அன்றைக்கு இல்லை. ஏனென்றால் இரண்டாண்டு காலத்திற்குப் பிறகு மீண்டும் கொரோனா என்ற நோய்த் தொற்று வந்த காரணத்தினால், எந்தப் பணிகளையும் எங்களால் ஆற்ற முடியவில்லை. நாங்கள் மாணவர்களின் கல்வி பற்றி சிந்தித்து Kalvi TV Channel என்ற TV Channel–ஐ உருவாக்கினோம். இந்தியாவிலேயே முதல்முறையாக தமிழ்நாட்டில் கல்விக்காக Kalvi TV Channel–ஐ உருவாக்கிய பெருமை அம்மாவின் அரசைச் சேரும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

கொரோனா பரவலுக்குப் பிறகு மாணவர்கள் வீட்டிலிருந்தே கல்வி கற்க வழிவகை செய்தபோது ஒரு கைபேசி வைத்திருக்கின்ற பெற்றோர்கள் எங்கள் வீட்டில் இரண்டு மாணவர்கள் இருந்தால் அவர்கள் எப்படி கல்வி கற்க முடியும் என்று கேட்டபோதுதான், கல்வி தொலைக்காட்சி என்ற ஒரு தொலைக்காட்சியை அண்ணா நூலகத்திலே நாங்கள் ஆரம்பித்தோம். அண்ணா நூலகத்தில் ஒரு வரலாறு படைக்கப்பட்டிருக்கின்றது. நான் பள்ளிக் கல்வித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, முதன்முதலில் நான் அங்கே சென்று 8 மாடிக் கட்டடத்தில் வைக்கப்பட்டிருக்கின்ற ஏடுகளைப் பார்த்தபோது வியந்து போனேன். அத்தனை ஏடுகள் உலகத்திலே வேறு எங்கும் இருக்க முடியாது. அப்படிப்பட்ட சிறந்த நூலகத்தை நாங்கள் பார்த்ததற்குப் பிறகு அங்கேதான் கல்விச் சேனலைக் கொண்டுவர வேண்டும் என்று நாங்கள் முயற்சிகளை மேற்கொண்டோம். அதேபோல, Civil Service மாணவர்கள்

2021 ஆகஸ்ட் 26] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

தங்களுடைய எதிர்காலத்தை நோக்கிச் செல்வதற்கான பணிகளையும் நாங்கள் மேற்கொண்டோம். நிதி நெருக்கடியின் காரணமாக ஓரளவிற்குத்தான் எங்களால் அந்தப் பணிகளை நிறைவேற்ற முடிந்ததே தவிர, வேறு ஒன்றும் செய்ய இயலவில்லை என்பதையும் நான் இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன். ஒவ்வொரு நிலையிலும் மேற்கொள்ள வேண்டிய முக்கிய நடவடிக்கைகளை அரசு கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தது குறிப்பாக, மாணவர்களுடைய எதிர்காலத்தை மனதிலே கொண்டு, மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு e–Library ஆரம்பிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டது.

குறிப்பாக, எங்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு யாழ்ப்பாணத்தில் விடுதலைப் போராளிகளின் போராட்டத்தின்போது அங்குள்ள நூலகம் தீயிட்டு கொளுத்தப்பட்டது. அப்போது தமிழ்மீது அக்கறை கொண்டிருக்கிற அரசு என்ற முறையில் யாழ்ப்பாணத்தில் இருக்கின்ற நூலகத்திற்காக 1 இலட்சம் சிறந்த நூல்கள் வழங்கப்பட்டன; அந்தப் பெருமை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசைச் சாரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, உலகமெங்கும் தமிழர்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ, அங்கெல்லாம் உள்ள நூலகங்களுக்கு அனுப்ப வேண்டுமென்று சிங்கப்பூர், மலேசியா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கும் வழங்கப்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் நான் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், என்றும் மக்களுடைய நிலைகளைப் புரிந்துகொண்டு சிறந்த முறையில் பணியாற்றுகிற அரசாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு சிறந்து விளங்கிக் கொண்டிருந்தது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுடைய அரசு அன்றைக்கு பொறுப்பேற்ற காலத்தில், சட்டமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக தற்போது இருக்கின்ற மாண்புமிகு திரு. எடப்பாடி பழனிசாமி அவர்கள் சிறந்த முறையில் அந்தப் பணிகளை ஆற்றினார்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். *(மணியடிக்கப்பெற்றது.)*

ஓர் அரசு சிறந்த முறையில் செயலாற்றுவதற்கு, சிறந்த மாணவர்களை தமிழ்நாடு அரசுப் பள்ளிகளிலே உருவாக்குவதற்கு, . . .

[*2021 ஆகஸ்ட் 26*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் உரையாற்ற ஆரம்பித்து 10 நிமிடங்கள் ஆகிவிட்டன. இதை நான் உங்களுடைய தகவலுக்காகச் சொல்கிறேன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: ஒன்றும் பிரச்சினை இல்லை. நாங்கள் உங்களை disturb செய்யவே மாட்டோம். நான் general ஆகத்தான் பேசுகிறேன். இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நான் உங்களை disturb செய்யவில்லை. தகவலுக்காக மட்டும் சொல்கிறேன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: இந்த மாமன்றத்தில் இருக்கின்ற அத்தனை பேருக்கும் என்னைத் தெரியும். எனக்கு வாக்களித்து 9 முறை சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெறச் செய்திருக்கிற எனது தொகுதி வாக்காளப் பெருமக்களின் சார்பில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதைத் தெரிந்து அதற்கேற்றாற்போல்தான் இந்தச் சட்டமன்றத்தில் நடந்துகொள்கிறேன் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் அரசு எந்தெந்தப் பணிகளை ஆற்ற வேண்டுமோ அந்தப் பணிகளை சிறந்த முறையில் ஆற்றியது. இன்றைக்கு இருக்கிற அரசும் அதைத்தான் எடுத்துச்செல்கிறது என்பதை என்னால் காண முடிகிறது. குறிப்பாக, இந்தச் சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில்—நான் பல வரலாறுகளைப் பார்த்திருக்கிறேன்—தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய சட்டமன்றம் உண்மையிலேயே கண்ணியத்தோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதைக் காணும்போது, உண்மையிலேயே எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. ஏனென்றால், குறிப்பாக, ஒருவருக்கொருவர் கலந்துரையாடுகிறோம். ஒருவருக்கொருவர் உரையாடுகிறபோது அதற்கான பதில்கள் தெரிவிக்கப்படுகின்றன. இந்த நிலையில் உண்மையிலேயே பேரவைத் தலைவராக இருக்கிற நீங்களும் நல்ல முறையில் வழிநடத்திச் செல்கின்ற காட்சியை என்னால் காண முடிகிறது. ஆகவே, எங்களைப் பொறுத்தவரையில், ஓர் அரசு ஆற்ற வேண்டிய பணிகளை சிறப்பான முறையில் நாங்கள் ஆற்றியிருக்கிறோம். உங்கள் ஆட்சிக் காலத்தில் அதை எப்படி வடிவமைக்க வேண்டும் என்பதைச் சிந்தித்துச் செயலாக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

2021 ஆகஸ்ட் 26] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

முற்பகல் 10–40

ஏனென்றால் Hi–tech Laboratory ஆக இருந்தாலும் சரி, கல்விச் சேனலாக இருந்தாலும் சரி, இன்றைக்கு 12 இலட்சம் பேர் தமிழ்நாட்டில் அரசுப் பணிகளிலே இருக்கிறார்கள். அதில் ஆசிரிய பணியிடங்களில் மட்டும் 3 இலட்சம் பேர் இருக்கிறார்கள். ஆசிரியர் அல்லாதோர் பணியிடங்களில் 72 ஆயிரம் பேர் இத்துறையில் இருக்கிறார்கள். ஏறத்தாழ 3 இலட்சத்து 72 ஆயிரம் பேரைத் தாங்கிக் கொண்டிருக்கிற பள்ளிக் கல்வித் துறை சிறந்த முறையிலே, அடித்தட்டு மாணவர்களுடைய எதிர்காலத்தை மனதிலே கொண்டு, கல்வி ஒன்றால் மட்டும்தான் பொருளாதாரத்தை உயர்த்த முடியும் என்கிற வரலாற்றை தமிழகத்திலே படைக்கின்ற அளவுக்கு செயல்பட வேண்டும். நீங்கள் வாருங்கள், அதை நிறைவேற்றிக் காட்டுங்கள்; எங்களைப் பொறுத்தவரையில், இருமொழிக் கொள்கையாக இருந்தாலும் சரி, NEET தேர்வாக இருந்தாலும் சரி, நல்ல பணிகளை நீங்கள் ஆற்றுகிறபோது எதிர்க்கட்சியைப் பொறுத்தவரையிலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் நாங்கள் உறுதுணையாக நிற்போம், நிற்போம் என்பதைச் சொல்லி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள் சிறப்பாகப் பேசி, எல்லோரையும் பாராட்டியிருக்கின்றார்கள், நன்றி. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. வெற்றிஅழகன் அவர்கள்.

***திரு. அ. வெற்றிஅழகன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுப் பெருமைவாய்ந்த இச்சட்டமன்றத்தின் 100 ஆவது ஆண்டில் எனது முதல் தொடக்க உரையைப் பேச வாய்ப்பளித்ததற்கு மிக்க நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் இயக்கத்தின் ஈடற்ற தலைவர், தமிழகத்தின் இணையற்ற முதல்வர், எடுத்த காரியம் யாவினும் வெற்றி கண்டு முந்துபவர், இந்திய மாநில முதல்வர்களுக்கு முன்னவர், இந்தியா ஒன்றிய அரசுதான் என்று சொன்னவர், எப்போதும் உரிமைக்குப் போராடும் தென்னவர், இலட்சோப இலட்ச மக்களின் இதயங்களில் வாழும் மன்னவர், 'கங்கைகொண்டான்', 'காவேரி கொண்டான்' என்பதுபோல், 'கொரோனா வென்றார்' என்று மக்களால் கொண்டாடப்படுபவர், (மேசையைத் தட்டும் ஒலி) அயராத உழைப்பின் அரசர், அருந்தமிழருக்கு முதல்வர். தந்தை

[திரு. அ. வெற்றிஅழகன்] [2021 ஆகஸ்ட் 26

பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் தாத்தா, பேராசிரியர் தாத்தா மற்றும் என் பாட்டி திருமதி வெற்றிச்செல்வி ஆகியோர் வழியில் திராவிட இயக்கத் தத்துவத்தைத் தாங்கிப் பிடிக்கும் கோடிக்கணக்கான வேர்களில் நானும் ஒருவன். அவர்கள் அனைவரையும் வணங்கி இத்தருணத்தில் நினைவுகூர்கிறேன். அவர்கள் அனைவரும் படங்களல்ல, பாடங்கள்.

பேராசிரியர் தாத்தாவோடு அரசியல் நிகழ்வுகளில் பங்குபெறுவதென்றாலும், பேரறிஞர் அண்ணாவின் கட்டளைக்கிணங்க எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு கைதாவதானாலும், சிறிதும் அஞ்சாமல் களத்தில் முதல் ஆளாக நின்றவர் எனது பாட்டி திருமதி வெற்றிச்செல்வி அம்மையார் அவர்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், நாடு போற்றிய பண்டித நேரு அவர்கள் சென்னைக்கு 1958 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் வந்தபொழுது அவருக்கு கருப்புக் கொடி காட்ட வேண்டுமென்று கழகம் முடிவெடுத்தபோது, அன்றைய அரசு அனைத்துத் தலைவர்களையும் கைது செய்தது. ஆனால், வெற்றிச்செல்வி பாட்டியும், திருமதி அலமேலு அப்பாதுரையும் சேர்ந்து சுமார் 50 மகளிரைத் திரட்டி, காவல் துறைக்குத் தெரிவிக்காமல் தனித் தனியாக விமான நிலையத்தை அடைந்து, பண்டித நேரு அவர்கள் விமான நிலையத்தைவிட்டு வெளியில் வந்த நேரத்தில், பாட்டியின் தலைமையில் கருப்புக் கொடி காட்டி, கழகத்தின் எதிர்ப்பைப் பதிவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) அதைக் கண்டு பண்டித நேருவே அதிர்ந்தார். பாட்டியின் அரசியல் வாழ்வைப் பற்றி சமீபத்தில் மூத்த பத்திரிகையாளர் திரு. ஏ.எஸ். பன்னீர்செல்வம் எழுதி வெளியிட்ட, 'Karunanidhi: A Life' என்ற ஆங்கில நூலில் பக்கம் 118–ல் இந்த நிகழ்வை விவரித்துள்ளார்.

கழகத் தலைவரின் பேச்சாக, பெருந்தகை பேராசிரியரின் செயலாக, எதிரிகளின் சூழ்ச்சியை வென்றிடும் உதயசூரியனாக வலம் வந்த இளைஞரணி தளபதி, எனது பள்ளிக் கால நண்பர், தேர்தல் பரப்புரையின்போது, 'எனது வெற்றியைவிட, எனது சகோதரர் வெற்றியின் வெற்றியே எனக்கு முக்கியம்' என்று முழங்கிய சகோதரர், கழக இளைஞரணிச் செயலாளர், அண்ணன் உதயநிதி (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் முழக்கத்தை மறக்க இயலாது. 'செங்கல் நாயகர்'–க்கு எனது மனமார்ந்த நன்றிகள். (மேசையைத் தட்டும் ஒலி)

2021 ஆகஸ்ட் 26] [திரு. அ. வெற்றிஅழகன்]

என்மீது அன்பும் பாசமும் கொண்ட தலைவர் அவர்கள், வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடப் பணித்தார்கள். அவ்வாய்ப்பை வழங்கியமைக்கு என் சார்பிலும், என் தந்தை அன்புசெல்வனார் அவர்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வாய்ப்பை அளித்ததோடு நில்லாமல், சென்னை கிழக்கு மாவட்டத்தின் செயலாளர், இன்றைய மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடம் என்னை ஒப்படைத்தார்கள். அன்றே எனது வெற்றி உறுதி செய்யப்பட்டுவிட்டது. தனது துறைமுகம் தொகுதி மட்டுமல்லாமல், தலைவரின் கொளத்தூர் தொகுதியோடு சேர்த்து, எனது வெற்றிக்காக, அவர் பம்பரமாகச் சுழன்றதை கண்கூடாகக் காணும் அரிய வாய்ப்பைப் பெற்றேன். மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர், (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் மாவட்டச் செயலாளர் அவர்களுக்கு பணிவான வணக்கங்களும், நன்றிகளும்.

முற்பகல் 10–45

அண்ணாவின் குரலாக, கலைஞரின் ஆற்றலாக சுழன்று அடிக்கும் சூறாவளிபோல் 234 தொகுதிகளிலும் அனல் பறக்கும் பிரச்சாரம் செய்த என் தலைவர், என் தொகுதிக்கு ஒரு முறை அல்ல, இரு முறை வந்து, எனது வெற்றியை உறுதி செய்த தலைவர், 'வெற்றியின் வெற்றி, எனது வெற்றி' என்று அவர் உரைத்தது கழகத்தவரிடமும், பொது மக்களிடமும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர், என்மீது கொண்டுள்ள நட்பின் ஆழம், அவர் ஆற்றிய உரையின்மூலம் தெரிந்தது. அவரது பேச்சைக் கேட்ட பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் ஆரவாரித்தது என்றும் நினைவில் மறக்க இயலாது. தலைவர் அவர்களுக்குச் சிரம் தாழ்ந்த நன்றிகள்.

எனது வெற்றிக்காக உழைத்தது மட்டுமல்லாமல், தெருமுனைப் பிரச்சாரத்திற்கும் நேரம் ஒதுக்கி, எனது வெற்றிக்கு உறுதுணையாக இருந்த மத்திய சென்னையின் மக்களவை உறுப்பினர் திரு. தயாநிதி மாறன் அண்ணன் அவர்களுக்கும், எனது பணிவான நன்றிகள். எனக்காகப் பரப்புரையில் ஈடுபட்ட எனது மூத்த சகோதரி மக்களவை உறுப்பினர் திருமதி கனிமொழி அவர்களுக்கும் சிறப்பான நன்றிகள்.

[திரு. அ. வெற்றிஅழகன்] [*2021 ஆகஸ்ட் 26*

எனது பெற்றோர், வாழ்க்கைத் துணை நலம் மற்றும் குடும்பத்தினர், நண்பர்கள், பேராசிரியர் தாத்தாவின் தம்பி ஆனந்தன் மற்றும் பேராசிரியர் தாத்தாவின் அன்புக்குரியவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

புரசை பெரியவர் திரு. சடகோபனாரின் வழிவந்த திரு. சேரன் அவர்களுக்கும் என்னுடைய நன்றிகள். திரு. சேரன், பேராசிரியர் பெருந்தகையின் தேர்தல் வேலைகளைக் கவனித்ததுபோல், எனது வெற்றிக்கும் அரும்பாடுபட்டார். அவருக்கு எனது மனமார்ந்த நன்றிகள். இப்பெருமைமிக்க அவையில் பேராசிரியர் தாத்தா அவர்கள், தமிழகத்தின் பிற இயக்கங்களைச் சேர்ந்த மூத்த அரசியல்வாதிகளான திரு. ராஜாஜி, திரு. காமராஜர், தீரர் சத்தியமூர்த்தி, திரு. சி. சுப்பிரமணியன், பொதுவுடைமை இயக்கத்தைச் சார்ந்த திரு. வி. ராமமூர்த்தி, திரு. ப. ஜீவானந்தம், திரு. சங்கரய்யா போன்றோர் பங்கு பெற்ற அவையில், திராவிட இயக்கக் கருத்துகளைப் பதிவிட்டவர். கலைஞர் தாத்தா மற்றும் பேராசிரியர் தாத்தா போன்ற ஆளுமைகளுடன் பழகிய அவையின் முன்னவர், கழகத்தின் பொதுச் செயலாளர், மரியாதைக்குரிய நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது வணக்கத்தையும், நன்றியையும் உரித்தாக்குகிறேன். ஏனைய மூத்த அமைச்சர்களுக்கும், பிற அமைச்சர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், ஏனைய கட்சிகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கும், மாண்புமிகு சட்டப் பேரவையின் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டப் பேரவையின் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அரசுக் கொறடா முனைவர் அவர்களுக்கும், சட்டமன்றத்தின் செயலாளர் மற்றும் அலுவலர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

சைதையில் பனகல் மாளிகை, தி. நகரில் பெரியார் மாளிகை, கோட்டையில் நாமக்கல் கவிஞர் மாளிகை, எழும்பூரில் தாளமுத்து–நடராஜன் மாளிகை, அண்ணா சாலையில் அண்ணா மேம்பாலம், சைதையில் கலைஞர் பொன்விழா வளைவு என பெயர் சூட்டி பெருமை சேர்த்தது கழக அரசு. அவ்வாறே பெருந்தகை பேராசிரியர் அவர்களின் பெயரை நந்தனத்தில் இயங்கும் ஒருங்கிணைந்த நிதித் துறை வளாகத்திற்கு *(மேசையைத் தட்டும் ஒலி)* முதல்வரின் வழிகாட்டுதலின்படி பெயர் சூட்டிய பாசமிகு அண்ணன், சகோதரர் நிதித் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது சிறப்பான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2021 ஆகஸ்ட் 26] [திரு. அ. வெற்றிஅழகன்]

மேலும் எனது வெற்றிக்காக அரும்பாடுபட்ட கூட்டணிக் கட்சித் தலைவர்களான அண்ணன் திரு. கே.எஸ். அழகிரி, அண்ணன் திரு. வைகோ, அண்ணன் திரு. திருமாவளவன், பொதுவுடைமை இயக்கத் தலைவர்கள் திரு. முத்தரசன் அண்ணன், திரு. ராமகிருஷ்ணன் அண்ணன், திரு. வேல்முருகன் அண்ணன், திரு. ஈஸ்வரன் அண்ணன், த.ம.மு.க. தலைவர் முனைவர் ஜவாஹிருல்லா, திரு. ஷேக் முகைதீன் மற்றும் இன்னும் பிற தலைவர்களுக்கும், அவர்களின் கட்சித் தொண்டர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) காங்கிரசுக்கும் என்னுடைய பணிவான நன்றிகள்.

இப்பெருமை வாய்ந்த சட்டமன்றத்தில் என்னை அமர்த்த அரும்பாடுபட்ட பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், பல்வேறு அணிகளின் தோழர்கள், கழக ஆதரவாளர்கள், முன்னணியினர் மற்றும் வாக்களித்த வாக்காள பெருமக்களுக்கும் என்றும் நன்றிகள் உரித்தாகும்.

பேராசிரியர் அவர்கள் 42 ஆண்டுகள், கழகத்தின் பொதுச் செயலாளராக, சட்டமன்ற உறுப்பினராக, மேலவையின் உறுப்பினராக, பாராளுமன்ற உறுப்பினராக, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக, கல்வி அமைச்சராக, அவை முன்னவராக, எதிர்க்கட்சித் தலைவராக, நிதியமைச்சராக மக்கள் தொண்டாற்றியவர். சட்டமன்றம் நடைபெறும் நாட்களில் அவர், காலையில் எழுந்தவுடன் குறிப்புகள் எடுத்து வைத்துக்கொள்வார். அவரது இருக்கையில் அமர்ந்து, தேர்வுக்குத் தயாராகும் மாணவர்கள்போல் குறிப்புகளைத் தயாரிப்பதைக் கண்டு வியந்தவன் நான். தமிழக கல்வித் துறைக்கு ஒரு திருப்புமுனையை ஏற்படுத்த, அன்பில் தாத்தாவின் பேரன் பாசமிகு நண்பர் அண்ணன் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் கல்வித் துறை அமைச்சராகியுள்ளார். அவருக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அன்பில் அவர்களின் பேரனை, பேராசிரியர் தாத்தாவின் பேரன் வாழ்த்துவது மிகவும் பொருத்தமான ஒன்று. ஒரேயொரு செய்தியை மட்டும் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். 'அன்பில் அழைக்கிறார்' என்று தலைப்பிட்டு, 1956 ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற தி.மு.க. மாநில மாநாட்டுக்கு அறிஞர் அண்ணா அவர்கள் திராவிட நாடு இதழில் அழைப்பு விடுத்தார். அதே திருச்சியில், மீண்டும் 1990 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 9, 10 மற்றும் 11 ஆகிய நாட்களில் தி.மு.க.

[திரு. அ. வெற்றிஅழகன்] [2021 ஆகஸ்ட் 26

மாநில மாநாடு நடைபெற்றது. இப்படி, அடுத்தடுத்து முக்கிய நிகழ்வுகள் திருச்சியில் நடக்க ஐயா அன்பிலார் அவர்களும் ஒரு முக்கிய காரணமாவார். (குறுக்கீடு) வேகமாக முடித்துவிடுகிறேன்.

முற்பகல் 10–50

நான் பங்குபெற்ற பச்சையப்பன் அறக்கட்டளையைப் பற்றி ஒரு சில வரிகளை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பச்சையப்பன் அறக்கட்டளை 1846 ஆம் ஆண்டு, பச்சையப்பன் பள்ளி என்று தொடங்கப்பட்டது. 1857 ஆம் ஆண்டு கல்லூரியாக உருவாகியது. இந்த பச்சையப்பன் அறக்கட்டளை ஆசியாவிலேயே மிகவும் பழமைவாய்ந்த அறக்கட்டளையாகும். இக்கல்லூரியில் பயின்று பெயர் சொல்லும் பிள்ளைகளாக வலம் வந்தவர்களில் மிக முக்கியமானவர்கள் பேரறிஞர் அண்ணா, டாக்டர் நாவலர், கலைஞர் அவர்களின் மனசாட்சி அண்ணன் முரசொலி மாறன், ஈ.வி.கே. சம்பத் போன்றவர்கள் ஆவார்கள். இந்த பச்சையப்பன் அறக்கட்டளை நிறுவனத்திற்கு சென்னை பல்கலைக்கழகம் Senate உறுப்பினராக என்னைத் தேர்ந்தெடுத்து, அதில் நிதி அறங்காவலராகத் தொடர்ந்து மூன்றாண்டுகள் தொண்டாற்றினேன். தமிழகத்தின் தலைசிறந்த பச்சையப்பன் அறக்கட்டளையில் பணியாற்றுவதற்கு அரும்பெரும் வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு என் சிரந்தாழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த பச்சையப்பன் கல்லூரியில் புகழ்பெற்ற பச்சையப்பன் கல்வி நிலையங்களை உள்ளடக்கிய பல்கலைக்கழகம் ஒன்றை ஏற்படுத்திட மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களை வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி மானியக் கோரிக்கை. நமது அரசு அமைந்ததிலிருந்து அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கை அதிகமாகியுள்ளது என்பது, நம்முடைய அரசின்மீது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு ஒரு சான்றாகும். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாநிலத்தின் கல்வி வளர்ச்சி மற்றும் எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்ப, தமிழகத்திற்கு என்று தனித்துவமான கல்விக் கொள்கையை வகுக்க கல்வியாளர்கள் மற்றும் வல்லுநர்களைக் கொண்ட குழு அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளதை நான் வரவேற்கிறேன். இது காலத்தின் தேவையை அறிந்து எடுக்கப்பட்ட சீரிய நடவடிக்கையாகும்.

2021 ஆகஸ்ட் 26] [திரு. அ. வெற்றிஅழகன்]

2014–2015 ஆம் ஆண்டு அ.இ.அ.தி.மு.க. அரசின் நிதிநிலை அறிக்கையில், கல்விக்காக ரூ.17,731.71 கோடி ஒதுக்கப்பட்டது. கடுமையான நிதிச் சூழலிலும், நமது அரசால் இந்த ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் கல்விக்காக சுமார் ரூ.32,599.54 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கல்விக்கு முன்னுரிமை தரும் அரசு என்பதை விளக்கவே இவ்வொப்பீடு. பள்ளிகளில் இடைநிற்றலைக் குறைக்கும் வகையில், இம்மாபெரும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2019–2020 ஆம் ஆண்டில், 0.75 சதவிகிதமாக இருந்த இடைநிற்றல் சதவிகிதத்தை மேலும் குறைக்கும் வகையில் இவ்வரசின் செயல்பாடுகள் அமையும் என்று நான் நம்புகிறேன். அரசுப் பள்ளிகளில் 100 சதவிகித மாணவர் சேர்க்கையை உறுதிப்படுத்த இவ்வரசு உறுதிபூண்டுள்ளது.

கொரோனா காலத்தில் முழு ஊரடங்கு ஏற்பட்டு, சுமார் ஓராண்டாக பள்ளிகள் மூடப்பட்டு, இணையவழி பயிற்சிமூலம் நடைபெற்று வருகின்றது. அதற்கான அலைபேசி வசதிகள் அல்லது தேவையான இணைய வசதிகள் கிராமப்புற ஏழை, எளிய மாணவர்களிடம் இல்லை. ஆதலால், இனிவருங்காலங்களில் இம்மாதிரியான சூழ்நிலைகளில் மாணவச் செல்வங்களுக்கு அரசே இலவசமாக அலைபேசி மற்றும் பள்ளிகளில் சிறப்பான broadband வசதிகளை மேம்படுத்த வேண்டியது மிக அவசியம். மேலும், தமிழகத்தில் நடைபெற்றுவரும் கல்வி தொலைக்காட்சி நிகழ்ச்சியின் தரத்தை மேம்படுத்துதல் வேண்டும். Information and Communication Technology பற்றிய ஒரு quick பதிவு. Worldwide research has shown that ICT can lead to an improved students learning and better teaching methods. A report made by the National Institute of Multimedia Education in Japan, proved that an increase in the use of ICT in education with integrating technology to the curriculum has a significant and positive impact on students' achievements. The results specifically showed that the students who are continuously exposed to technology through education, have better knowledge, presentation skills, innovative capabilities, and are ready to take more efforts into learning as compared to their counterparts. Information and Communication technology–ஐ பள்ளிக் கல்வித் துறை கூடுமானவரை பயன்படுத்த வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. அ. வெற்றிஅழகன்] [2021 ஆகஸ்ட் 26

முற்பகல் 10–55

அடுத்து, பொது நூலகத் துறை. முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் பெயரால் மதுரையில் நூலகம் கட்டப்படும் என்ற இனிப்பான செய்தியுடன் இந்த ஆட்சி ஆரம்பமாகியுள்ளது. நூலகப் பராமரிப்பு மற்றும் படிப்பதற்கான நல்ல சூழலையும் நமது அரசு உருவாக்கிட வேண்டும். அதன் முதல் படியாக எல்லா நூலகங்களிலும், பள்ளிகளிலும் online digital library நிறுவிட வேண்டும். Moral classes வகுப்பில் சுற்றுச்சூழல், global warming பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டும். அதே வகுப்புகளில் மன நல ஆலோசனைகளையும் வழங்க வேண்டும். பள்ளிகளில் இயங்கும் சாரண, சாரணியர் இயக்கம் வலுவாகச் சீரமைக்கப்பட வேண்டும். அரசாங்கப் பள்ளிகளில் மற்றும் அரசு உதவியுடன் இயங்கும் தனியார் பள்ளிகளில் உட்கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட வேண்டும். Net Enrolment Ratio மற்றும் school students versus teachers விகிதாச்சாரங்கள் நல்ல நிலைமையை அடையும் வகையில், பள்ளிக் கல்வித் துறை இயங்கிட வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், ஒன்றுமில்லை தகவலுக்காக மணியடிக்கப்பெற்றது.

திரு. அ. வெற்றிஅழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 நிமிடங்களில் உரையை முடித்து விடுகிறேன். தமிழ்நாட்டிலுள்ள 120 கல்வி மாவட்டங்களில், தலா ஒரு பள்ளியை, Sainik பள்ளியைப் போன்று, ஓர் உண்டு, உறைவிட மாதிரிப் பள்ளியாக அமைக்க வேண்டும். எனது வில்லிவாக்கம் தொகுதி மக்களின் அத்தனை கோரிக்கைகளையும் நான் சொல்லவில்லை. ஒரு சில கோரிக்கைகளை மட்டும் நான் சொல்லிவிடுகிறேன். எனது வில்லிவாக்கம் தொகுதி மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, எனது தொகுதி சார்ந்த கோரிக்கைகளைத் தெரிவிக்க விழைகிறேன். தற்போது College of Liberal Arts and Sciences தனியார் துறையில்தான் இயங்கிக்கொண்டிருக்கிறது. அரசு சார்பில், எனது தொகுதியில் College of Liberal Arts and Sciences அமைத்துத் தரக் கோருகிறேன்.

இந்தியாவில் உள்ள பழமையான சென்னை கீழ்ப்பாக்கம் மன நல மருத்துவமனை, எனது வில்லிவாக்கம் தொகுதியில்

2021 ஆகஸ்ட் 26] [திரு. அ. வெற்றிஅழகன்]

உள்ளது. மன நல சிகிச்சை தேவைப்படுவோர் அதிகரித்து வரும் இவ்வேளையில், அதனை பெங்களூரில் இயங்கிவரும் National Institute of Mental Health & Neuro Sciences (NIMHANS)–க்கு இணையான வகையில் தரம் உயர்த்த வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். வில்லிவாக்கம் மற்றும் அண்ணா நகர் தொகுதிக்கு இடையே உள்ள peripheral hospital–ஐ தரமுயர்த்தி ஓர் உயர் பல்நோக்கு மருத்துவமனையாக, கட்டமைப்பை மேம்படுத்தி, அதனை ஒரு மருத்துவக் கல்லூரியாக இயங்கச் செய்ய மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மற்றும் உள்ள கோரிக்கைகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடத்தில் நான் சமர்ப்பிக்கின்றேன்.

Autistic children–மன நலம் குன்றிய குழந்தைகள் மற்றும் கற்றல் குறைபாடு, cerebral palsy மற்றும் இதர disabilities உள்ள குழந்தைகளுக்கு, தமிழகத்தில் உள்ள எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் ஒரு சிறப்புப் பள்ளியை அமைக்க வேண்டும். இதனை சீரிய முறையில் செயல்படுத்த துறையின் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் வேண்டுகோளாக வைக்கின்றேன்.

தந்தை பெரியார் இல்லை என்றாலும், பேரறிஞர் அண்ணா இல்லை என்றாலும், முத்தமிழறிஞர் கலைஞர் இல்லை என்றாலும், பெருந்தகை பேராசிரியர் இல்லை என்றாலும், அவர்களுடைய எண்ணங்கள் இந்த நாட்டில் நிலைத்திட, வெற்றிக்கொடி நாட்டிட, எங்கள் மாண்புமிகு முதல்வர் தளபதி இங்கே அமர்ந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் ஒரு பணிவான வேண்டுகோள். நீங்கள் எல்லோரும் அறிந்திருப்பீர்கள். English–ல் பேசுகிறபோது, தமிழ் என்ற வார்த்தையை பயன்படுத்தும்போது, உதாரணத்திற்கு I also know Tamil என்பார்கள். செம்மொழியான தமிழில் மிகச் சிறந்த எழுத்தான 'ழ'கரத்தை ஆங்கிலத்திலும் பயன்படுத்த வேண்டும். ஆங்கிலேயர் விட்டுச்சென்ற Tamil என்ற வாசகத்தை மாற்றி, Thamizh தமிழ் என்று அழைத்திட, மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் என் பணிவான வேண்டுகோளை, இந்த மாமன்றத்தில் சமர்ப்பிக்கின்றேன், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் சமர்ப்பிக்கின்றேன்.

[திரு. அ. வெற்றிஅழகன்] [*2021 ஆகஸ்ட் 26 முற்பகல் 11–00*

நிறைவாக, 2018 ஆகஸ்ட் மாதம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மறைவிற்குப் பிறகு, 2020 மார்ச் மாதம் பேராசிரியர் பெருந்தகையின் மறைவு வரையிலான அந்த இடைப்பட்ட காலத்தின் செய்தியைப் பதிவிட விரும்புகிறேன். இன்றைக்கு காலையில்கூட என்னுடைய அப்பாவிடம் நான் பேசிக்கொண்டிருந்தேன். அந்த இடைப்பட்ட காலத்தில் மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் என் இல்லத்திற்கு 40 முறை வந்திருப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சரியான கணக்கு தெரியவில்லை. 50 முறைகூட இருக்கலாம். 'பெரியப்பா' என்று அவர்கள் சொன்ன அந்த வார்த்தைக்கு இதுவே ஒரு சான்றாகும். இந்தப் பதிவை இந்த அவையில் நிறைவாகப் பதிவு செய்துவிட்டு, நீங்கள் அமர்ந்திருக்கக்கூடிய இந்த மாமன்றத்தில், இந்தச் சபையில் நானும் அமர்ந்திருக்க என்ன தவம் செய்தனை என்று சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

எனது தொகுதிக்குட்பட்ட குடிசைப்பகுதி மாற்று வாரிய அடுக்குமாடி குடியிருப்புகளில் தகுந்த பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளக் கோருகிறேன். வில்லிவாக்கம் தொகுதியில் மின்சாரக் கம்பிகளை பூமிக்கு அடியில் புதைக்கும் பணிகளைத் துரிதப்படுத்தக் கேட்டுக்கொள்கிறேன். எங்கள் தொகுதியிலுள்ள உட்சாலைகளைப் புதுப்பித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கீழ்ப்பாக்கம் நியூ ஆவடி ரோடு, அயன்புரம்–கொன்னூர் நெடுஞ்சாலை போன்ற இடங்களில் பாலங்கள் அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன். திருமங்கலம் ரோட்டில் உள்ள இரயில்வே கிராசிங்கிற்குப் பதிலாக சுரங்கப்பாதை அல்லது மேம்பாலம் அமைக்கக் கோருகிறேன். எனது வில்லிவாக்கம் தொகுதியில் ஆண்களுக்கென்று ஒன்றும், பெண்களுக்கென்று ஒன்றும் என இரண்டு மேல்நிலைப் பள்ளிகளைத் தொடங்கக் கேட்டுக்கொள்கிறேன். வறுமை, அறியாமை, ஏழ்மை ஆகியவற்றால் பாதிப்புக்கு உள்ளாகும் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்புவதை ஊக்குவிக்க அரசு பல சலுகைகளை அறிவிக்க வேண்டும். கற்பனைத் திறன், படைப்பாற்றல், ஆராய்ச்சி எண்ணம் கொண்டதாக பாடத்திட்டம் அமைத்து, வாரத்தில் ஒரு நாளாவது அறநெறி வகுப்பு நடத்த வேண்டும்.

2021 ஆகஸ்ட் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி அவர்கள்.*

***திரு. ஜெ. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் நவீன தமிழினத்தின் தந்தை தலைவர் கலைஞர் அவர்களையும், மறைந்த மாவீரன் எனது தந்தை பழக்கடை திரு. ஜெயராமன் அவர்களையும், மறைந்த எனது அண்ணன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் மாவட்டச் செயலாளருமான திரு. ஜெ. அன்பழகன் அவர்களையும் வணங்குகிறேன். பெருமையும் நீண்ட பெரும் வரலாறுகளும் உள்ள இந்தச் சபையில் எனது முதல் உரையைத் துவங்குவதில் பெருமையடைகிறேன். ஐயா கலைஞர் அவர்கள் கண்ட அந்தச் சமூக நீதிக் கனவை நிறைவேற்ற வாழ்நாள் முழுவதும் உழைப்பேன் என உறுதி கூறுகிறேன். இந்தப் பெரும் சபையில், என் முதல் குரல் ஒலிக்க வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், ஒரு பெரும் தலைவருக்கான எடுத்துக்காட்டாக அமைந்துள்ளார். ஒரு தலைவருக்கான இலக்கணம் என உலகக் கோட்பாடுகள் சிலவற்றைக் கூறுகின்றன. அப்பாவி மக்களை அன்போடு அரவணைக்கும் தாயுள்ளம் வேண்டும்; தவறு செய்யும்போது அதைக் கண்டிக்கும் மன வலிமை வேண்டும்; வீழ்ந்தாலும் எழுந்து நிற்கும் திறன் வேண்டும்; தகுந்த வேலைக்கான நபர்களைத் தேர்ந்தெடுத்து, பலமான கட்டமைப்பை உருவாக்கும் வல்லமை வேண்டும்; இவ்வனைத்தையும் ஒருங்கே கொண்டவரே நம்முடைய மாபெரும் தலைவர், தமிழக முதலமைச்சர் அவர்கள். எனது 25 ஆண்டு கால அரசியல் பயணத்தில், எனக்கு அரணாகவும், ஆசிரியராகவும், வழிகாட்டியாகவும் திகழும் எங்கள் தளபதி அவர்களுக்கு நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது எளிமையான பேச்சாற்றலால் மக்கள் மனங்களைக் கவர்ந்தவர். அவருக்கு நேர்ந்த அநீதியும், அதற்காக அவர் கையில் எடுத்த போராட்டங்களும் நாம் அனைவரும் அறிந்ததே! நீதி மறுக்கப்பட்டவர்களையும், வாய்ப்பு பறிக்கப்பட்டவர்களையும் திராவிடம் அழைத்து, உயர்த்தி அழகு பார்க்கும் என்பதற்கு நீங்களே சான்று. இப்பேரவையை

[திரு. ஜெ. கருணாநிதி] [*2021 ஆகஸ்ட் 26*

எச்சார்புமின்றி சமநிலையில் நடத்திவரும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர், கழகத்தின் இளைஞரணிச் செயலாளர், திரு, உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். அவர் எனது தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதிக்கு வருகை தந்து தேர்தல் பிரச்சாரம் செய்தார். அவரது எளிமையான குணமும், பேச்சும் கழகத் தோழர்களை மட்டுமல்ல, அனைத்துத் தரப்பு மக்களையும் ஈர்த்தது. அவரது பிரச்சார முறை மிகவும் புதுமையானதாக இருந்தது. அவர் இங்கே ஒரு செங்கல்லை வைத்து செய்த பரப்புரை பீகார் மாநிலத்தில் எதிரொலித்தது. குறுகிய தேர்தல் காலக்கட்டத்தில் எனக்காகத் தொகுதியில் பரப்புரை செய்து வெற்றிக்கு உறுதுணையாய் நின்ற திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு ஆதரவளித்த சென்னை தென்மேற்கு மாவட்ட பொறுப்பாளர் திரு. த. வேலு அவர்களுக்கும், கூட்டணி கட்சித் தலைவர்களுக்கும், தியாகராய நகர் பகுதிக் கழகச் செயலாளர் மற்றும் கழகத்தினுடைய வட்டச் செயலாளர் அவர்களுக்கும், எனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த தியாகராய நகர் தொகுதி மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

100 நாட்களைக் கடந்து நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆட்சி சென்று கொண்டிருக்கிறது. மக்கள் தாங்கள் விரும்பிய மாற்றத்தினை தேனாகச் சுவைக்கத் தொடங்கிவிட்டனர். ஆட்சி மாற்றத்துடன் அரசில் ஒரு பெரும் அரசியல் மாற்றத்தையும், அணுகுமுறை மாற்றத்தையும் கொண்டு வந்துள்ளார் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். 'உங்கள் தொகுதியில் முதல்வர்' திட்டத்தை நடைமுறைப்படுத்தி, அனைத்து தொகுதிகளிலும் ,கடைக்கோடி பகுதி மக்களின் குரல் நேரடியாக அவரைச் சென்றடைய ஒரு பெரும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். இந்தத் திட்டத்தால் மக்கள் பயன்பெறுவது மட்டுமல்லாமல், மனதார மாண்புமிகு முதல்வர் அவர்களை புன்னகையோடு வாழ்த்துகிறார்கள். நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கோடிக்கணக்கான புன்னகைச் சிரிப்புகளுக்குச் சொந்தக்காரராகிவிட்டார். சரியானவற்றைச் செய்வது மட்டுமல்ல, சரியானவற்றை விரைந்து செய்வதிலே அரசின் செயல்திறன் உள்ளது. எனது தியாகராய நகர் தொகுதி மக்களிடமிருந்து

2021 ஆகஸ்ட் 26] [திரு. ஜெ. கருணாநிதி]

பெறப்பட்ட புதிய மேம்பாலத்திற்கான கோரிக்கையை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வைத்தேன். அதனை உடனடியாக பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு இந்த நிதிநிலை அறிக்கையில் அதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வளவு விரைவாக எங்களது கோரிக்கையைப் பரிசீலித்து அதனை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எனது தியாகராய நகர் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நாட்டின் வளர்ச்சிக்கு கல்வி மிகப்பெரும் தூணாக அமைகிறது. அதுவும் பள்ளிக் கல்வி அதற்கு அடித்தளமாக உள்ளது. கல்வி ஒரு மனிதனுக்கு மிகப் பெரிய செல்வமாகும். அது சமுதாயத்தையும் முன்னேற்றும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பள்ளிக் கல்வித் துறைக்கு அதிக முக்கியத்துவம் தருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், பள்ளிக் கல்வித் துறைக்கு 32,599.54 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார்கள். கடந்த சில ஆண்டுகால நிதிநிலை அறிக்கைகளில் பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியை மேற்கோள் காட்ட விரும்புகிறேன். 2018–2019 ஆம் ஆண்டில் 27,205.88 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இது 1.01% வளர்ச்சி ஆகும். 2019–2020 ஆம் ஆண்டில் 28,757.62 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இது 5.70% வளர்ச்சி ஆகும். ஆனால் தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதி கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கைகளில் ஒதுக்கப்பட்ட நிதியைவிட 13.36% அதிகம். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்துத் துறைகளுக்கும் ஒதுக்கப்பட்ட நிதிகளைவிட பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி உயர்ந்து நிற்கிறது.

முற்பகல் 11–05

ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில்கூட கல்விக்காக ஒதுக்கப்பட்ட நிதியின் வளர்ச்சி வெறும் 4.69% தான். கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கைகளிலேயே இது குறைவாகும். தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கையில் 13.36% வளர்ச்சி. ஒன்றிய அரசின் கல்விக்கான வளர்ச்சித் திட்டங்களைவிட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலினால் பள்ளிக் கல்வித் துறைக்கு அதிக சதவிகித நிதி ஒதுக்கப்பட்டு, தமிழ்நாடு உயர்ந்து நிற்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. ஜெ. கருணாநிதி] [2021 ஆகஸ்ட் 26

கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழக நிதிநிலை அறிக்கைகளில் இதுவே அதிகமாகும். ஒன்றியம் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்க, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் தமிழகம் முன்னோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறை தொடர்பாக சில கோரிக்கைகளை வைக்க விரும்புகிறேன்.

விளையாட்டுத் திறன் கொண்ட மாணவர்களின் நலனுக்காக பிரத்தியேக சிறப்பு Special Model Sports Schools–ஐ அமைக்கக் கோரிக்கை வைக்கிறேன். மாவட்டந்தோறும் இப்பள்ளிகளை அமைத்து அந்தந்த மாவட்டங்களில் விளையாட்டுத் திறன் மிக்க மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களை இப்பள்ளிகளில் ஒருங்கே இணைக்க வேண்டும். அப்பள்ளிகளில் அனைத்து விளையாட்டு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு, தின அட்டவணையில் விளையாட்டுப் பயிற்சிகளுக்கு அதிக நேரம் ஒதுக்கப்பட வேண்டும். அவ்வாறு விளையாட்டுத் திறன்கொண்ட மாணவ, மாணவிகள் பயிற்சிகள் எடுத்துக்கொண்டால் விளையாட்டுத் துறையில் அதிக சாதனைகளைப் படைக்கலாம். சில வெளிநாடுகளில் இதுபோன்ற Special Model Sports Schools, Model Cultural Schools போன்ற கட்டமைப்புகள் செயல்பாட்டில் உள்ளன. அவை நல்ல பயன்களையும் தருகின்றன. எனவே, இக்கோரிக்கையினைத் தயவுகூர்ந்து பரிசீலிக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் வேண்டுகோள் விடுக்கிறேன்.

இன்றைய காலக்கட்டத்தில் உலகெங்கும் உள்ள பன்னாட்டு நிறுவனங்களில் வேலைக்குப் பணியமர்த்த ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கும் தொழில்நுட்பம் மாறிவருகிறது. பன்னாட்டு நிறுவனங்களில் பணி கிடைக்க பட்டப் படிப்பு அவசியம் இல்லை என்ற சூழல் மாறி வருகிறது. பட்டப் படிப்பு இல்லையென்றாலும், அதற்கான செயல்திறன் இருந்தால் போதுமானது என சர்வதேச அளவில் உள்ள பெரும் நிறுவனங்கள் எண்ணத் தொடங்கிவிட்டன. அதன் சான்றாக வெளிநாடுகளில், Google, EY, Apple போன்ற நிறுவனங்கள் பட்டப் படிப்பு இல்லையென்றாலும் அந்த வேலைக்கான செயல்திறன் இருந்தால் போதுமானது என்று அறிவித்து வேலைக்கான ஆட்சேர்ப்பு அதன்படி நடக்கிறது. சர்வதேச அளவில் திகழும் இச்சூழல் விரைவில் நமது நாட்டிற்கும்

2021 ஆகஸ்ட் 26] [திரு. ஜெ. கருணாநிதி]

வரலாம். அதற்காக மாணவ, மாணவிகளின் செயல் திறனை முன்னேற்றம் செய்யும் சூழலைப் பள்ளிக் கல்வியில் ஏற்படுத்த வேண்டும்.

மென்பொருள் நிறுவனங்களில் பணியாற்றும் பொறியாளர்களில் பெரும்பாலானோர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். தமிழகத்தில் கழக ஆட்சிக் காலத்தில்தான் மென்பொருள் நிறுவனங்களில் புரட்சி ஏற்பட்டது. Tidel Park அமைக்கப்பட்டது. மென்பொருள் நிறுவனங்களுக்கான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட்டன. அதனால் அத்துறை தமிழகத்தில் பெரும் வளர்ச்சியைக் கண்டது. தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையில் வேலூர், தூத்துக்குடி, திருப்பூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் புதிய Tidel Parks அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதனால், இத்துறையில் வேலைவாய்ப்புகள் அதிகமாகும். ஆகவே, இத்துறையில் மாணவர்களின் செயல்திறனை அதிகரிக்க பள்ளிப்படிப்பு காலத்திலேயே Java, Python போன்ற programming மொழிகளைக் கற்க பிரத்தியேக Coding kits வசதியுடன்கூடிய செயற்பயிற்சிகள் மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டால், அந்த வேலைக்கான செயல்திறன் அதிகரிக்கும். இதுபோன்ற programme kits கொண்ட பயிற்சிகள் தனியார் நிறுவனங்கள்மூலம் அதிகக் கட்டணத்துடன் கற்றுத் தரப்படுகின்றன. ஏழை மாணவர்களுக்கு இது சென்றடைய அரசுப் பள்ளிகளில் இம்முறையைச் செயல்படுத்த வேண்டும். தற்போது பள்ளிப் பாடத்திட்டத்தில் programming மொழிகள் அங்கம் வகிக்கின்றன. நிறுவனங்கள் எதிர்பார்க்கும் செயல்திறனை மாணவர்கள் அடைய இதுபோன்ற பயிற்சிகள் உதவலாம். இக்கோரிக்கையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் முன்வைக்க விரும்புகிறேன்.

எனது தியாகராய நகர் தொகுதிக்குட்பட்ட புதூர் பகுதியில், அசோக் நகர் பிரதான சாலையில் மேற்கு மாம்பலம் மேல்நிலைப் பள்ளி அமைந்துள்ளது. அது சுமார் 4 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளாக சரியான பராமரிப்பு இல்லாததனால், கட்டடங்களின் பெரும்பகுதி இடிந்து விழும் அபாயத்தில் உள்ளது. போதிய வசதி செய்யாமல் புறக்கணிக்கப்பட்டதால், பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை அந்தப் பள்ளியில் சேர்க்கத் தயங்குகிறார்கள். அனைவரும்

[திரு. ஜெ. கருணாநிதி] [2021 ஆகஸ்ட் 26

எளிதில் சென்றடையக்கூடிய பிரதான சாலையில், இப்பள்ளி அமைந்துள்ளதால், நன்றாகப் பராமரிக்கப்பட்டால், இங்கே மாணவர் சேர்க்கை கூடும்; பலருக்கும் பயன் தரும். ஆகையால், இப்பள்ளியை மறுசீரமைத்து, கட்டித் தரும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளி வளாகத்தில் பள்ளியைத் தவிர்த்து அதிக இட வசதி உள்ளதால் அங்கே ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்கும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறை சார்ந்த பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்க விரும்புகிறேன்.

முன்பெல்லாம் மாணவர்கள் பொறியியல் கல்லூரிகளில் சேர்வதற்கு Common Entrance Test என்ற ஒன்று நடத்தப்பட்டுக் கொண்டிருந்தது. இது கிராமப்புற ஏழை மாணவர்களுக்கு எட்டாக் கனியாக அமைந்திருந்தது. பொறியியல் கல்லூரிகளில் கிராமப்புற மாணவர்களின் பங்கு இருக்க வேண்டும் என்று எண்ணிய சமூக நீதிக் காவலர் தலைவர் கலைஞர் அவர்கள் அந்தத் தேர்வினை இரத்துச் செய்து, மாணவர் சேர்க்கையை 12 ஆம் வகுப்பு மதிப்பெண்கள் அடிப்படையில் ஒற்றைச் சாளர முறையில் கொண்டு வந்து, அனைத்துத் தரப்பு மக்களும் பொறியியல் கல்லூரிகளில் எளிதில் சேர நடவடிக்கை எடுத்தார். இதனால், தமிழ்நாடெங்கும் வசிக்கும் ஏழை மாணவர்களுக்கு பொறியியல் கல்வி எட்டும் கனியாகியது. கிராமபுறப் பள்ளியில் கல்வி கற்ற ஏழை மாணவர்களும் இன்று மென்பொருள் நிறுவனர்களாகவும் பெரும் கட்டடப் பொறியாளர்களாகவும் சர்வதேச அளவில் சாதித்துக்கொண்டிருக்கின்றனர். அது ஒரு பெரும் கல்விப் புரட்சியாக மட்டுமல்லாமல், பெரும் சமுதாயப் புரட்சியாகவும் அமைந்தது.

தற்போது மீண்டும் தமிழகத்தில், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்வதற்கு மாணவ மாணவியரிடத்தில் ஆர்வம் அதிகரித்து வருகின்றது. தற்போதைய சூழலில், தனியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்வதற்கு ஒற்றைச் சாளரமுறை அமலில் இல்லை. ஒரு மாணவர் 3 கல்லூரிகளில் விண்ணப்பிக்க விரும்பினால், தனித் தனியே கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது.

2021 ஆகஸ்ட் 26] [திரு. ஜெ. கருணாநிதி]

இது ஏழை மாணவர்களிடம் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்துகிறது. அது மட்டுமல்லாமல், அந்த மாணவர் சேர்க்கையில் ஒற்றைச் சாளர முறை இல்லாததால், வெளிப்படைத் தன்மை கேள்விக்குறியாகிறது. பல ஏழை மாணவர்கள் தங்கள் நிதி வசதிக்குட்பட்டு விண்ணப்பித்த 2 அல்லது 3 கல்லூரிகளில் சேர்க்கை கிடைக்காமல்போனால், அவர்கள் கல்வியைத் தொடர்வதிலும் சிக்கல் ஏற்படுகிறது. கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை ஒற்றைச் சாளர முறையில் நடந்தால், ஏழை எளிய மாணவர்களுக்கான இடம் கிடைக்கும். பெருகிவரும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையினைக் கருத்தில் கொண்டும், பொறியியல் கல்விக்கான சேர்க்கை, ஒற்றைச் சாளர முறையில் கொண்டுவந்ததால், கிடைத்த வாய்ப்புப் பரவலையும் கருத்தில் கொண்டு, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலான மாணவர் சேர்க்கைக்கு 12–ம் வகுப்பு தேர்வு மதிப்பெண் அடிப்படையில் ஒற்றைச் சாளர முறையில் சேர்க்கையினை நடத்துவதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று தியாகராய நகர் தொகுதி சம்பந்தமான சில கோரிக்கைகளை முன்வைக்கிறேன்:

தியாகராய நகர் தொகுதியில் அமைந்துள்ள பேருந்து நிலையத்தை பல்லாயிரம் மக்கள் தினமும் பயன்படுத்தி வருகின்றனர். இன்றைக்கு பெருகிய மக்கள்தொகையினாலும், பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரித்ததாலும், மக்கள் அதிக அளவில் பேருந்துகளைப் பயன்படுத்துவதாலும், பேருந்து நிலையத்தை மேம்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. பேருந்துகளின் எண்ணிக்கை அதிகமானதால் பேருந்து நிலையத்தைச் சுற்றியுள்ள பிரதான சாலையில் பேருந்துகளை நிறுத்தும் சூழ்நிலை உள்ளது. அது போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக அமைகிறது. மழை பொழியும்போது மழைநீர் தேக்கம் அடைகிறது. ஆகவே, சென்னை மாநகரத்தின் முக்கியமான பேருந்து நிலையங்களில் ஒன்றான தியாகராய நகர் பேருந்து நிலையத்தை சர்வதேச தரத்தில் பல அடுக்கு பேருந்து நிலையக் கட்டடமாகக் கட்டிக்கொடுத்து, அங்கு கடைகள், மருத்துவ மையம் மற்றும் உதவி மையம் ஆகிய நவீன வசதிகளைக் கொண்டு மேம்படுத்திக் கொடுத்தால், அது மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் இருக்கும். இக்கோரிக்கையினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்

[திரு. ஜெ. கருணாநிதி] [2021 ஆகஸ்ட் 26

வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடமும் முன்வைக்க விரும்புகிறேன்.

தியாகராய நகர் பகுதி மக்களிடம் கழிவுநீர் சார்ந்த குறைகள் பரவலாக அதிக அளவில் எழும்புகின்றன. பெரும்பாலான கழிவுநீர்க் குழாய்ப் பாதைகள், 40 அல்லது 50 வருடங்களுக்கு முன் போடப்பட்டவை. அவற்றை தற்போதுள்ள அதிகப்படியான வீடுகளுக்கேற்றவாறு மறு திட்டம் தீட்டி, விரிவடைந்த கழிவுநீர்க் குழாய்ப் பாதைகளை அமைத்துச் செயல்படுத்த வேண்டும் என்கிற கோரிக்கையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக முன்வைக்க விரும்புகிறேன்.

தியாகராய நகர் தொகுதிக்குட்பட்ட மேற்கு மாம்பலம் பகுதியில் குடிநீர்ப் பற்றாக்குறை உள்ளது. அதனைச் சீர்செய்ய, மேல்நிலை குடிநீர்த் தேக்கத் தொட்டி அமைக்க வேண்டும் என்ற மக்களின் கோரிக்கையினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக முன்வைக்க விரும்புகிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட, வடபழனி, அசோக் நகர், கோடம்பாக்கம், தியாகராய நகர் பகுதிகளில் நீண்ட காலமாகப் பட்டா இல்லாது, ஏழை மக்கள் வசித்துவருகிறார்கள். மிகவும் பின்தங்கிய அந்த மக்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்கிறேன். அந்த மக்களுக்கு உதவுவதற்கு அரசு சார்பாக பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

வடபழனி முருகன் கோயில், எனது தொகுதியான தியாகராய நகர் தொகுதியில் பெரிய ஆன்மிகத் தலமாக அமைந்துள்ளது. பல்லாயிரக்கணக்கான மக்கள் தினமும் அக்கோயிலுக்கு வருகை தருகிறார்கள். மேலும் விழா மற்றும் முகூர்த்த நாட்களில் மக்கள் கூட்டம் மிக அதிகமாகக் காணப்படும் இங்கு, போக்குவரத்து வாகனங்கள் நிறுத்துவதற்கான போதுமான வசதி இல்லாததால் சாலையில் வாகனங்களை நிறுத்தும் சூழ்நிலை உள்ளது. இதனால் மிகுந்த போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதற்குத் தீர்வாக ஒரு பல்லடுக்கு வாகன நிறுத்தம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

2021 ஆகஸ்ட் 26] [திரு. ஜெ. கருணாநிதி]

நமது தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் நடவடிக்கையினால், முக்கியமான இதயப் பகுதியான வடபழனியிலுள்ள வடபழனி முருகன் கோயிலுக்குச் சொந்தமான 5.5 ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. இது மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், அதாவது துறையின் சார்பாக சென்னையில் இரண்டு கல்லூரிகள் நிறுவப்படும் என்று அறிவித்திருந்தார். அதன்படி ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியினை, ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட வடபழனி கோயில் நிலத்தில் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும் மற்றும் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய காலகட்டத்தில் திறன் மேம்பாட்டு மையங்கள் மிகப் பெரும் தேவையாக உள்ளது. வேலைவாய்ப்புகள் ஒரு பக்கம் அதிகரிக்கின்ற அதேவேளையில், அதனை அடைவதற்கான திறன் பயிற்சி இன்றியமையாததாகிறது. ஆகவே, எனது தியாகராய நகர் தொகுதிக்குப் பல்திறன் மேம்பாட்டு மையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தியாகராய நகர் தொகுதிக்குட்பட்ட பின்வரும் பகுதிகளில் குடிசைப்பகுதி மாற்று வாரிய வீடுகளில் சில பகுதிகள் இடிந்து விழுந்து, மீண்டும் புதிதாகக் கட்டித் தரவேண்டிய நிலை உள்ளது. அசோக் நகர், கலைஞர் கருணாநிதி நகர், நல்லாங்குப்பம், காமராஜர் காலனி, பிருந்தாவனம் தெரு, கோடம்பாக்கம், தியாகராய நகர் ஆகிய பகுதிகளில் உள்ள குடிசைப்பகுதி மாற்று வாரிய வீடுகளை இடித்து, புதிதாகக் கட்டித் தரும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்பேரவையில் பேச அனுமதி வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், கொறடா அவர்களுக்கும், அனைத்து

[திரு. ஜெ. கருணாநிதி] [*2021 ஆகஸ்ட் 26*

மாண்புமிகு அமைச்சர்களுக்கும் மற்றும் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–15

எனது அன்பு அண்ணன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட செயலாளருமான மறைந்த மாவீரர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள், மக்கள் பணியையே உயிர்மூச்சாகக் கொண்டு வாழ்ந்தார். தன் உடல்நிலை குறித்து நன்கு அறிந்தும், அதைப் பொருட்படுத்தாமல், கொரோனா பேரிடர் காலத்தில் மக்களுக்கு உதவி வந்தார். இந்தியாவிலேயே, அவர் கொரோனாவினால் உயிரிழந்த முதல் சட்டமன்ற உறுப்பினராவார். அவர் இந்தப் பேரவையிலும், கழகத்திலும், மக்கள் மனதிலும் அவருக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்திருந்தார். அவருடைய இழப்பு எங்களுக்கு பேரிழப்பாக அமைந்திருந்தது. அந்தப் பேரிழப்பில் பங்கு கொண்டமைக்கும், இன்று எங்கள் குடும்பத்தில் மூத்தவராய் எங்களை வழிநடத்திவரும் நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டு, இப்பேரவையில் எனது முதல் உரையை நிறைவு செய்கிறேன். வாழ்க தமிழ்! நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ் அவர்கள்.*

திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்: *வரலாற்றுச் சிறப்புமிக்க இப்பேரவையின் நாயகனாக வீற்றிருக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வித் துறையின் மானியக் கோரிக்கைகளின்மீது எனது முதல் உரையை ஆற்றுவதற்குக் காரணமாக விளங்கும் இந்திய தேசிய காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவர், தியாகத் தலைவர் அன்னை திருமதி சோனியா காந்தி அவர்களையும், எதிர்கால இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் இளந்தலைவர் திரு. ராகுல்காந்தி அவர்களையும், பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளை 'கல்வி வளர்ச்சி' நாளாக அறிவித்த முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களையும், கொரோனா மற்றும் பொருளாதாரத்தில் வீழ்ச்சி என கடினமான சூழ்நிலையில் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பதவியேற்று, நூறே நாட்களில் சாதனைகள் பல புரிந்து, உலகளவில் தமிழ்நாட்டை தலை நிமிரச் செய்ய, முடங்கிக் கிடந்த அரசு*

2021 ஆகஸ்ட் 26] [திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்]

இயந்திரத்தைச் சீர்திருத்தி, மிகச் சிறப்பாக இயக்கிக்கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் அனைத்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், என் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது வெற்றிக்காக தேர்தல் பரப்புரை செய்த தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு திருமதி கனிமொழி கருணாநிதி அவர்களுக்கும், தூத்துக்குடி தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொறுப்பாளர் மாண்புமிகு அமைச்சர் திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது அரசியல் வழிகாட்டியாக இருக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. கே.எஸ். அழகிரி அவர்களையும், விருதுநகர் பாராளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. மாணிக்கம் தாகூர் அவர்களையும், எங்களுடைய பொறுப்பாளர் திரு. தினேஷ் குண்டு ராவ் அவர்களையும் வணங்குகிறேன். முதல்முறையாக சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட என்னை, அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்த எனது ஸ்ரீவைகுண்டம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வித் துறையில் பேசுவதற்கு முன்பாக குலக் கல்வி முறையை வேரோடு அகற்றிய, சுமார் 40 ஆயிரத்திற்கும் மேலான கல்விக்கூடங்களை நிறுவி, கல்வி கற்க முடியாத ஏழை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கி, அவர்கள் வாழ்வில் கல்வி ஒளி வீசச் செய்த, கல்விக் கண் திறந்த கர்ம வீரர் திரு. காமராஜர் அவர்களை நான் வணங்குகின்றேன். எத்தனையோ துறைகள் இருந்தாலும், நம் மாணவர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் துறைகள், பள்ளிக் கல்வித் துறையும், உயர் கல்வித் துறையும்தான். இந்த இரு துறைகளின் மாண்புமிகு அமைச்சர்களுக்கும் அதிக பொறுப்பும், கடமையும் உள்ளது. மாண்புமிகு அமைச்சர்கள் சிறப்பாகச் செயல்படுத்துவார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு உள்ளது.

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் கூறிய 'அரசு பள்ளிக்கூடங்கள் வறுமையின் சின்னமாக இல்லாமல், பெருமையின் சின்னமாக இருக்கும்' என்ற சொல் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் தருகிறது.

[திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்] [2021 ஆகஸ்ட் 26

மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரையில், இனி அரசாங்கம் data-centric and transparent ஆகவே இருக்கும் எனக் கூறியது முதல்முறை சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் என்னைப் போன்றவர்களுக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. ஏற்கெனவே பட்ஜெட் ஒதுக்கீட்டில் பள்ளிக் கல்வித் துறைக்கு 32,599.54 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பள்ளிக் கல்வித் துறைக்கான முக்கியத்துவத்தைக் காண்பித்துள்ளார். 1,784 அரசு நடுநிலைப் பள்ளிகளில் hi-tech laboratory அமைக்க 114.18 கோடி ரூபாயும், 865 அரசு உயர்நிலைப் பள்ளிகளில் Smart Class அமைக்க 20.76 கோடி ரூபாயும், கொரோனாவால் கல்வி பயில முடியாத மாணவர்களுக்கு, சிறப்பு வகுப்புகள் நடத்த 200 கோடி ரூபாயும் ஒதுக்கியுள்ளார்கள்.

அதேபோல, உயர் கல்வித் துறைக்காக 5,369.09 கோடி ரூபாய் ஒதுக்கி, 10 புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அமைக்கப்படும் என்ற அறிவிப்பும் வந்திருக்கின்றது. ஆசிரியர் தகுதித் தேர்வில் (TET) தேர்ச்சி பெற்றவர்களுக்கு தகுதிச் சான்று 7 ஆண்டுகள் என்று இருந்ததை ஆயுள் முழுவதும் அது செல்லுபடியாகும் என்று அரசாணை வெளியிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அனைத்து ஆசிரியர்களும் பாராட்டுகின்றனர்.

முற்பகல் 11–20

பெருந்தலைவர் காமராஜர் எடுத்த சீரிய முயற்சியாலும், பின் தொடர்ந்துவந்த அனைத்து அரசுகள் எடுத்த முயற்சிகளாலும், கல்வித் துறையில் வேறு எந்த மாநிலங்களையும்விட நாம் முன்னிலையில் உள்ளோம். Gross Enrolment Ratio, Pupil-teacher ratio போன்ற குறியீடுகளில் நம் மாநிலம் முன்னிலையில் இருந்தாலும், நம்மைப்போல பெரிய மாநிலங்களுக்கு, கல்வித் துறையில் பெரிய சவால்களும் உள்ளன. முன்பு, குழந்தைகளுக்கு நிலாவைக் காண்பித்து சோறு ஊட்டும் காலம் இருந்தது. ஆனால், தற்போது TV, Tablet மற்றும் phone-ஐக் காண்பித்து சோறு ஊட்டும் காலம் வந்துவிட்டது. இதன்விளைவாக, மாணவச் செல்வங்களுக்கு attention disorder மற்றும் learning disability, அதாவது, கவனக் குறைவு மற்றும் கற்றல் குறைபாடு போன்ற பாதிப்புகள் அதிகரித்து வருகின்றன. இதைக் கல்விக்கூடங்கள் புரிந்துகொள்ளாமல் மாறாக,

2021 ஆகஸ்ட் 26] [திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்]

அத்தகைய மாணவர்களால் படிக்க இயலாது என அவர்களை ஒதுக்கி மாணவர்களையும், அவர்களது பெற்றோர்களையும் மன அழுத்தத்திற்கு உள்ளாக்கி வருகின்றன. ஏறக்குறைய 60 மாணவர்கள் இருக்கும் இடத்தில் 5 மாணவர்களுக்கு இத்தகைய குறைபாடு உள்ளது என அறியப்படுகின்றது. இதனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளம் கொண்டு Special Educators மற்றும் Alternative Teaching method தெரிந்த ஆசிரியர்களை அனைத்து பள்ளிக்கூடங்களிலும் அமர்த்திட உரிய அரசாணையைப் பிறப்பிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு செய்தால்தான் அத்தகைய மாணவர்களின் எதிர்காலம் பேணி பாதுகாக்கப்படும். அதுமட்டுமல்லாமல், Finland மற்றும் England போன்ற நாடுகளில் உள்ளதுபோல rote learning முறையைத் தவிர்த்து, critical thinking முறையில் பாடங்கள் கற்பிக்கப்படும் என்று நமது பட்ஜெட் உரையில் கூறிய நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உயர் கல்வியைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டில் 50–க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள், 500–க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இருக்கின்றன. ஆனால், Innovation index அதாவது, கண்டுபிடிப்புக் குறியீடு என்ற குறிப்பில், வெறும் 20 பல்கலைக்கழகங்கள், 200 பொறியியல் கல்லூரிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் என்று கர்நாடகாவைவிட நாம் பின்தங்கியுள்ளோம். அதாவது, கர்நாடகா முதலிடத்திலும், நாம் மூன்றாவது இடத்திலும் உள்ளோம். இந்தத் தகவலை NITI Aayog வெளியிட்டுள்ளது. அதுபோல் Global Innovation Index என்ற குறியீட்டில் உலக அளவில் 131 நாடுகளில் நாம் 48–வது இடத்தில்தான் உள்ளோம். இந்த நிலையை மேம்படுத்த, பொருளாதார மேம்பாட்டிற்கு என்று ஒரு வல்லுநர் குழுவை அமைத்ததுபோல், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உயர் கல்விக்கும் ஒரு வல்லுநர் குழுவை அமைத்து, நமது மாநிலத்தை Knowledge Capital of our Country ஆக மாற்ற முயற்சிகள் எடுக்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், பன்னாட்டு மற்றும் உள்நாட்டு தொழில்நுட்பம் சார்ந்த நிறுவனங்கள் அதாவது, Technology based companies தங்களது ஆராய்ச்சிப் பணியை தமிழ்நாட்டில் மேற்கொள்ள, அவற்றை ஊக்குவிக்கும் விதத்தில் Research Park அமைத்திட வேண்டும்.

[*2021 ஆகஸ்ட் 26*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உயர் கல்விக்காக ஒரு குழுவை அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார். கல்விக்காக வல்லுநர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தற்போது உயர் கல்விக்காக ஒரு மன்றமும் இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ் அவர்கள்.*

திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.* Technology based companies *ஆராய்ச்சியை மேற்கொள்ள* Research Park *அமைத்திட வேண்டும். மாணவர்கள் தங்களுடைய கண்டுபிடிப்புகளை* Prototype *அதாவது, முன்மாதிரி செய்து பார்க்கத் தேவையான* 3D printers, Integerated chip, *கணினி வசதியுடன்கூடிய ஒரு* Innovation hub *அதில் அமைய வேண்டும். இதன்மூலம் உள்நாட்டுக் கண்டுபிடிப்புகள் அதிகரிக்கும். வேலைவாய்ப்பு உயரும். வெளி மாநிலங்களிலிருந்து இங்கு வந்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வாய்ப்பாக இருக்கும். இதன்மூலம் நமது பொருளாதாரமும் மேம்படும். தொலைநோக்குப் பார்வையுடைய நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் சிறப்புக் கவனம் செலுத்தி, நிச்சயமாக நமது மாநிலத்தை* Knowledge Capital of our Country *ஆக மாற்றுவார் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. அதற்கு மாண்புமிகு உயர் கல்வி மற்றும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்கள் உறுதுணையாக இருப்பார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு உள்ளது.*

எனது தொகுதிக் கோரிக்கையை வேகமாகப் படித்து விடுகிறேன். சீர்மிகு துறைமுகம் கொண்ட எங்களது தூத்துக்குடி மாவட்டத்தில் மலைத் தொடர் தொடங்கி, வயல்வெளிகள், மேய்ச்சல் நிலங்கள், பாலை நிலங்கள், காடுகள் பெரிய கடற்கரை உள்ளிட்டவற்றைக் கொண்டது ஸ்ரீவைகுண்டம் ஆகும். அதாவது, ஐந்து வகை நிலங்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலங்களைக் கொண்ட, மிகவும் பழமைவாய்ந்ததும்,

2021 ஆகஸ்ட் 26] [திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்]

பாரம்பரியமானதும், வற்றாத ஜீவ நதியுமான தாமிரபரணி நதி பாயும் பொன்னான பூமி. உலக நாகரிகத்தின் தொட்டில் ஆக விளங்கும் பழந்தமிழர் பொக்கிஷங்களை தனக்கென கொண்ட ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் முற்கால பாண்டிய மன்னர்களின் துறைமுகமாக விளங்கிய கொற்கை ஆகியவை அமைந்திருக்கும் அற்புத பூமி. நிலத்தடி நீராதாரத்தை மட்டுமே நம்பியுள்ள ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் மழைக் காலங்களில் பெருமளவு தண்ணீர் வீணாகக் கடலில் சென்று கலக்கிறது. எனவே ஸ்ரீவைகுண்டம் அணையை ஆழப்படுத்தி, கரையைச் செப்பனிட்டு, ஷட்டர்களைப் பழுதுபார்த்து அங்குள்ள அமலைச் செடிகளை நீக்கி சுற்றியுள்ள 10–க்கும் மேற்பட்ட பெரிய குளங்களைத் தூர் வார வேண்டும் என்று கனிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–25

சாத்தான்குளத்தில் கடந்த 30 ஆண்டுகளாக உள்ள பழமையான கூட்டுக் குடிநீர்த் திட்டம், தன் உச்ச காலக்கட்டத்தை நெருங்கிவிட்டது. ஜல்ஜீவன் திட்டம்மூலம் பைப்களில் வழங்கப்படும் தண்ணீர் சரியாக வருவதில்லை. அதனால் இந்த பழைய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை மாற்றி முழுமையாக புதிய திட்டம் அமைத்து, அதன்மூலம் குழாய்கள் அமைத்து, குடிநீர் வழங்க வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

ஆழ்வார் திருநகரியில் உள்ள அப்பன்கோவில், இரட்டை திருப்பதி அருகே ஒரு தடுப்பணை அமைத்து, அதன்மேல் ஒரு தரைப்பாலம் அமைத்து, அப்பன்கோவில் பகுதியையும், கேம்பலாபாத் பகுதியையும் இணைத்தால், 20–க்கும் மேற்பட்ட கிராம மக்கள் திருச்செந்தூர் செல்ல உதவியாக இருக்கும். அந்தப் பகுதியின் நிலத்தடி நீராதாரத்தையும் பெருக்க பேருதவியாக இருக்கும்.

புதிதாக அமைந்த ஏரல் தாலுகாவிற்கு ஓர் அரசு பொது மருத்துவமனை மற்றும் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன். சாத்தான்குளம் மற்றும் ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்தவும், ஒரு dialysis centre மற்றும் விபத்து அவசர சிகிச்சை மையம் அமைத்துத் தர வேண்டியும் கேட்டுக்கொள்கின்றேன்.

சாத்தான்குளத்தில் இயங்கிவரும் அரசு மகளிர் கல்லூரியைக் கட்டுவதற்கு சாத்தான்குளம் காமராஜர் கல்விக் கழகத்தின்மூலம் 30

[திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்] [2021 ஆகஸ்ட் 26

ஏக்கர் இடம் அரசுக்கு இலவசமாக கொடுக்கப்பட்டது. அப்போது பெருந்தலைவர் காமராஜர் பெயரைச் சூட்ட வேண்டும் என்ற கோரிக்கையையும் அவர்கள் வைத்திருந்தார்கள். அதன்படி, அவரது 120-வது பிறந்த நாள் விழாவன்று, இந்தக் கல்லூரிக்கு பெருந்தலைவர் காமராஜர் பெயரைச் சூட்டி, அரசாணை வெளியிட வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

ஸ்ரீவைகுண்டம் மற்றும் ஏரல் ஆகிய வட்டங்களை இணைத்து தனி கோட்டமாக அறிவிக்க வேண்டும். சாத்தான்குளம் தாலுகா, பேய்குளத்தில் தனி காவல் நிலையம் அமைத்துத் தர வேண்டும். ஏரலில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் பேய்குளம், செய்துங்கநல்லூர் ஆகிய இடங்களில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் மூலமாக ஓர் அரசு உறுப்புக் கல்லூரி அமைக்க வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

கருங்குளம், பரம்பி பகுதியில் அரசு தொழிற்பயிற்சிப் பள்ளி அமைக்க இடம் ஒதுக்கீடு செய்து பல ஆண்டுகள் ஆகின்றன. ஆனால், அதற்கான பணி இன்னும் தொடங்கப்படவில்லை. என்னுடைய தொகுதிக்குட்பட்ட கருங்குளத்தில் அரசு தொழிற்பயிற்சிப் பள்ளி அமைக்க வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

நவ திருப்பதி ஸ்தலங்கள் திருச்செந்தூர் கோவில் அருகில் இருக்கின்றன. Little Italy எனக் கூறப்படும் மணப்பாடு கிராமமும் அருகில் உள்ளது. இவற்றையெல்லாம் ஒன்றிணைத்து ஸ்ரீவைகுண்டம் தாமிரபரணி ஆற்றில் ஒரு படகுக் குழாம் ஏற்படுத்தி, சுற்றுலா மையமாக அமைத்துத் தர வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, பெரியதாளையில் மணல் அரிப்பு ஏற்பட்டு, வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. இதைச் சீரமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

ஸ்ரீவைகுண்டம் பகுதியில் வாழை அதிகமாகப் பயிரிடப்படுகிறது. இந்த வாழைத் தார்களை நல்ல விலைக்கு அரசே கொள்முதல் செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைக்கின்றேன். அதேபோல் சாத்தான்குளம் பகுதியில் முருங்கை விளைகிறது. முருங்கை இலை மற்றும் இதர உற்பத்திப் பொருள்களை வைத்து, மதிப்புக்கூட்டும் தொழிற்சாலைகளைப் பெருக்கி வேலைவாய்ப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

2021 ஆகஸ்ட் 26] [திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்]

சாத்தான்குளம் தாலுகாவில் ஞானியார் குடியிருப்பு, உசிரத்துப்பட்டி, புத்தன் தருவை, தச்சன்விளை, பண்ணைவிளை மற்றும் பேய்குளம் ஆகிய அரசு நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும்.

ஆழ்வார் திருநகரி பேரூராட்சியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொண்டு, சாத்தான்குளம் பேருந்துப் பணிமனையிலிருந்து 6 வழித்தடங்கள் மட்டுமே இயக்கப்படுகின்றன. இதனால், அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டு வருகிறது. எனவே, மக்கள் நலன் கருதி அந்த இடத்தில் அதிகப் பேருந்துகளை இயக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ஸ்ரீவைகுண்டம் தொகுதிக்குட்பட்ட முக்கனி, பேரகுளம், பன்னம்பாறை மற்றும் தச்சன்விளை ஆகிய இடங்களில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

ஸ்ரீவைகுண்டம் நீதிமன்றம் மிகவும் பழமையான நிலையில் உள்ளது. இதைச் சீரமைக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கின்றேன். கருங்குளம் ஒன்றியத்தில் உள்ள செய்துங்கநல்லூர், ஆழ்வார்திருநகரி, வெங்கடேசபுரம் ஆகிய கிராமப் பஞ்சாயத்துகளின் வளர்ச்சி கருதி, பேரூராட்சியாக மாற்றித் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இன்னும் கோரிக்கைகள் இருக்கின்றன. அதை எழுத்துவாயிலாக பேரவைத் தலைவர் அவர்களிடத்தில் கொடுத்துவிடுகின்றேன்.

முடிவாக, பேரவைத் தலைவர் அவர்களே, என் தந்தை திரு. ஊர்வசி செல்வராஜ் அவர்கள் அடுத்த நாள் சட்டமன்றத்தில் பேசுவதற்கான உரையைத் தயாரித்துக் கொண்டிருக்கும்போது எதிர்பாராத விதத்தில் 5–7–2009 அன்று இயற்கை எய்தினார். நாங்கள் அதிர்ந்துபோனோம். ஆனால், உடனடியாக நம்முடைய முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இரண்டு பேரும் எங்கள் வீட்டிற்கு வந்து, 'உங்கள் தந்தை நல்ல மனிதர், தைரியமாக இருங்கள்' என்று கூறிய ஆறுதல் வார்த்தைகள் எங்கள் குடும்பத்தினருக்கு அப்போது தைரியத்தையும், நம்பிக்கையையும் கொடுத்தன. இன்று நான் உங்கள் முன்னால் நின்று பேசுவதற்கும் அதுவே காரணமாகவும் அமைந்துள்ளது. ஆகையால், அதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி

[திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்] [*2021 ஆகஸ்ட் 26* தெரிவித்து, நானும் என் தந்தை வழியில் நடப்பேன் என்று உறுதி கூறி, அமர்கிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

ஸ்ரீவைகுண்டம் தொகுதிக்குட்பட்ட ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை ஆகிய இடங்களில் கிடைக்கப்பெற்ற அனைத்துப் பொருட்களையும் ஒருங்கிணைத்து தமிழனின் புகழைப் போற்றும் வண்ணம் மாபெரும் அருங்காட்சியகம் அமைக்க வேண்டும்.

கருங்குளம் ஒன்றியம், கால்வாய் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், சாத்தான்குளம் ஒன்றியம், பன்னம்பாறை, புதுக்குளம், சுண்டங்கோட்டை ஆகிய அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும்.

பண்டாரவிளையில் சேதமடைந்த ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தை அகற்றி புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும்.

ஏரல் தாலுகா, சிவத்தையாபுரத்தில் உள்ள துணை ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட 30 படுக்கைகள் கொண்ட வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையமாகவும், சாத்தான்குளம் தாலுகா, தட்டார்மடத்தில் தரம் உயர்த்தப்பட்ட 30 படுக்கைகள் கொண்ட புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையமும் அமைத்துத் தர வேண்டும்.

நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான கருங்குளம், மூலைக்கரைப்பட்டி சாலை, முனைஞ்சிப்பட்டி–சேரக்குளம் சாலை, மீனாட்சிபட்டி–பேட்மாநகரம் சாலை, பொன்னங்குறிச்சி–பேய்குளம் சாலை, சாயபுரம்–பெருங்குளம் சாலை, ஸ்ரீவைகுண்டம்–புதுக்கோட்டை சாலை, உமரிக்காடு–முக்காணி சாலை, மங்களக்குறிச்சி–காடுவெட்டி சாலை, சாத்தான்குளம்–கலுங்குவிளை சாலை, சாத்தான்குளம்–பெரியதாழை சாலை, பன்னம்பாறை விலக்கு முதல் பேய்குளம் வரை உள்ள சாலையை அகலப்படுத்தி செம்மைப்படுத்தி புதிதாகச் சாலை அமைத்துத் தர வேண்டும்.

ஸ்ரீவைகுண்டம் தொகுதிக்குட்பட்ட சேரகுளம், முதலூர் மற்றும் கலுங்குவிளை ஆகிய இடங்களில் துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

2021 ஆகஸ்ட் 26] [திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்]

சாயபுரம் பேரூராட்சியில் புதிதாகப் பேருந்து நிலையம் அமைக்க நடப்பாண்டில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்களின் உறுப்புக் கல்லூரிகளாகச் செயல்பட்டு வந்த 41 கல்லூரிகள் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. அவற்றில், தற்காலிகமாகப் பணிபுரியும் பேராசிரியர்களைப் பணி நிரந்தரம் செய்து தர வேண்டும். கல்வியின் தரத்தை உயர்த்த சிறப்பு பேராசிரியர்களின் ஊதியத்தை உயர்த்தி வழங்கிட வேண்டும். பணி நிரந்தரம் செய்யும்போது அவர்களுக்கு தகுதியின் அடிப்படையில் முன்னுரிமை வழங்க வேண்டும்.

பல ஏழை, எளிய மற்றும் நடுத்தர குடும்பப் பின்னணி கொண்ட மாணவர்கள் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயின்று வருகின்றனர். அரசுப் பள்ளி மாணவர்களுக்குள்ள அனைத்துத் திட்டங்களும், பயன்களும் அரசு நிதியுதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கும் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

பனை மரங்களும், பனை தொழில்களும் நிறைந்தது எங்கள் தொகுதி. பனைமரம் ஏறுவதற்கு தற்போது வாலிபர்கள் தயக்கம் காட்டும் நிலையில் அவர்களுக்கு நவீன முறையில் பனை மரம் ஏறுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

தற்போது 60 வயதுக்கு மேற்பட்டவர்கள்தான் பனைத் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். அந்த பனைத் தொழிலாளிகளுக்கு விபத்து ஏற்பட்டால் அவர்களுக்கு விபத்து காப்பீட்டுத் தொகை கிடைப்பதில்லை. அவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும்.

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு.தி. சரவணன் அவர்கள்.

திரு. பெ.சு.தி. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மானமும், அறிவும் மனிதர்க்கு அழகு' என்ற தந்தை பெரியாரின் வழி வந்து, 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' என்ற பேரறிஞர் அண்ணாவின் தம்பியாய், 'காலம் பொன் போன்றது,

[திரு. பெ.சு.தி. சரவணன்] [*2021 ஆகஸ்ட் 26*

கடமை கண் போன்றது' என்று நமக்கு உணர்த்திய, குறளோவியம் தந்த கலைஞர் அவர்களின் வழியில் வந்து, பெரியாராக, அண்ணாவாக, கலைஞராக எங்களுக்குத் திகழும் நமது மாண்புமிகு முதல்வர் அவர்களே! காரிருள் நீக்கிடும் கழகக் காவலனாய், அரசியல் நாகரிகத்தில் அகிலத்திற்கே அரிச்சுவடியாய், அகில உலகமே திரும்பிப் பார்க்கும் வண்ணம் இந்தியத் திருநாட்டின் முதல்வர்களில் முதன்மையானவராய், கழகத்தின் தளபதியாய், எங்களுக்கெல்லாம் தலைவராய், தமிழ்நாட்டிற்கு விடியலாய், அனைத்துத் துறைகளுக்கும் புத்துயிர் அளித்து, புதுமையைப் புகுத்தி, தமிழகத்திற்கு விடியல் மட்டுமே பாதை எனும் பாராளும் தத்துவத்தைப் பண்போடு கற்ற நமது மாண்புமிகு முதல்வரே! தமிழகத்திற்கு விடியலைத் தந்த உதயசூரியனே! 'உங்கள் தொகுதியில் முதல்வர்' என்ற உன்னதமான திட்டம்மூலம் மனு கொடுத்தவர்களுக்கெல்லாம் நீதி வழங்கிய மனுநீதிச் சோழனே! தமிழகத்தில் உதயமாகும் இளைய சூரியனே, எங்கள் இளைஞர் அணி அமைப்பாளரே! மற்றும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கையில் இருக்கும் வேலாய், எனக்கு அரசியல் வழிகாட்டியாய், என்னை துரிஞ்சாபுரம் ஒன்றியக் கழகச் செயலாளராக்கி, கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட என்னை தலைவருக்குப் பரிந்துரைத்து, எனது வெற்றிக்கு எல்லாமுமாய் இருந்த, உழைப்பால் உயர்ந்த மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அண்ணன் அவர்களுக்கும், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சி.என். அண்ணாதுரை அவர்களுக்கும், மாநில மருத்துவர் அணி துணை அமைப்பாளர் டாக்டர் எ.வ. கம்பன் அவர்களுக்கும், கலசப்பாக்கம், புதுப்பாளையம், ஜவ்வாதுமலை, போளூர் ஒன்றியக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழகத் தோழர்கள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் ஆகியோருக்கும், கலசப்பாக்கம் தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், எனது தந்தையுமாகிய திரு. பெ.சு. திருவேங்கடம் அவர்களுக்கும் மற்றும் எனது சகோதரர்கள், மனைவி, பிள்ளைகள், என் உயர்வுக்குக் காரணமான துரிஞ்சாபுரம் ஒன்றியக் கழக நிர்வாகிகள் ஆகியோருக்கும், என் பிறந்த ஊரான பெரியகாலாம்பாடி கிராம மக்களுக்கும் மற்றும் கலசப்பாக்கம் தொகுதி வாக்காளர் பெருமக்கள் அனைவருக்கும் ,பாதம் தொட்டு என் நன்றியை இந்தச் சபையில் தெரிவித்து, என் உரையைத் தொடங்குகின்றேன்.

2021 ஆகஸ்ட் 26] [திரு. பெ.சு.தி. சரவணன்]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பேரன்பிற்கும், பெருமதிப்பிற்கும் உரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் அரசுக் கொறடா அவர்களுக்கும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து"

ஒரு தலைமுறையில் பெறும் கல்வி அறிவானது, ஏழேழு தலைமுறைக்கும் பாதுகாப்பாக அமையும் என்பதுதான் இக்குறளின் பொருள்.

என் முதல் பேச்சானது கல்விக்கான மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் ஆரம்பிப்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியே. இந்தியாவில் முதல் மதிய உணவுத் திட்டம், ஆயிரம்விளக்கில் காலை உணவுத் திட்டம் போன்று, இந்தியாவையே பின்தொடர வைத்த கல்வி மேம்பாட்டுத் திட்டங்களை இந்த மாமன்றம் 1920 ஆம் ஆண்டு முதல் 100 ஆண்டுகளாக முன்னெடுத்து வருகிறது என்பது பெருமைக்குரியது.

ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது கல்வியிலிருந்துதான் ஆரம்பிக்கிறது. அதனை உணர்ந்துதான், ஒவ்வொரு வருடமும் நாம் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரித்துக்கொண்டே போகிறோம். இந்த வருடம் பள்ளிக் கல்விக்கு சுமார் ரூ.32,600 கோடி நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். கல்வி கண் போன்றது. கல்வித் துறையை 1997 ஆம் ஆண்டு பள்ளிக் கல்வித் துறை என்றும் உயர் கல்வித் துறை என்றும் இரண்டாகப் பிரித்து, கல்வியின் தரம் உயர மக்களுக்காக கல்வித் துறையைச் சிறப்பாகச் செயல்பட வைத்தவர் நம்முடைய மறைந்த தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள். கொரோனா நோய்த் தொற்றால் அதிகமாகப் பாதிக்கப்பட்டது நம்முடைய கிராமப் பள்ளி மாணவர்கள்தான். இதை உணர்வுபூர்வமாக உணர்ந்துதான், இதை ஈடு செய்யும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கல்வி முயற்சிகளுக்காக மேலும் 200 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இந்த நல்ல நேரத்தில் நான் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. பெ.சு.தி. சரவணன்] [2021 ஆகஸ்ட் 26

முற்பகல் 11–35

மேலும், 10 ஆம் வகுப்பு, 11 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு ஊக்கத் தொகையாக தலா 1,500 ரூபாயும், 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு தலா 2,000 ரூபாயும் வழங்குவது இடைநிற்றலைக் குறைக்கும். 2021–2022 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ.262.16 கோடி ஒதுக்கியது வரவேற்கத்தக்க அம்சமாகும். 1 முதல் 12–வது வகுப்புவரை படிக்கும் மாணவர்களின் தாய், தந்தை இறந்தாலோ, நிரந்தர ஊனம் ஏற்பட்டாலோ அவர்களின் கல்வி பாதிக்காத வண்ணம் 75,000 ரூபாய் வைப்பு நிதியாக மாணவர்களுக்குக் கொடுப்பதும், இதற்கான நிதியாக 5.70 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதும் வரவேற்கத்தக்கது.

மேலும், கொரோனாவில் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு 5,00,000 ரூபாய் வைப்புநிதியாகச் செலுத்தப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்கும் இந்த நல்ல நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இலவச bus pass, இலவசச் சீருடை, இலவசப் புத்தகப் பை, இலவச கணினி, இலவச சைக்கிள், சத்துணவு போன்றவை மாணவர்கள் பள்ளிக்கு வர, கல்வி பயில உதவுகின்றன.

மேலும், கல்வித் தொலைக்காட்சி ஆரம்பிக்கப்பட்டதாக முன்னாள் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்; அதற்காக மகிழ்ச்சி. ஆனால், கலைஞர் வழங்கிய வண்ணத் தொலைக்காட்சி பெட்டியால்தான் அந்தக் கல்வித் தொலைக்காட்சியின் பயனை மாணவர்கள் அடைந்தார்கள் என்பதை இந்த நல்ல நேரத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். மாணவர்களின் நலன் கருதி, 10, 11, 12–வது வகுப்பு மாணவர்களின் தேர்வு நேரத்தை, இரண்டரை மணி நேரத்திலிருந்து மூன்று மணி நேரமாக அதிகரித்தது, இந்த அரசின் நல்ல திட்டங்களில் வரவேற்கத்தக்கது. மாணவர்களின் மதிப்பெண் சான்றிதழ்களில் மாணவர்களின் பெயரோடு பெற்றோரின் பெயரும் இடம்பெற்றதும் மகிழ்ச்சியே! சிறையில் இருப்பவர்களுக்கும் கல்வி கொடுக்கும் சிறப்பு எழுத்தறிவுத் திட்டத்தின்மூலம் 1,844 சிறைவாசிகள் பயனடைந்தார்கள் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மலைப் பகுதிகளில் பயிலும் மாணவர்களுக்கு கம்பளிச் சட்டை வழங்கியது ஒரு சிறப்பு அம்சமாகும்; அதை வரவேற்கிறேன். விபத்தில் மாணவர்கள் இறந்தால் 1,00,000 ரூபாய்; பெரிய காயங்கள் ஏற்பட்டால்

2021 ஆகஸ்ட் 26] [திரு. பெ.சு.தி. சரவணன்]

50,000 ரூபாய்; சிறிய காயம் ஏற்பட்டால் 25,000 ரூபாய் என்று மாணவர்களின் குடும்பத்திற்கு நிவாரணமாக வழங்கப்படும் என்பது வரவேற்கத்தக்க அம்சமாகும்.

தனியார் பள்ளிகளின் கல்விக் கட்டணத்தை முறைப்படுத்த வேண்டும். தனியார் பள்ளிகளுக்கு நிகராக அரசுப் பள்ளிகளில் ஆங்கிலக் கல்வி ஆரம்பிக்கப்பட்டது, மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு 10 மற்றும் 12–வது வகுப்பு பொதுத் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்திருப்பது மகிழ்ச்சியானதாகும். பார்வைத் திறன் குறைந்தவர்கள் மற்றும் விபத்து ஏற்பட்டு காயமடைந்த மாணவர்களுக்கு தேர்வு நேரத்தில் அவர்கள் சொல்வதை எழுதுவதற்கு உதவியாளராக ஒருவரும், கூடுதலாக ஒரு மணிநேரம் தேர்வு எழுத அனுமதியும் அளித்தது வரவேற்கத்தக்க அம்சமாகும்.

மேலும், கல்வி வளர்ச்சிக்கு அண்ணா நூற்றாண்டு நூலகம், மதுரையில் தலைவர் கலைஞர் பெயரால் நூலகம், அனைத்து ஊராட்சிகளிலும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்மூலம் அமைக்கப்பட்ட நூலகங்கள் சீரமைக்கப்படுவது, மாவட்ட நூலகங்கள் மற்றும் கல்வி வளர்ச்சிக்கு உதவும் நூலகங்களைக் கணினிமயமாக்குவது, பார்வையற்றவர்களுக்கு ஒலி நூல்களை உருவாக்குவது என்ற இந்த அரசின் திட்டங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

எனது கலசப்பாக்கம் தொகுதியில் ஜவ்வாது மலைப் பகுதி இருக்கிறது. இதுபோன்ற மலைப் பிரதேசங்களில் உள்ள பள்ளிகளுக்கு பல ஆசிரியர்கள் பள்ளிக்கு வருவதேயில்லை. தூரம் அதிகமாக இருப்பதால் அதிகாரிகளும் அடிக்கடி செல்வதில்லை. இதுபோன்ற மலைப் பகுதி மக்கள் அதிகம் வாழும் பகுதிகளுக்கென்று ஒரு சிறப்பு அதிகாரியை நியமித்தால், அங்கு கல்வி வளர்ச்சி கூடும். ஜவ்வாது மலைப் பகுதி மட்டுமின்றி, மற்ற பகுதிகளுக்கும் ஒரு சிறப்பு அதிகாரியை நியமித்து, அடிக்கடி பள்ளிகளுக்குச் சென்று ஆய்வு நடத்தினால் மட்டுமே, மலைப் பகுதியில் இருக்கும் மாணவர்களின் கல்வித் தரம் உயரும் என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்கிறேன்.

அதைப்போல மலைப் பகுதியில் வனத் துறை பள்ளிகள் வனத் துறையால் நடத்தப்படுகின்றன. ஒரே கல்விமுறை

[திரு. பெ.சு.தி. சரவணன்] [2021 ஆகஸ்ட் 26

வெவ்வேறு துறைகளால் நடத்தப்படுவதால், அங்கே ஆசிரியர்கள் வனத் துறையாலும், மாணவர்கள் கல்வித் துறையாலும் கண்காணிக்கப்படுகிறார்கள். இதனால் கல்வித் துறை மற்றும் வனத் துறையின் ஒருமித்த கருத்து ஒரு சில நடவடிக்கைகளில் எட்ட முடிவதில்லை. வனத் துறையினருக்கும் இது ஒரு கூடுதல் பொறுப்பாகவே இருக்கிறது. எனவே, வனத் துறை பள்ளிகளையும் கல்வித் துறையின்கீழ் எடுத்துக் கொண்டுவரலாம். இதனைப் பரிசீலிக்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஜவ்வாது மலையில் வனத் துறைக்குச் சொந்தமான சுமார் 150 கிலோ மீட்டர் சாலைகள் உள்ளன. இந்தச் சாலைகள் பல ஆண்டுகளாகப் பராமரிக்கப்படவில்லை. இரண்டு சக்கர வாகனங்கள்கூட செல்ல முடியாத வகையில் இச்சாலைகள் உள்ளன. மலைப் பகுதிகளில் இருக்கும் பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் சரிவரச் செல்லாததற்கு இந்தச் சாலைகளும் ஒரு காரணம் என்று இந்தச் சபையில் நான் பதிவு செய்கிறேன். கடந்த காலம் முதல் அரசுப் பள்ளிகளைத் தரமுயர்த்தும் அறிவிப்புகள் ஆகஸ்ட் மாதம்தான் வெளிவருகிறது; செப்டம்பர் மாதம்வரை பள்ளியில் மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. இது நிருவாகச் சிக்கலை ஏற்படுத்துகிறது. தரமுயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கு தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் உரிய நேரத்தில் நியமிக்கப்பட வேண்டும். ஆசிரியர்கள் பணி மாறுதல்களை பள்ளி துவங்கும்முன் செய்ய வேண்டும்.

முற்பகல் 11–40

மேலும், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நல்லாட்சியில், 2009–2010 மற்றும் 2010–2011, ஆம் கல்வியாண்டுகளில் பதிவு மூப்பு அடிப்படையில் சான்றிதழ் சரிபார்ப்பு முடிந்து, ஆசிரியர் பணிக்காகக் காத்திருக்கும் 5,000 பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரி தமிழ் ஆசிரியர்களுக்கு கருணை அடிப்படையில் பணி வழங்க வேண்டும் என்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மாணவர்களின் சேர்க்கைக்கேற்றவாறு புதிய கட்டடங்கள், ஆய்வகங்கள் மற்றும் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்

2021 ஆகஸ்ட் 26] [திரு. பெ.சு.தி. சரவணன்]

அவர்கள் மூலமாக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், என்னுடைய கலசப்பாக்கம் தொகுதி, புதுப்பாளையம் ஒன்றியம், காஞ்சி அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி 2013 ஆம் ஆண்டு தரமுயர்த்தப்பட்டது. ஆனால், அந்தப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாக இருந்தபோது எப்படியிருந்ததோ அப்படியேதான் இன்றும் உள்ளது. தற்போது சுமார் 480 மாணவிகள் படிக்கும் அந்தப் பள்ளிக்கூடத்தில் எந்த வசதியும் இல்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கழிப்பிட வசதிகூட சரிவர இல்லை. அதைச் சரி செய்ய வேண்டும் என்பது மாணவிகளின் கோரிக்கையாக இருக்கிறது. கடந்த ஆட்சியில் எதுவும் செய்யப்படவில்லை.

அரசு ஒவ்வொரு பள்ளியிலும் நூலக வசதியை ஏற்படுத்தி, ஆண்டுதோறும் பள்ளிகளுக்கு நூலக நிதியை ஒதுக்கீடு செய்கிறது. மாணவர்களின் படிப்பிற்கேற்ற, வயதிற்கேற்ற புத்தகங்களை வாங்கிக் கொள்வதற்காக 2020–2021 ஆம் கல்வியாண்டில் ரூ.30.18 கோடி செலவிடப்பட்டுள்ளது. பள்ளிகளில் மாணவர்களுக்குத் தேவையான நூல்களை, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் புத்தகக் கண்காட்சியில் வாங்க அனுமதிக்க வேண்டும். ஆனால், கடந்த ஆட்சியில், கடந்த 3 ஆண்டுகளாக புத்தகங்களை அரசே வாங்கி அனுப்பியது. இது பள்ளி மாணவர்களுக்கு உதவுவதாகத் தெரியவில்லை. பள்ளிகள் திறக்கப்படுவதற்கு முன்பு மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கட்டாயம் கொரோனா தடுப்பூசி போட வேண்டும் என்பதை கோரிக்கையாக வைக்கிறேன்.

ஆரம்பக் கல்வி முதலே விளையாட்டை ஊக்குவிக்க வேண்டும். அதற்குத் தேவையான விளையாட்டுச் சாதனங்களை வழங்கி, மாணவர்களை சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற வைக்க பயிற்சியளிக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். சதுரங்க விளையாட்டிற்காக ரூ.22 இலட்சம் ஒதுக்கியது வரவேற்கத்தக்கது. ஒன்றிய அரசு வெளியிட்ட கல்வி தரக் குறியீட்டு அறிக்கையில் தமிழ்நாடு இரண்டாவது இடத்திலும், பள்ளி உட்கட்டமைப்பு, சமத்துவம், நிருவாகம் ஆகியவற்றில் நாட்டிலேயே சிறந்து விளங்கி வருவதும் பெரிய சிறப்பாகும். கற்றல் அடைவுகளில், இந்தியாவில் உள்ள 37 மாநிலங்களில் தமிழ்நாடு 23–வது இடத்தில் வருவது மன வருத்தத்தைத் தருகிறது.

[திரு. பெ.சு.தி. சரவணன்] [2021 ஆகஸ்ட் 26

மேலும், கடந்த ஆட்சியில் ** தகுதி இல்லாத பொருள் என தூக்கி எறிந்த விலையில்லா மிதிவண்டிகள் அனைத்து தமிழக மாணவர்களுக்கும் வழங்கப்பட்டன. இதில் வேடிக்கை என்னவென்றால், சைக்கிளில் ஒட்டப்பட்ட ** நீக்கப்படாமல் வழங்கப்பட்டது. இதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சைக்கிளை யாரும் ஓட்டிச் செல்லவில்லை, தள்ளிக்கொண்டுதான் வீட்டிற்குச் சென்றார்கள் என்பதை இந்த அவையில் பதிவு செய்கிறேன்.

கடந்த காலங்களில் பாட நூல்களை மாற்றியமைத்தது வரவேற்கத்தக்கது; என்றாலும், தமிழ் மொழியைவிட சமஸ்கிருத மொழி பழமையானது என்று பாட நூலில் பதிவாகியிருந்தது. தமிழ் அறிஞர்கள், ஆசிரியர்கள் சுட்டிக்காட்டியும் மறுபதிப்பிலும் இதனை மாற்றாதது கடந்த அரசின் பொறுப்பற்ற செயல். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கன்னிப் பேச்சு பேசுகின்றார். யாரும் குறுக்கீடு செய்ய வேண்டாம். (குறுக்கீடு) குற்றச்சாட்டுகள் இருந்தால் அது நீக்கப்படும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் கன்னிப் பேச்சு பேசுகிறார். எனவே, அமைதியாக அமரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பெ.சு.தி. சரவணன்: மறுபதிப்பிலும் மாற்றவில்லை. கடந்த ஆட்சியின் செயல் நமக்கு அப்பட்டமாகத் தெரிகிறது. பாரதியின் தலைப்பாகைக்கு காவி சாயம் பூசி விசுவாசத்தை வெளிப்படையாகக் காட்டியது கடந்த அரசு. கொரோனா நோய்த் தொற்று முதல் அலையின்போது பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட கொரோனா பாதுகாப்புக் கருவிகள் பெரும்பாலும் செயல்படாதவையாக இன்றளவும் உள்ளன. இனிமேல் செயல்படக்கூடிய தரமான கொரோனா தடுப்புச் சாதனங்களை நம்முடைய அரசு வழங்க வேண்டும் என்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மிகக் குறைந்த மாணவர்கள்—ஆசிரியர்கள் சதவிகிதம் கொண்ட மாநிலமாக தமிழகம் உள்ளது. இது தொடக்கப் பள்ளியில் 21.80 சதவிகிதமாகவும், நடுநிலைப் பள்ளியில் 24.45 சதவிகிதமாகவும்,

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2021 ஆகஸ்ட் 26] [திரு. பெ.சு.தி. சரவணன்]

உயர்நிலைப் பள்ளியில் 19 சதவிகிதமாகவும், மேல்நிலைப் பள்ளியில் 27 சதவிகிதமாகவும் உள்ளது மகிழ்ச்சியளிக்கிறது. ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 2014 ஆம் ஆண்டு முதல் சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். சென்னை மாநகராட்சி ஆசிரியர்கள் பள்ளிக் கல்வித் துறையின்மூலம் நடைபெறும் பணி மாறுதல் பொதுக் கலந்தாய்வில் கலந்துகொண்டு அலகு விட்டு அலகு பணியிட மாறுதல் பெறும் வகையில் ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று இந்த மாமன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன். மாநகராட்சிப் பள்ளிகளிலிருந்து அரசுப் பள்ளிகளுக்கு பணி மாறுதல் பெற்ற ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு வழங்க வேண்டும் என்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–45

மேலும், உயர் கல்வித் துறைமூலம் இந்த ஆண்டு 10 கலைக் கல்லூரிகள் துவங்கப்படும் என்ற அறிவிப்புக்கு, நம்முடைய அரசுக்கு உண்மையிலேயே நன்றி சொல்கிறேன். திருவண்ணாமலை மாவட்டத்தில் அரசு கலைக் கல்லூரி ஒன்று இருக்கிறது. அங்கு ஓராண்டிற்கு சுமார் 12 ஆயிரம் விண்ணப்பங்கள் பெறப்படுவதாகத் தெரிகிறது. இதைக் கருத்தில் கொண்டு, இந்த 10 கல்லூரிகளில் திருவண்ணாமலை மாவட்டத்திற்கு ஓர் அரசுக் கலை கல்லூரி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, கலசப்பாக்கம் தொகுதியில் ஒரு கல்லூரியை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களை இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். மேலும், திருவண்ணாமலை மாவட்ட மக்களின் கோரிக்கையாகவும், எங்களுடைய மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையாகவும் இதை நமது உயர் கல்வித் துறை அமைச்சர், பொதுப் பணித் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு முதல்வர் அவர்களின்முன் வைக்கிறேன்.

திருவண்ணாமலை அரசினர் கலைக் கல்லூரி என்பது 1966 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. நம்முடைய மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்கள்கூட அந்தக் கல்லூரியில் படித்தவர்தான். அந்தக் கல்லூரியின் மாணவர் பேரவையின் தலைவராகக் கூட இருந்தார். அந்தக் கல்லூரிக்கு 'கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி' என்று பெயர் சூட்டப்பட்டது. இடையில் அந்தப் பெயர் மாற்றப்பட்டது. மீண்டும் அந்தக் கல்லூரிக்கு 'கலைஞர் கருணாநிதி

[திரு. பெ.சு.தி. சரவணன்] [2021 ஆகஸ்ட் 26

கலைக் கல்லூரி' என்று (மேசையைத் தட்டும் ஒலி) பெயர் சூட்ட வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாக மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், மாண்புமிகு துணை சபாநாயகர் மூலமாகவும் மற்றும் சக சட்டமன்ற உறுப்பினர்கள், செய்யாறு தொகுதி சட்டமன்ற உறுப்பினர், வந்தவாசி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் மூலமாகவும், எங்கள் மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களின் கோரிக்கையாகவும் இதை நான் பேரவைமுன் வைக்கிறேன். இந்தக் கல்லூரிக்கு கலைஞர் பெயரைச் சூட்ட வேண்டுமென்று நான் அரசைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் ஓராயிரம் பிரச்சினைகள் உள்ளன, ஓராயிரம் குறைகள் உள்ளன. அதில் சிலவற்றை இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். புதுப்பாளையம் பேரூராட்சிக்குப் புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், முக்கியக் கோரிக்கைகளை மட்டும் பேசிவிட்டு, மற்றவற்றை எழுதிக்கொடுத்தால் அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளலாம். ஏனென்றால், நேரம் அதிகமாகிவிட்டது. எனவே, உங்கள் உரையை விரைவில் முடித்துவிடுங்கள்.

திரு. பெ.சு.தி. சரவணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல கோரிக்கைகள் இருந்தாலும் பத்து கோரிக்கைகளை மட்டும்தான் நான் இங்கே சொல்லப்போகிறேன். நான் உங்களுக்கும் ஒன்றியச் செயலாளர், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் ஒன்றியச் செயலாளர். இதைக் கருத்தில் கொண்டு (சிரிப்பு) எனக்கு சிறப்புச் சலுகை தர வேண்டுமென்று உங்களை இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

புதுப்பாளையம் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டுகிறேன். திருவண்ணாமலைக்கு அடுத்தபடியாக பர்வதமலைக்குத்தான் பௌர்ணமி காலத்தில் அதிக பக்தர்கள் வருகிறார்கள். இதற்கு rope car வசதி ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன். எலத்தூர் மோட்டூர் நட்சத்திர கோயில் குடமுழுக்கு விழா நடத்த வேண்டுகிறேன்.

2021 ஆகஸ்ட் 26] [திரு. பெ.சு.தி. சரவணன்]

தென்மாதிமங்கலத்தில் சுமார் 33 ஏக்கர் கோயில் நிலம் உள்ளது. அறநிலையத் துறைமூலம் அங்கு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கலசப்பாக்கத்தில் நீதிமன்றம் தனியார் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதற்கு புதிய நீதிமன்றக் கட்டடம் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் ஒன்றியம், கேட்டவரம்பாளையத்தில் வேளாண்மைத் துறைக்குச் சொந்தமாக இடம் வாங்கப்பட்டுள்ளது. அந்த இடத்தில் வேளாண்மை விற்பனைக்கூடம் இந்த ஆண்டு அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எலத்தூர் மோட்டூர் என்ற இடத்தில் பேருந்துப் பணிமனை 2013, 2014 ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்டது. ஆனால், இன்றுவரை அது பயன்பாட்டுக்கு வரவில்லை. சுமார் 7 ஆண்டுகளாக அது பயன்பாட்டுக்கு வராமல் இருக்கிறது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அதை பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்மூலமாக இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், செய்யாற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கு கடந்த ஆட்சியில் 3 முறை பூஜை போட்டார்கள். அவ்வாறு பூஜை போட்டு, ஆரம்ப விழா நடத்தினார்கள். பழங்கோயில் மோட்டூர் பாலம், கீழ்ப்பத்துறை பூவாம்பட்டு பாலம், கீழ்த்தாமரப்பாக்கம், தென்மாதிமங்கலம் பாலம் ஆகிய 3 பாலங்களுக்கு 3 முறை பூஜை போட்டார்கள். ஆனால், இதுவரையிலும் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைப் பரிசீலித்து, இந்த 3 பாலங்களையும் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யுமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஆதமங்கலம் புதூரில் புதிய காவல் நிலையம் அமைத்துத் தருமாறும், ஜவ்வாது மலையைச் சுற்றுலாத்தலமாக அறிவிக்க வேண்டுமென்றும் கோருகிறேன்.

கலசப்பாக்கம், ஜவ்வாதுமலை, புதுப்பாளையம் ஒன்றியங்களிலுள்ள மருத்துவமனையை 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதியிலுள்ள மேல்நிலைப் பள்ளிகள் அடிப்படை வசதிகள்

[திரு. பெ.சு.தி. சரவணன்] [2021 ஆகஸ்ட் 26

இல்லாமல் இருக்கின்றன. பல பள்ளிகள் கடந்த ஆட்சியில் நபார்டு வங்கியின்மூலம் கட்டப்பட்டன. ஒரு சில பள்ளிகளை ஊருக்கு ஒதுக்குப்புறமாக ஏரியின் ஓரத்தில் கட்டியிருக்கிறார்கள். அவையெல்லாம் பாதுகாப்பில்லாமல் இருக்கின்றன. அந்தப் பள்ளிகள் அனைத்துக்கும் சுற்றுச்சுவர் கட்டித் தரும்படி மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களை இந்த மன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–50

மேலும், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நாகப்பாடி கிராமத்தில் உள்ள அரசு polytechnic கல்லூரிக்கு அடிப்படை வசதிகள் சரிவர இல்லாமல் இருக்கின்றன. இந்த பாலிடெக்னிக் கல்லூரி நம்முடைய கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் முயற்சியின் மூலமாக கட்டப்பட்டது. இந்த பாலிடெக்னிக் கல்லூரி சுற்றுச்சுவர் இல்லாமலும், வளர்ச்சியின்றியும் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் பல முக்கியமான கோரிக்கைகள் இருக்கின்றன.

நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் வீட்டு மனைப் பட்டா கொடுப்பதைத் தடை செய்துள்ளதாக அதிகாரிகள் சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலித்து நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் வீட்டு மனைப் பட்டா வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கோரிக்கைகளை எல்லாம் கொடுத்தால் பதிவு செய்துகொள்ளலாம். ஏனென்றால் இன்னும் பல உறுப்பினர்கள் பேச வேண்டும்.

திரு. பெ.சு.தி. சரவணன்: நான் 10 கோரிக்கைகள்தான் சொல்லியிருக்கிறேன். மீதி கோரிக்கைகளெல்லாம் ஒரு புத்தகம் அளவு இருக்கிறது. அவற்றை நான் இந்தச் சபையில் படித்ததாகக் கருதி, நீங்கள் அவைக் குறிப்பில் ஏற்ற வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய இந்த முதல் உரையை கல்வித் துறை மானியக் கோரிக்கையில் ஆரம்பிப்பதற்கு உதவிபுரிந்த அத்தனை பேருக்கும்,

2021 ஆகஸ்ட் 26] *[திரு. பெ.சு.தி. சரவணன்]*

மாண்புமிகு முதல்வர், மாண்புமிகு இளைஞரணி செயலாளர், மாண்புமிகு துணை சபாநாயகர், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர், மருத்துவர் எ.வ. கம்பன், கலசப்பாக்கம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பொது மக்கள், என்னுடைய தந்தையார் பெ.சு. திருவேங்கடம் மற்றும் நான் வெற்றி பெற பாடுபட்ட அத்தனை நல்ல உள்ளங்களையும் இந்த நல்ல நேரத்தில் பாதம் தொட்டு வணங்கி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ** சைக்கிள் என்ற அந்த வார்த்தை நீக்கப்படுகிறது. அடுத்து, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், திருவண்ணாமலை அரசு கலைக் கல்லூரியினுடைய பெயர் மாற்றத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். அப்போது உயிரோடு இருப்பவருடைய பெயர் வைக்கக் கூடாது என்ற காரணத்தினால் எடுக்கப்பட்டது. இப்போது கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், எல்லோருடைய உள்ளங்களிலும் நிறைந்திருக்கின்ற காரணத்தினால் (மேசையைத் தட்டும் ஒலி) திருவண்ணாமலை அரசு கலைக் கல்லூரிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு 'கலைஞர் அரசு கலைக் கல்லூரி' என்று பெயர் சூட்டப்படும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.*

***திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் உள்ளிட்ட இந்த அவையோர் அனைவருக்கும் என்னுடைய அன்பு வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[*2021 ஆகஸ்ட் 26*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தமிழ்நாட்டில் இருக்கின்றவர்கள் மட்டுமல்ல, எட்டு கோடி தமிழர்களுடைய உள்ளங்களெல்லாம் நிறைந்திருக்கின்ற அன்புத் தலைவர் அருமை அண்ணன் கலைஞர் அவர்களுடைய திருப்பெயரை எங்கள் திருவண்ணாமலை மாவட்டத்தில் இருக்கின்ற கலைக் கல்லூரிக்கு 'கலைஞர் அரசு கலைக் கல்லூரி' என பெயர் சூட்டுவதற்காக அனுமதித்த தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் திருவண்ணாமலை மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: கடைசி மனிதனுக்கும் ஜனநாயகம், எளிய மக்களுக்கும் அதிகாரம் என்ற முழக்கத்தோடு களத்தில் நின்று, ஒடுக்கப்பட்ட விளிம்புநிலை மக்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கின்ற சமூக நீதிப் போராளி எங்களுடைய தலைவர், எழுச்சித் தமிழர் திரு. தொல். திருமாவளவன் அவர்கள், எளிய மனிதனான என்னை அதிகாரப்படுத்தி இன்றைக்கு இந்த மன்றத்தில் நிற்க வழியமைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இந்த மன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சின்னஞ்சிறு வயதிலேயே, பொது வாழ்வில் ஈடுபடுவதற்கு என்னை ஊக்கப்படுத்தி, இந்த நிலைக்கு நான் வருவதற்கு அடித்தளமிட்டவர் மறைந்த என்னுடைய தந்தை ஆலூர் கல்வீடு ஜெய்னுல் ஆபிதீன் அவர்கள். அவர்களை நன்றியோடு இந்த மன்றத்தில் நான் நினைவுகூர்கிறேன்.

நாகப்பட்டினம் தொகுதியில் நான் போட்டியிட்டபோது தேர்தலுக்கு மூன்று நாட்களுக்கு முன்பு நாகப்பட்டினம் மாவட்டத்தில் போட்டியிட்ட தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களையெல்லாம் அறிமுகப்படுத்துவதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் தளபதியார் அவர்கள் வேதாரண்யத்திற்கு வந்தார். அன்றைக்கு அவர்கள், நான் வெற்றி பெற வேண்டும் என்பதில் காட்டிய உறுதி, ஆர்வம் அதுதான்

2021 ஆகஸ்ட் 26] [திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்]

இன்றைக்கு என்னை இந்த மன்றத்தில் கொண்டுவந்துவிட்டிருக்கிறது. நம்முடைய கூட்டணி வேட்பாளர்கள் அத்தனை பேரும் வெற்றி பெறுவதற்காக அவர் உழைத்த உழைப்புதான் இன்றைக்கு இந்த ஆட்சியாக உருவெடுத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–55

அதேபோல, வயது மூப்பையும் பொருட்படுத்தாமல், உடல்நலிவையும் பொருட்படுத்தாமல் நாகப்பட்டினம் தொகுதிக்கு வந்து, எனக்காகப் பரப்புரை செய்த திராவிடர் கழகத் தலைவர், ஆசிரியர் அவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர், அன்புச் சகோதரி திருமதி கனிமொழி அவர்களுக்கும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாநிலச் செயலாளர், அன்பு அண்ணன் திரு. முத்தரசன் அவர்களுக்கும், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியினுடைய தலைவர்கள் அனைவருக்கும் இங்கே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னை வெற்றி பெறச் செய்த நாகப்பட்டினம் தொகுதி மக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் வெற்றி பெற வேண்டுமென்பதற்காக, நாகப்பட்டினம் தொகுதியில் சுழன்று பணியாற்றிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாவட்டப் பொறுப்பாளர், அண்ணன் என். கௌதமன் உள்ளிட்ட, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் முன்னணி நிர்வாகிகள், தொண்டர்கள், தோழர்கள் குறிப்பாக, விடுதலை சிறுத்தைகள் கட்சியினுடைய முன்னணி நிர்வாகிகள், தோழர்கள் அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு, இந்த ஆட்சியைப் பற்றி பாராட்டக்கூடியவர்கள், ஆளும் தரப்பிலிருந்துதான் பாராட்டுகிறார்களா என்று மட்டுமல்ல, நாமே பார்க்கின்ற அளவுக்கு எதிர் தரப்பிலிருந்துகூட பாராட்டு மொழிகள் வந்துகொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, முன்னாள் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், இந்த மன்றத்தினுடைய மூத்த உறுப்பினர், அண்ணன் திரு. செங்கோட்டையன் அவர்கள் இன்றைக்குப் பேசுகின்றபோது, எந்தத் தரப்பிலிருந்து பேசுகின்றார்கள் என்று நாமே ஒரு கனம் கிள்ளிப் பார்க்கக்கூடிய அளவிற்கு பாராட்டு மொழிகள் வந்ததைப் பார்க்க முடிந்தது. அந்தளவுக்கு இன்றைக்கு

[திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்] [2021 ஆகஸ்ட் 26

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய செயல்பாடு எல்லோரும் வியக்கும்வண்ணம், மாற்றுக் கருத்துடையவர்கள்கூட ஏற்கும்வண்ணம் அமைந்திருக்கிறது.

மேலும், சமூக ஊடகங்களில் இளைஞர்கள் எழுதியிருப்பதை நான் பார்த்தேன். அதில், 'அவரை எதிர்க்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுத்தோம்; முதலமைச்சரைப்போல் பணியாற்றினார். முதலமைச்சராகத் தேர்ந்தெடுத்தோம்; இந்திய நாட்டினுடைய பிரதமரைப்போல் பணியாற்றுகிறார்' என்று சொல்லக்கூடிய அளவுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயல்பாட்டை மக்கள் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டு நாட்களுக்கு முன்பு ABP என்ற செய்தி நிறுவனமும், C–Voters என்கிற நிறுவனமும் இணைந்து ஒரு கருத்துக்கணிப்பை எடுத்திருக்கிறார்கள். அந்தக் கருத்துக்கணிப்பு குறித்து தொலைக்காட்சியில் பேசுவதற்காக என்னையும், அருமைச் சகோதரர், எழும்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. பரந்தாமன் அவர்களையும் அழைத்திருந்தார்கள். நாங்கள் சென்று அந்த விவாதத்தில் பங்கேற்றோம். அப்போது அவர்கள், இந்த 100 நாட்கள் ஆட்சியைப் பற்றி பாரதிய ஜனதா கட்சிக்கும், அ.இ.அ.தி.மு.க.–வுக்கும் வாக்களித்தவர்களிடம் சென்று நாங்கள் கருத்து கேட்டோம் என்றும், அவர்கள், இந்த 100 நாள் ஆட்சியைப் பற்றி என்ன மதிப்பீடு செய்திருக்கிறார்கள் என்ற ஒரு முடிவையும் காட்டினார்கள். அதில், பெரும்பாலானோர், அதாவது, 75 சதவிகிதம் பேர், எதிர்க்கட்சிகளே கூட (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயல்பாடு முதிர்ச்சியான அணுகுமுறை, எல்லோரையும் அரவணைத்துக்கொள்கின்ற அந்தத் தன்மை, இதெல்லாம் தமிழ்நாடு அரசியலில் புதிதாக இருக்கிறது என்று வியந்து சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்கணிப்பு முடிவுகளைப் பார்த்தோம். இதெல்லாம் இன்றைக்கு, தமிழ்நாடு அரசியலை ஒரு புதிய திசைவழியை நோக்கி இட்டுச் செல்கிறது.

தமிழ்நாடு இந்தியாவுக்கே வழிகாட்டிய மாநிலமாகும். இந்தியாவிலேயே முதன்முதலில் சமூக நீதிக்காக அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்காக, தந்தை பெரியார் அவர்கள் தமிழ்நாட்டில் மிகப் பெரிய அளவுக்கு களத்தை கூர்தீட்டி, இந்தியாவின் கவனத்தை ஈர்த்தார். I belong to the Dravidian stock என்று பேசி பேரறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்றத்தையே அதிர வைத்தார். மாநில சுயாட்சிக்கான தீர்மானத்தை இயற்றி, பஞ்சாபிற்கும், வங்கத்திற்கும் வழிகாட்டினார் முத்தமிழறிஞர்

2021 ஆகஸ்ட் 26] [திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்]

கலைஞர் அவர்கள்.

2024 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலிலாவது இந்தியாவில் உள்ள எதிர்க்கட்சிகளினுடைய ஒற்றுமை சாத்தியப்பட்டுவிடாதா என்பது கனவாகப் பார்க்கப்படுகிறது; ஏக்கத்தோடு பார்க்கப்படுகிறது. அதற்கான முயற்சிகள் இப்போது எடுக்கப்பட்டிருக்கின்றன. 2024 ஆம் ஆண்டு தேர்தலிலாவது சாத்தியப்பட்டுவிடாதா என்ற கனவோடு பார்க்கப்படுகிற ஒன்றை, தமிழ்நாட்டில் 2019–லேயே சாத்தியப்படுத்தியவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். எதிர்க்கட்சிகளினுடைய ஒற்றுமைதான் இன்றைக்கு இந்தியாவே தமிழ்நாட்டை திரும்பிப் பார்க்கக்கூடிய அளவிற்கு மாற்றியிருக்கிறது. அப்படிப்பட்ட செயல்திறன் மிக்க, ஆளுமைத்திறன் மிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்கீழ் செயல்படுகிற உயர் கல்வித் துறை மற்றும் பள்ளிக் கல்வித் துறை ஆகிய இரண்டு துறைகளுக்கும் இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர்களாகப் பொறுப்பேற்று இருக்கின்றவர்களில், குறிப்பாக, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் திராவிட இயக்கக் குடும்பத்திலிருந்து வந்தவர்; மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் திராவிட இயக்கக் குடும்பத்திலிருந்து வந்தவர்; எனவே, இந்தக் கல்விக் கொள்கையை எப்படி வடிவமைக்க வேண்டும்; கல்விக் கொள்கை எந்தத் திசையை நோக்கி பயணிக்க வேண்டும் என்பதில் அவர்களுக்கு ஆழ்ந்த பார்வை உண்டு, தெளிவு உண்டு.

நண்பகல் 12–00

நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசுகிறபோது ஒன்றை இந்த அவையில் குறிப்பிட்டார்கள். நாங்கள் எதிரணியில் இருந்தாலும் சரி, ஆளுங்கட்சி வரிசையில் இருந்தாலும் சரி, எங்கே இருந்தாலும் கொள்கைக்காகத்தான் இருப்போம் என்று தெளிவுபடுத்தினார்கள். அந்தக் கொள்கையை நாம் அடுத்தடுத்த தலைமுறைக்கும் கொண்டு செல்வதற்கு, கல்விக் கட்டமைப்புகள்தான் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. இன்றைக்கு நாடு முழுவதும் வலது சாரிகள், இந்தியாவைக் கைப்பற்றியிருக்கிறார்கள். பல மாநிலங்களில் அவர்களுடைய ஆளுமை இருக்கிறது, ஆட்சி இருக்கிறது. எந்த அடிப்படையில் அவர்கள் ஆட்சியைக் கைப்பற்றினார்கள், இந்த அளவிற்கு வளர்ந்திருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும். கல்விக்

[திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்] [2021 ஆகஸ்ட் 26

கட்டமைப்புகளின்மீது அவர்கள் செலுத்திய கவனம்தான் இந்த நிலைக்கு அவர்களைக் கொண்டுபோய் சேர்த்திருக்கிறது. பள்ளிக் கல்வியிலிருந்து, உயர் கல்வியில் பல்கலைக்கழகங்கள் வரை முழுக்க முழுக்க அவர்களுடைய சிந்தனைப்போக்கில் வடிவமைத்திருக்கிறார்கள். அதனுடைய தாக்கம் தமிழ்நாட்டிலும் இருக்கிறது.தமிழ்நாட்டில் அண்மைக்காலங்களில் நாம் பார்க்கிறோம். நாம் புதிய கல்விக் கொள்கையை மறுக்கிறோம். புதிய கல்விக் கொள்கையை எதிர்க்கிறோம். மாநிலத்திற்கு என்று ஒரு கல்விக் கொள்கை வடிவமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழலில், தமிழ்நாட்டில், அண்மைக் காலங்களில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் நியமனங்களில் என்ன நடந்தது என்பது நமக்குத் தெரியும். பல்கலைக்கழக வளாகங்களில் என்ன நடந்தது என்பது நமக்குத் தெரியும். சேலம் பல்கலைக்கழகம் பெரியார் பெயரில் இருக்கிறது. ஆனால் பெரியார் கொள்கைக்கு முரணான அத்தனை செயல்களும் அந்தப் பல்கலைக்கழகத்தில் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன. அதுபோல மாநில சுயாட்சிக்கு வழிகாட்டியவர், பேரறிஞர் அண்ணா. அவர்களுடைய பெயரால் அமைக்கப்பட்டிருக்கிற அண்ணா பல்கலைக்கழகத்திலே மாநில சுயாட்சிக்கு எதிரான அத்தனை அம்சங்களும் அரங்கேறியதை நாம் பார்த்தோம். இவையெல்லாம் நமக்கு வேதனையை அளிக்கக்கூடிய, வலியைத் தரக்கூடிய ஒன்று.

நூற்றாண்டு கால போராட்டத்தினுடைய விளைவாகத்தான் இதையெல்லாம் நாம் சாத்தியப்படுத்தினோம். சமூக நீதி உரிமைகளையெல்லாம் பறிக்கக்கூடிய வகையில், மாநில சுயாட்சிக்கு வேட்டு வைக்கக்கூடிய வகையில் பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர் நியமனங்களில் நடக்கக்கூடிய அம்சம் மாநில சுயாட்சிக்கு எதிரானதாக இருக்கிறது. மாநிலங்கள் தீர்மானிக்க முடியாத நிலையை நோக்கி, போய்கொண்டிருக்கிற சூழல் உள்ளது. துணைவேந்தர் நியமனங்களில் இட ஒதுக்கீடு முறை பின்பற்றப்பட வேண்டும். துணைவேந்தர் நியமனங்களில் மாநில அரசினுடைய ஆளுமைத்திறன் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதை நான் இந்த மன்றத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அதுபோல பல பல்கலைக்கழகங்களில், பாடத்திட்டங்களில் சமூக நீதிக்கு எதிரான கருத்துக்கள் புகுத்தப்பட்டிருக்கின்றன. பல்கலைக்கழக நடவடிக்கைகளில் பல அம்சங்களில் நம்முடைய பாரம்பரியத்திற்கு, மரபிற்கு, வரலாற்றிற்கு எதிரான கருத்துக்கள்

2021 ஆகஸ்ட் 26] [திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்]

புகுத்தப்பட்டிருக்கின்றன. எதிரான சிந்தனைகள் உள்ளவர்கள் ஆங்காங்கு அதிகாரத்தில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் சீர்திருத்தாமல் நாம் புதிய கல்விக் கொள்கையை ஏற்க முடியாது. நம்முடைய மாநிலக் கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்தவும் முடியாது. மாநிலக் கல்விக் கொள்கையை வகுத்து நாம் காகிதத்தில் வைத்தால், அது காகிதத்தில்தான் இருக்கும். நடைமுறைப்படுத்த வேண்டுமென்றால் அந்த சிந்தனைப் போக்குள்ளவர்கள் அந்தந்த மட்டத்தில் இருக்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடனேயே அதிகார மட்டத்தில் எப்படிப்பட்ட சிந்தனையுள்ள, வெளிப்படைத் தன்மையுள்ள, தூய பெயர் எடுத்தவர்களை அமர்த்தினார் என்பதை நாம் பார்த்தோம். அதுதான் இன்றைக்கு இந்தியாவின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. எப்படிப்பட்ட அதிகாரிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நியமித்திருக்கிறார்கள் என்பதும் எப்படிப்பட்ட குழுக்களை அமைத்திருக்கிறார்கள் என்பதும்தான் இன்றைக்கு இந்தியாவின் பார்வை நம்மீது திரும்பியிருப்பதற்குக் காரணம். கல்விக் கட்டமைப்பில் மிக முக்கியமான சீர்திருத்தத்தைச் செய்ய வேண்டியதுதான், நாம் செய்யவேண்டிய அடிப்படையான பணி.

மாநிலக் கல்விக் கொள்கை வடிவமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. சமூக நீதி சிந்தனை கொண்ட கல்வியாளர்களைக் கொண்டு அதற்கான குழு அமைக்கப்பட வேண்டும். அந்தக் குழு அளிக்கிற அறிக்கையின் அடிப்படையில் நம்முடைய கல்விக் கொள்கையை வடிவமைக்க வேண்டும். உயர் கல்விப் படிப்போருடைய விழுக்காடு இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில்தான் *51.4* விழுக்காடு என்று உயர்கல்வித் துறையினுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தியாவில் உயர் கல்வி படிப்போரின் விழுக்காடு *27.1* தான். *27.1* விழுக்காடு வைத்திருப்பவர்கள் ஒரு கல்விக் கொள்கையை வடிவமைத்து, யாருக்குத் தருகிறார்கள்? *51.4* விழுக்காடு உள்ளவர்களைப் பின்பற்ற வேண்டுமென்று சொல்கிறார்கள். நாங்கள் *51.4* விழுக்காட்டைத் தாண்டி விட்டோம்; நாங்கள் வடிவமைத்துத் தருகிற கல்விக் கொள்கையை இந்தியா முழுமைக்கும் பின்பற்றக் கொடுங்கள் என்று நாம் சொல்கிறோம். இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களுக்கும் எடுத்துப்போய்க் கொடுங்கள்.

[திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்] [2021 ஆகஸ்ட் 26 பிற்பகல் 12–05

தமிழ்நாட்டில், 51 விழுக்காட்டிற்கு மேல் உயர் கல்வி படிப்போரது விழுக்காடு இருக்கிறது. இதைப் பின்பற்றுங்கள். இப்படி உயர் கல்வியில் 51 விழுக்காட்டை தமிழ்நாடு அடைந்ததற்குக் காரணம் அதனுடைய சமூக நீதிக் கோட்பாடு. எல்லா மக்களுக்கும் கல்வி போய்ச் சேர வேண்டும் என்பதற்காக கல்வி முறை பாடத் திட்டங்களில், தமிழ்நாடு கடைப்பிடிக்கிற கொள்கையைத்தான் ஒன்றிய அரசு எடுத்துக்கொள்ள வேண்டும். மாறாக பின்தங்கியிருக்கக்கூடிய ஒரு கல்விக் கொள்கையைக் கொண்டு வந்து, முன்னேறிய கல்விக் கொள்கையுடைய ஒரு மாநிலத்தின்மீது திணிப்பது என்பதை ஏற்க முடியாது. எனவே, நாம் தெளிவாக புதிய கல்விக் கொள்கையை நிராகரித்து, நம்முடைய கல்விக் கொள்கையை நிலைநிறுத்த வேண்டும். கடந்த ஆட்சிக் காலத்தில் புதிய கல்விக் கொள்கையை நிராகரித்தோம் என்றாலும்கூட, அதில் இருக்கக்கூடிய அம்சங்கள் ஒவ்வொன்றும் நம்மை வந்து தீண்டியிருக்கின்றன. அதை நாம் இந்த ஆட்சிக் காலத்தில் சரி செய்ய வேண்டும்.

குறிப்பாக M.Phil. ஆய்வுப் படிப்பு புதிய கல்விக் கொள்கையின்படி இருக்காது என்று சொன்னார்கள். தமிழ்நாட்டிலேயும் அதனை நீக்கி விடுவோம் என்று சொன்னார்கள். ஆனால் நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அப்படி நீக்கப்பட மாட்டாது; M.Phil. ஆய்வுப் படிப்பு தொடரும் என்று அறிவித்தார்கள். அதுபோல பல்கலைக்கழகப் பாடத் திட்டங்களில் பல அம்சங்களில் சமூக நீதிக்கெதிரான கருத்துக்கள் புகுத்தப்பட்டிருக்கின்றன என்று நமது மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களே வெளிப்படையாக ஊடகங்களில் பேட்டியாகக் கொடுத்தார்கள். அதையெல்லாம் சரி செய்வோம் என்று சொன்னார்கள். அப்படி பல அம்சங்கள் சரி செய்யப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் இப்போது புதிய கல்விக் கொள்கையின் மிக முக்கியமான ஓர் அம்சம் என்னவென்றால், கலப்பு கற்றல் முறை; Blended learning என்று சொல்லக்கூடிய அந்தக் கலப்பு கற்றல் முறையை இங்கே தொடருவோம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதை இங்கேயிருக்கக்கூடிய சமூகநீதி கல்வியாளர்கள் வேண்டாம் என்று சொல்கிறார்கள். அதனை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

2021 ஆகஸ்ட் 26]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல பாடப் புத்தகங்களிலேயே பல்வேறு தவறான கருத்துக்கள், திராவிட இயக்கத்திற்கு எதிரான கொள்கைகள் எல்லாம் அனுமதிக்கப்பட்டன. குறிப்பாக, திறந்தநிலை பல்கலைக்கழக புத்தகங்களில் இருந்தவை உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டு, அவை எடுக்கப்பட்டு விட்டன என்ற மகிழ்ச்சியான செய்தியை உங்களுக்கு நான் தெளிவாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.*

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல, பள்ளிக் கல்வித் துறையில் தொண்டு நிறுவனங்களை கற்றல்–கற்பித்தல் முறையில் பயன்படுத்துவது என்பது புதிய கல்விக் கொள்கையினுடைய ஒரு கூறு. தொண்டு நிறுவனங்களைப் பயன்படுத்த வேண்டும் என்று பாரதிய ஜனதா அரசு, ஒன்றிய அரசு சொல்கிறது என்றால் அதனுடைய நோக்கம் என்ன என்பது சொல்லாமலேயே நமக்குத் தெரியும். தொண்டு நிறுவனங்கள் என்றால் யார்? யாரைக் கொண்டு வந்து அவர்கள் கல்விக் கட்டமைப்பில் பாடம் நடத்தவிடுவார்கள்? கடந்த ஆட்சிக் காலத்தில் கற்றல்–கற்பித்தல் முறையில் அகஸ்தியா என்கிற ஒரு தொண்டு நிறுவனத்தையும் பயன்படுத்த வேண்டும் என்று ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டு, அவர்களும் அந்தப் பணியில் ஈடுபட்டார்கள். அப்போதே அது இங்கே சமூக நீதி சிந்தனையாளர்களால், கல்வியாளர்களால் கடுமையாக எதிர்க்கப்பட்டது. தமிழ்நாட்டிற்கு இப்படி ஒரு நிலைமையா என்று கேட்கப்பட்டது. ஆனால், இந்த ஆட்சிக் காலத்திலும் அதைத் தொடர்வதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட தொண்டு நிறுவனங்களை இந்தக் கல்விப் பணியில் பயன்படுத்துவதை நாம் தவிர்க்க வேண்டும். ஏனென்றால், தொண்டு நிறுவனங்கள் வந்து நமக்கு கல்வி முறையைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. நாம் தான் இந்தியாவிற்கே கல்வி முறையைச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் அதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.*

[*2021 ஆகஸ்ட் 26*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் மிக அருமையான கருத்தைச் சொன்னார்கள். ஏற்கெனவே தொண்டு நிறுவனங்கள் 20 States–லிருந்து Corporate Social Responsibility என்ற வகையில் நிதியினை வழங்கி, செயல்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றார்கள். இந்த அரசாங்கம் கொள்கைப் பிடிப்பில் உறுதியாக இருக்கின்ற அரசாங்கம். Ideology–படி யாராவது penetrate ஆக வேண்டும் என்று நினைத்தார்களானால், கண்டிப்பாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இரும்புக் கரம் அதனை ஒடுக்கும் என்கின்ற அந்தச் செய்தியை இங்கே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதனால் யாரும் கவலைப்படத் தேவையில்லை. நானே இரண்டு, மூன்று பள்ளிகளுக்குச் சென்று பார்த்தேன். நீங்கள் சொன்ன பெயரிலேயே Lab–ஐ நமக்காக அவர்கள் sponsor செய்திருக்கிறார்கள். எந்தத் தொண்டு நிறுவனமாக இருந்தாலும், அந்தவிதத்தில்தான் அது பயன்படுத்தப்படுமே தவிர, அவர்களுடைய ideology–ஐ உள்ளே நுழைப்பதற்கு எக்காரணத்தைக் கொண்டும் எந்தவிதத்திலும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள், நேரம் முடிந்துவிட்டது. உங்கள் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: நன்றி. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக சில கோரிக்கைகளை நான் இங்கே முன் வைக்க விரும்புகிறேன். தாய்த் தமிழைப் பாதுகாக்கவும், அதனை மேம்படுத்தவும் தனது வாழ்நாளை முழுமையாக ஒப்படைத்து, அளப்பரிய பங்களிப்பைச் செலுத்திய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவாக மொழியியல் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவ வேண்டும் என்பது எமது தலைவர் எழுச்சித் தமிழர் அவர்களின் வேண்டுகோள். அதனை அரசு நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

2021 ஆகஸ்ட் 26] [திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்]

பிற்பகல் 12–10

'வெகுமானம் என்ன வேண்டுமென்று கேட்டால் அப்துல் ரகுமானைத் தருக என்பேன்' என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் புகழப்பட்ட, மறைந்த கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களின் பெயரால் பல்கலைக்கழக ஆய்வு இருக்கை அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரியாரின் எழுத்துக்களையும், பேச்சுக்களையும், சிந்தனைகளையும் தொகுத்து ஆவணப்படுத்தும் பணிக்காக தன் வாழ்நாளை ஒப்படைத்துச் செயலாற்றிய பெரியவர் வே. ஆனைமுத்து அவர்களின் பெயரை தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் நூலகத்திற்குச் சூட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமூக நீதிக் காவலர் வி.பி. சிங் அவர்களுக்கு பக்கதுணையாக நின்றவர் முத்தமிழறிஞர் கலைஞர். தமிழ்நாட்டில் வி.பி. சிங் அவர்களை அழைத்துவந்து, பட்டிதொட்டியெங்கும் அழைத்துச் சென்று பெருமைப்படுத்தியவர் தலைவர் கலைஞர் அவர்கள். அத்தகைய சிறப்புக்குரிய வி.பி. சிங் அவர்களின் பெயரை தமிழ்நாட்டில் உருவாகவிருக்கும் ஏதேனும் ஒரு கல்வி வளாகத்திற்கோ, கல்வி நிறுவனத்திற்கோ சூட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளி மற்றும் கல்லூரிகளில் உள்ள அனைத்துக் கட்டடங்களிலும் மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் வகையில், எளிமையாக அணுகத்தக்க வகையில் சாய்வுதளம், கழிவறை, மின்தூக்கி, வாகனம் நிறுத்துமிடம், படிகளில் சிறப்புக் கைப்பிடி போன்ற வசதிகள் செய்யப்பட வேண்டும்.

பார்வை சவால், கேட்கும் மற்றும் பேசும் திறன் சவால் உள்ளிட்ட சவால்களை எதிர்கொள்ளும் மாணவர்களுக்கு உரிய பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் தொடக்கப் பள்ளி முதல் நியமிக்கப்படவேண்டும். ஒவ்வொரு பள்ளியும் ஆரம்ப சுகாதார நிலையத்துடன் இணைக்கப்பட்டு பள்ளிக் கல்வித் துறை மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை இணைந்து குழந்தைகளின் உடல், மன ஆரோக்கியத்தைக் கண்காணிக்கும் கூட்டுப்பொறுப்பை மேற்கொண்டால் குழந்தைகள் எதிர்கொள்ளும் பல்வேறு சிக்கல்களுக்குத் தீர்வு காண முடியும். எனவே, அதனை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்] [2021 ஆகஸ்ட் 26

கணினி ஆசிரியர், உடற்பயிற்சி ஆசிரியர், ஓவிய கவின் கலை ஆசிரியர், இசை ஆசிரியர் பணியிடங்கள் தொடக்கப் பள்ளி முதல் அனைத்துப் பள்ளிகளிலும் உருவாக்கப்பட்டு, அவர்கள் நிரந்தர ஊழியர்களாக நியமிக்கப்பட வேண்டும்.

ஆய்வக உதவியாளர், (Laboratory Assistant), ஆய்வக செய்முறைப் பயிற்றுநர், (Laboratory Demonstrator) உள்ளிட்ட பணியாளர்களுடன் அனைத்து உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் ஆய்வகங்கள் அமைக்கப்பட வேண்டும்.

சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் நீதியரசர் சச்சார் ஆணையத்தினுடைய பரிந்துரையின் அடிப்படையில் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளை உருவாக்க வேண்டும். அதிலும், குறிப்பாக, மகளிர் கல்லூரிகளை அதிகம் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரபிக் கல்லூரிகளில் வழங்கப்படும் அப்சல் உலமா கல்வி B.A. பட்டப் படிப்புக்கு சமமானது என்பதற்கு அரசாணை வேண்டும் என்றும், அரசாணை இல்லையென்றால் B.A. கல்வித் தகுதியாக அதனைக் கருத முடியாது என்றும் கூறி அப்சல் உலமா பட்டம் பெற்றவர்கள், பணி வாய்ப்புள்ள இடங்களில் திருப்பியனுப்பப்படுவதாகவும் முறையீடுகள் வருகின்றன. இதுகுறித்து உயர் கல்வித் துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆதி திராவிடர் மாணவர்களின் படிப்பு உதவித் தொகை பெறுவதற்கு பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பை நிர்ணயிப்பது என்பது அவர்களுக்கும் creamy layer அளவுகோலை மறைமுகமாகப் புகுத்துவதாகவே கருதப்படும். எனவே, ஆதி திராவிட மாணவர்கள் overseas scholarship உள்ளிட்ட அனைத்து விதமான படிப்பு உதவித் தொகைகளைப் பெறுவதற்கும் தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமான வரம்பை முற்றாக நீக்கிட வேண்டும். OBC, MBC மாணவர்களுக்கு தற்போது இட ஒதுக்கீடு பெறுவதற்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் தொகையான ஆண்டுக்கு ரூ.8 இலட்சம் என்றிருப்பதையே, உதவித் தொகை பெறுவதற்கான வருமான வரம்பாக நிர்ணயிக்க வேண்டும்.

அதுபோல அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இட ஒதுக்கீடு முறை முற்றிலும் பின்பற்றப்படுவதில்லை. அங்கே, தற்போது மிகைப் பணியாளர்களாகக் கருதி வெளியே அனுப்பப்பட்டவர்களில்,

2021 ஆகஸ்ட் 26] [திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்]

பெரும்பாலும் பட்டியலினத்தை, பழங்குடியினத்தைச் சார்ந்த பேராசிரியர்களாக இருக்கிறார்கள். இப்போது அங்கே பட்டியலினத்தைச் சார்ந்தவர்களுடைய பணி விழுக்காடு என்பது 5 விழுக்காட்டிற்கும்கீழ் சுருங்கிக்கொண்டிருக்கிறது. எனவே, வெளியே போனவர்களை மீண்டும் உள்ளே அழைத்து அவர்களுக்கான பணியை உறுதிப்படுத்த வேண்டும். அங்கே இட ஒதுக்கீட்டு முறையைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: நாகப்பட்டினம் தொகுதி சார்ந்த சில கோரிக்கைகளை இங்கே வைக்கிறேன். நாகப்பட்டினம் தொகுதியில் சட்டக் கல்லூரி மற்றும் வேளாண் கல்லூரி அமைக்கப்பட வேண்டும். நாகப்பட்டினம் நகராட்சியில் ஓர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிகூட இல்லை. ஏற்கெனவே பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் தெரிவித்திருக்கிறேன். எனவே, அங்கே ஓர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியைத் தொடங்க வேண்டும்.

நாகப்பட்டினம் தொகுதி பாலையூர் ஊராட்சிக்குட்பட்ட அழிஞ்சமங்கலம் கிராமத்தில் அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளி இயங்கிக்கொண்டிருக்கிறது. அந்தப் பள்ளி தொடங்கப்பட்டு தற்போது நூறு ஆண்டுகளாகிவிட்டன. எனவே, நூற்றாண்டைக் கருத்தில்கொண்டு, அந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தித் தர வேண்டும். அதற்கான கட்டடங்களெல்லாம் அங்கே இருக்கின்றன. அதற்காக அதிக நிதியும் ஒதுக்க வேண்டியதில்லை. ஏற்கெனவே வகுப்பறைகளெல்லாம் இருக்கின்றன. அதற்கான அறிவிப்பைச் செய்து, அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாகப்பட்டினம் நகராட்சி 154 ஆண்டுகள் பழமையான நகராட்சி. அந்த நகராட்சி முற்றிலும் சீர்குலைந்து கிடக்கிறது. அடிப்படை கட்டமைப்புப் பணிகள்கூட அங்கே நடைபெறவில்லை. மிகப்பெரிய அளவிற்கு ஒரு சிறப்பு நிதி ஒதுக்கினால் மட்டும்தான் நாகப்பட்டினம் தலைநிமிர முடியும். நாகப்பட்டினம் மாவட்டத்தில்தான் திருக்குவளை கிராமம் இருக்கிறது. அத்தகைய சிறப்புப்பெற்ற நாகப்பட்டினத்தில் பல சமயங்களைச் சார்ந்த

[திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்] [*2021 ஆகஸ்ட் 26*

மக்களும் வந்து செல்லக்கூடிய இடமாக நாகூர் தர்கா இருக்கிறது. வேளாங்கண்ணி ஆலயம் இருக்கிறது. சிக்கல் சிங்காரவேலர் கோயில் இருக்கிறது. எனவே, நாகப்பட்டினத்தினுடைய மேம்பாட்டிற்காக, சிறப்பு நிதியை நாகப்பட்டினம் நகராட்சிக்குத் தர வேண்டும்.

பிற்பகல் 12–15

திருமருகல் ஒன்றியத்தை தனித் தாலுகாவாக அறிவிக்க வேண்டும். நாகப்பட்டினத்தில் ஒருங்கிணைந்த மாவட்ட நீதிமன்ற வளாகம் கட்டி முடிக்கப்பட்டும், இதர உட்கட்டமைப்புப் பணிகள் நிறைவடையாததால், அது திறக்கப்படாமலேயே இருக்கிறது. எனவே, அந்த உட்கட்டமைப்புப் பணிகளை முடித்து, விரைந்து அதைத் திறக்க வேண்டும். நாகப்பட்டினம் அரசு பொது மருத்துவமனை, நாகூர் அரசு மருத்துவமனை ஆகியவை முற்றிலும் சீர்குலைந்து கிடக்கின்றன. அம்மருத்துவமனைகளில் உரிய பணிகள் நடைபெறுவதில்லை. மக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள். எனவே, அவற்றை உரிய சிறப்பான பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும். அதற்கான கட்டடங்களைக் கட்டித்தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திட்டச்சேரி ஆரம்ப சுகாதார நிலையத்தில், நேற்றுகூட ஒரு விபத்து நேர்ந்திருக்கிறது. திட்டச்சேரி ஆரம்ப சுகாதார நிலையத்தில் மேற்கூரை காரை இடிந்து விழுந்து, அங்கு பணியாற்றிய மருத்துவப் பணியாளர் காயம்பட்டிருக்கிறார். எனவே, அந்தக் கட்டடத்தை இடித்துவிட்டு, புதிய கட்டடம் கட்டி, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்த வேண்டும். என் தொகுதியில் பல ஆரம்ப சுகாதார நிலையங்கள் அடிப்படைக் கட்டமைப்புகள் இல்லாமல் இருக்கின்றன. அவற்றை மேம்படுத்த வேண்டும். நாகப்பட்டினம், அக்கரைப்பேட்டை இரயில்வே மேம்பாலப் பணிகள் பாதியிலேயே நிற்கின்றன. அதை விரைந்து முடிக்க வேண்டும். நாகப்பட்டினம் மற்றும் நாகூர் கடற்கரைகளைச் சீரமைத்து மேம்படுத்திட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்கள் தொகுதிக் கோரிக்கை பட்டியலைக் கொடுத்தால், நீங்கள் படித்ததாகப் பதிவு செய்துகொள்ளப்படும். இல்லையெனில் நேரம் அதிகமாகிவிடும்.

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெண்ணாறு வடிநிலம் மற்றும்

2021 ஆகஸ்ட் 26] [திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்]

காவேரி கோட்ட அலுவலகங்கள் அமைக்கப்பட வேண்டும். நாகப்பட்டினத்தில் புதிதாக ஒரு நெல் விதைப் பண்ணை அமைக்கப்பட வேண்டும். நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் முதல் கோடியக்கரை வரை உள்ள கடற்கரைகளில் பாறைக் கற்களைக் கொட்டி, கடலரிப்பைத் தடுக்க வேண்டும். நாகப்பட்டினம் மாவட்டம், சாமந்தான்பேட்டை கிராமத்தில் தூண்டில் வளைவு அமைக்க வேண்டும். நாகப்பட்டினம், பேரிடர் காலத்தில் பெரிதும் பாதிக்கப்படும் பகுதியாக உள்ளதால், அங்கு மின்கம்பிகளை நிலத்திற்கு அடியில் அமைக்கும் திட்டத்தை உடனே தொடங்க வேண்டும். நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் அருகில் புதிதாக துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டும். நாகப்பட்டினத்தில் தமிழறிஞர் மறைமலையடிகள் அவர்களுக்கு நூலகத்துடன்கூடிய மணிமண்டபம் கட்ட வேண்டும். நாகப்பட்டினம்–தஞ்சாவூர் நெடுஞ்சாலையை நான்கு வழிச் சாலையாக அமைத்து, பணிகளை விரைந்து முடிக்க வேண்டும். நாகப்பட்டினம் மாவட்டத்தில், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம், கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம், மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகம் மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர் அலுவலகம் ஆகிய அலுவலகங்களை புதிதாகக் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன், நன்றி வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

திருமருகல், திருக்கண்ணபுரம், கணபதிபுரம், தேமங்கலம், ஏனங்குடி, திருப்பயத்தான்குடி ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும்.

6 ஆண்டுகளுக்கும் மேலாக மூடிக் கிடக்கும் அம்பல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டி மீண்டும் செயல்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும். அருண்மொழித்தேவன் துணை சுகாதார நிலையத்தை மேம்படுத்த வேண்டும்.

நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட TTDC–க்குச் சொந்தமான பயன்பாடு இல்லாத நிலத்தில் யூரியா உரக் கிடங்கு அமைக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. ப. அப்துல் சமது அவர்கள்.

[*2021 ஆகஸ்ட் 26*

***திரு. ப. அப்துல் சமது:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி என்பது ஒரு சாராருக்கு மட்டும் சொந்தமானதல்ல; பள்ளிக் கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி வரை, அது அனைவருக்குமானது என்பதை இந்த மண்ணில் முழக்கமாக எடுத்து செயல்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய திராவிட இயக்கத்தின் கொள்கை முழக்கத்தை நடைமுறைப்படுத்தும் மற்றுமோர் பிரகடனமாக இந்தச் சிறப்புமிகு சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டுள்ள பள்ளிக் கல்வித் துறை மற்றும் உயர் கல்வித் துறைகளின்மீதான மானியக் கோரிக்கைகளின்மீது உரையாற்ற வாய்ப்பளித்தமைக்காக முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய ஒன்றியத்தின் முதல் கல்வி அமைச்சர், மௌலானா அபுல் கலாம் ஆசாத் அவர்கள் நாட்டின் செல்வம் என்பது, வங்கிகளில் இல்லை, வகுப்பறைகளில்தான் உள்ளது என்று சொன்னார். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சிற்பி, புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள், சமுதாயத்தின் தரம் என்பது, அவர்கள் பெற்றுள்ள கல்வியின்மூலம்தான் தீர்மானிக்கப்படுகிறது என்றார். கல்விதான் திராவிட இயக்கத்தின் முதல் ஆயுதம். நீதிக் கட்சியை உருவாக்கிய டாக்டர் நடேசனார் அவர்கள் திருவல்லிக்கேணி அக்பர் சாலையில், வீட்டு மாடியில், வெளி மாவட்டத்திலிருந்து வரக்கூடிய பிராமணர் அல்லாத மாணவர்களுக்கு தங்கும் விடுதியை ஏற்படுத்தி, அவர்களுக்கு கல்வி வழங்கினார். அவ்வாறு நீதிக் கட்சி 1912 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, தற்போது நூறாண்டுகள் கடந்துவிட்டன. இன்று பள்ளிக் கல்வியை முடித்து உயர் கல்வியில் சேருபவர்கள், தேசிய அளவில், 27.1 சதவிகிதம் என்ற அளவில் இருக்கும்போது, இந்தியாவிலேயே அதிகம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு தமிழ்நாட்டில் 51.4 சதவிகிதம் பேர் இருக்கிறார்கள். தேசிய அளவைவிட, இரண்டு மடங்கு அதிகமாக நம்முடைய தமிழகத்தில் இன்று உயர் கல்விப் படிப்பை மேற்கொள்ளும் நிலை இருந்துகொண்டிருக்கிறது. அதனை மேலும் அதிகரிக்கக்கூடிய வகையில், பள்ளிக் கல்வித் துறையும், உயர் கல்வித் துறையும் அருமையான கொள்கை விளக்கக் குறிப்புகளை இந்த மானியக் கோரிக்கையில் தந்திருப்பது மிகவும் பாராட்டுக்குரியது.

2012 ஆம் ஆண்டில், அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை, 76 சதவிகிதமாக இருந்தது. 2020

2021 ஆகஸ்ட் 26] [திரு. ப. அப்துல் சமது]

ஆம் ஆண்டில், இது 53 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது. இதை அதிகரிக்க பள்ளிக் கல்வித் துறை எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக இன்றைக்கு சாரைசாரையாக மாணவர்கள் அரசுப் பள்ளிகளை நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள். வெற்றியை நோக்கிச் சென்றுகொண்டிருப்பது, இப்போது நிரூபணமாகிக் கொண்டிருக்கிறது. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போன்று, 'அரசு பள்ளிக்கூடங்கள் வறுமையின் அடையாளம் அல்ல; பெருமையின் அடையாளம்' என்பதை இன்றைக்கு இந்த அரசு தன்னுடைய செயல்பாட்டினால் நிலைநிறுத்திக்கொண்டிருக்கிறது. இதை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றியுள்ள இளநிலை தொழிற்கல்விக்கான படிப்பிற்கு 'அரசுப் பள்ளி மாணவர்களுக்கு முன்னுரிமை' வழங்கும் சட்டம் மேலும் அரசு பள்ளிகளை நோக்கி, மாணவர்களைக் கொண்டுவருவதற்கான மிக அருமையான சட்டம் என்பதை இந்த நேரத்தில் பாராட்டி, வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12–20

அதேபோன்று, 100 சதவிகிதம் பள்ளிகளில் வசதிகளை ஏற்படுத்தும் நோக்கத்தோடு, 2020–2021 ஆம் கல்வியாண்டில் 26 புதிய தொடக்கப் பள்ளிகளும், 10 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்தவும், 36 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்தவும், 46 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக, இந்த மானியக் கோரிக்கைக்கான கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதை நான் வரவேற்கிறேன். அதில் என்னுடைய மணப்பாறை தொகுதியில், வையம்பட்டி ஒன்றியத்தில் வி. பூசாரிப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை அரசு மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். மணப்பாறை ஒன்றியத்தில் புத்தாநத்தம், அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். மணப்பாறை நகரத்தில் 5–வது வார்டு, நடுநிலைப் பள்ளியை பெண்கள் உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று மருங்காபுரி ஒன்றியம், கஞ்சநாயக்கன்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித்

[திரு. ப. அப்துல் சமது] [2021 ஆகஸ்ட் 26

தருமாறு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

போதுமான பள்ளிகளைத் தொடங்குவதன் விளைவாக, 'அனைவருக்கும் கல்வி' என்ற நிலையினை தமிழ்நாடு எய்தியுள்ளதும், அண்மையில் ஒன்றிய அரசால் வெளியிடப்பட்டுள்ள பள்ளிக் கல்வி தரக் குறியீட்டு அறிக்கையில், தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளதும் பாராட்டுக்குரியது. இது போதுமானதல்ல; தமிழ்நாடு விரைவில் முதலிடத்திற்கு வர வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மானியக் கோரிக்கை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு சிறப்பான செய்திகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறது என்பதை நம்பிக்கையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மிக முக்கியமாக, பள்ளிக் கல்வித் துறையில் கட்டமைப்பு வசதிகள் பற்றி இந்த பள்ளிக் கல்வித் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு நிறைய சொல்கிறது. பல இடங்களில் பள்ளிகளின் கட்டமைப்பு வசதிகள் சரியில்லாத சூழல் நிலவுவதையும் பார்க்கின்றோம். சுற்றுச்சுவர் இல்லாத, மிகவும் பழமையான கட்டடங்களில் இருக்கக்கூடிய பள்ளிகளும் இருக்கின்றன. அந்தப் பழமையான கட்டடங்களை இடிப்பதற்குக்கூட பல முறைகளில் அதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டியிருக்கிறது. அது ஒன்றியத்தின் சார்பிலா அல்லது பொதுப் பணித் துறையின் சார்பிலா, யார் அதை இடிப்பது, இடித்தவுடன் கட்டடம் கட்டப்படுமா என்கின்ற நிலையெல்லாம் பல ஊர்களில் இருக்கிறது. அந்தத் தடைகளையெல்லாம் தகர்த்து, உடனடியாக அங்கே புதிய கட்டடங்கள் உருவாகவும், வழிவகை செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மிக முக்கியமாக, கழிவறைக்கு என்று சிறப்புத் திட்டங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. கழிவறையைப் பராமரிப்பதற்கு, அதைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு, தனி பணியாளர்களை ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் நியமிக்க வேண்டும். அப்படிச் செய்வதன்மூலம் பிள்ளைகளுக்கு அந்தப் பணியைக் கொடுக்கும் நிலையோ அல்லது ஒரு சில ஆசிரியர்களே கழிவறைகளைச் சுத்தம் செய்யக்கூடிய நிலையோ தடுக்கப்படும். ஆகவே, தனி பணியாளர்களை கழிவறைகளைச் சுத்தம் செய்வதற்காக நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

2021 ஆகஸ்ட் 26] [திரு. ப. அப்துல் சமது]

அதுமட்டுமல்லாமல், மிக முக்கியமாக பள்ளிகளில் நூலக நேரம் என்று ஒன்று தனியே ஒதுக்கப்பட்டு, கால அட்டவணையில் அது இணைக்கப்படும் என்பதும், வாரந்தோறும் மாணவர்கள் நூலகத்திலிருந்து புத்தகம் பெற ஊக்குவிக்கப்படுவார்கள் என்பதும், வரவேற்கத்தக்க ஒன்று. ஏனென்று சொன்னால், பல முக்கிய தலைவர்கள் முன்னணியில் வந்ததற்கும், இன்றைக்கு தலைமைபீடத்தை அலங்கரித்துக்கொண்டிருக்கக்கூடிய முக்கிய அதிகாரிகள் முன்னணிக்கு வந்ததற்கும், பின்னணியாக இருப்பது நூலகங்கள்தான் என்கின்ற அடிப்படையில், நூலகத்திற்குப் புத்துயிர் கொடுக்கக்கூடிய பணியினை இந்த அரசு செய்வதை மனதாரப் பாராட்டுகின்றேன். வாரந்தோறும் நூலகத்திலிருந்து புத்தகம் பெற ஊக்குவிக்கப்படுவதும், படித்ததை என்ன செய்வது என்றில்லாமல், அதற்கு ஒரு திட்டமாக, படித்ததை வாரந்தோறும் வினாடி–வினாவாக, பேச்சுப் போட்டியாக, கதை சொல்லுதல், கட்டுரை எழுதுதல் போன்ற செயல்பாடுகள் நூலக நேரத்தில் அறிமுகப்படுத்தப்படும் என்கின்ற அறிவிப்பு, அருமையான அறிவிப்பு என்றவகையில் அதை நான் வரவேற்கின்றேன். தமிழகத்தில் பள்ளிக் கல்வித் துறையின்மூலம் பள்ளிகளில் தொடங்கப்பட்ட நூலகங்கள் பல ஊர்களில் மூடப்பட்டு கிடக்கின்றன. சமூக விரோத செயல்களும் நூலகங்களில் நடந்துகொண்டிருக்கின்றன. அவையெல்லாம் தடுக்கப்பட்டு, பள்ளிகளிலுள்ள நூலகங்களுக்கு உயிரோட்டம் கொடுக்கக்கூடிய ஓர் அருமையான செயல்திட்டம் இது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–25

மிக முக்கியமாக, ஆசிரியர் நியமனத்தினைப் பொறுத்தவரைக்கும், தேசிய அளவில் 30 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலை இருக்கின்றது. ஆனால் தமிழ்நாட்டில் 21 மாணவர்களுக்கே ஓர் ஆசிரியர் என்ற ஒரு நிலை இருப்பது, வரவேற்கத்தக்க ஒன்று. ஆனாலும், வகுப்புக்கு ஓர் ஆசிரியர் என்ற ஒரு நிலையை நாம் எட்ட வேண்டிய நிலையில் இருக்கிறோம். தமிழ், ஆங்கிலம், கணிதம் உள்ளிட்ட அனைத்து பாடங்களுக்கும் வகுப்புக்கு ஓர் ஆசிரியர் என்கிற நிலையை எட்டக்கூடிய நிலைக்கு பள்ளிக் கல்வித் துறை வளர வேண்டும் என்கிற கோரிக்கையை இந்த நேரத்தில் முன்வைத்து, ஆசிரியர் பணி நியமனம் குறித்து ஒரு பதிவினைச் செய்ய விரும்புகிறேன்.

[திரு. ப. அப்துல் சமது] [2021 ஆகஸ்ட் 26

2006–2011 ஆம் ஆண்டு ஆட்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பதிவு மூப்பு முறையில் ஆசிரியர்களைப் பணி நியமனம் செய்தார்கள். அந்த நிலையில் சுமார் 5,000 பேர்களுக்கான சான்றிதழ் சரிபார்ப்பு முடிந்து, பணி நியமனம் வழங்க வேண்டிய நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. கடந்த அதிமுக அரசு சான்றிதழ் சரிபார்ப்பு முடித்தவர்களுக்கான ஆசிரியர் பணி நியமனம் வழங்காமல் வஞ்சித்துவிட்டது. பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்தை அணுகினர். சான்று சரிபார்ப்பு ஏற்கெனவே முடித்தவர்கள் ஆசிரியர் தனித் தகுதித் தேர்வு எனும் தேர்வை எழுதவேண்டியது அவசியமில்லை என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதை எதிர்த்து அதிமுக அரசு மேல்முறையீட்டுக்குச் செல்லக்கூடிய ஒரு நிலை வந்தது. அந்த நேரத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அதனைக் கடுமையாக எதிர்த்து இது ஆசிரியர்களுக்கு எதிரான நடவடிக்கை என்று கண்டன அறிக்கை வெளியிட்டதால் அந்த மேல்முறையீடு தடுத்து நிறுத்தப்பட்டது. கடந்த ஆட்சியில் வஞ்சிக்கப்பட்ட 5,000 பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் 1,258 பட்டதாரி தமிழாசிரியர்களின் நிலையினைக் கனிவுடன் பரிசீலித்து பணி ஆணை வழங்க வேண்டுமாய் அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மிக முக்கியமாக, பள்ளி மாணாக்கர்களுக்கு முன்னுதாரணமாகவும், வழிகாட்டியாகவும் இருக்கவேண்டிய ஆசிரியர்கள் சில பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளிடம், குறிப்பாகபெண் குழந்தைகளிடம்மோசமாகநடந்துகொள்ளக்கூடிய சம்பவங்கள் சென்னையிலே சில முக்கியமான பள்ளிகளில் எல்லாம் நடந்து நடவடிக்கை எடுத்ததை நாம் அறிவோம். பிரபலமான பள்ளிகளில் இது நடந்துகொண்டிருக்கின்றது. இது உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டிய பிரச்சினை என்பதைக் கவனத்தில்கொண்டு, பெண் பிள்ளைகளின் கல்வியைப் பாதுகாக்கின்ற வகையில், அதற்குத் தீர்வு காணும் வகையில் மாணவ பாதுகாப்பு ஆலோசனைக் குழு ஏற்படுத்தப்படும் என்கின்ற அந்த அறிவிப்பினை வரவேற்கிறேன். அந்த வழிகாட்டு நெறிமுறைகளில் மாணவர்கள், பெற்றோர்களுக்குப் புகாரளிக்க கட்டணமில்லா தொலைபேசி, போக்சோ சட்டம் குறித்து அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டம், நவம்பர் 15 முதல் 22 வரை அனைத்துப் பள்ளிகளிலும் மாணவர்களை பாலியல் வன்முறைகளிலிருந்து தடுக்கும் வாரம் என்ற அடிப்படையில் அந்த வாரத்தைக் கடைபிடிப்பது என்ற

2021 ஆகஸ்ட் 26] [திரு. ப. அப்துல் சமது]

அறிவிப்பினை வரவேற்கிறோம். ஆனாலும், இதுமட்டும் போதாது; இதுபோன்ற பாலியல் வன்முறைகளைத் தடுக்க உச்ச நீதிமன்றம் பல தீர்ப்புகளை வழங்கியுள்ளதன் அடிப்படையில், தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் அமைத்து நடைமுறைப்படுத்த வேண்டும். குழந்தைகள் பாதுகாப்புக் கொள்கை உருவாக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். கேரளா உள்ளிட்ட அண்டை மாநிலங்களிலும் இது நடைமுறையில் உள்ளது என்பதை இந்தச் சபைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது அரசமைப்புச் சட்டங்களின் மதிப்பீடுகளை கலாச்சாரமாக்க, அரசமைப்பு உரிமை கல்வி அனைத்துப் பள்ளிகளிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மிக முக்கியமாக, இன்றைக்கு மாணவர்கள் மத்தியில் இளைஞர்கள் மத்தியில் தற்கொலைகள் அதிகரித்திருக்கிறது. இந்தப் பிரச்சினைகளைத் தடுக்கும்வகையில் குறிப்பாக, மிக முக்கியப் பிரச்சினையாக இருக்கக்கூடிய வளர் இளம் பருவத்தினர் தற்கொலை செய்துகொள்வதைத் தடுக்கும் வகையில் வளர் இளம் பருவத்திற்கான வாழ்க்கைத் திறன் கல்வியை அனைத்துப் பள்ளிகளிலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கொரோனாவிற்குப் பின் பள்ளிக்கூடங்களைத் திறக்கக்கூடிய நிலையில், மாணவர்களுக்கு சில பயிற்சிகள் அளிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதில் மிக முக்கியமாக, உளவியல் ஆலோசனை வழங்கக்கூடிய முழுநேர மனநல ஆலோசகர்களைப் பள்ளிகளில் நியமிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக, தொண்டு நிறுவனம் பற்றி எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் அவர்கள் பேசியதை நான் வழிமொழிகிறேன். தொண்டு நிறுவனம் விஷயத்தில் நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவர்கள் பல முகங்களில் வரக்கூடியவர்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும் என்று இந்தச் சபையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

பிற்பகல் 12–30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 10 அரசு கலைக் கல்லூரிகள் புதிதாகத் தொடங்கப்படும் என்ற அறிவிப்பை வரவேற்கிறேன். என்னுடைய மணப்பாறை தொகுதியில் மிக

[திரு. ப. அப்துல் சமது] [2021 ஆகஸ்ட் 26

முக்கியமாக, ஓர் அரசு கலைக் கல்லூரி வேண்டும் என்பது என்னுடைய தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும்.

மணப்பாறை தொகுதி சாதாரண, சாமானிய மக்கள் வாழக்கூடிய ஒரு பகுதி. அங்கு இருக்கக்கூடிய மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலையில் இருப்பவர்கள், பின்தங்கிய மக்கள், ரேஷன் அரிசியையே அதிகமாக உட்கொள்ளக்கூடிய அளவிற்கு வறுமையில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மக்கள். அவர்களுடைய பிள்ளைகள், திருச்சிக்கும், மதுரைக்கும், திண்டுக்கல்லுக்கும் சென்று படிப்பது என்பது மிகவும் சிரமமாக இருக்கிறது. தேர்தல் நேரத்தில் இது மிகப் பெரிய பிரச்சாரமாகவே இருந்தது. கடந்த ஆட்சியில் இருந்தவர்கள் இக்கோரிக்கையை ஏற்று செய்யவில்லை என்று குற்றச்சாட்டு வைக்கப்பட்டது. எனவே, அறிவிக்கப்பட்ட இந்த 10 கல்லூரிகளில் ஒரு கல்லூரியை மணப்பாறைக்கு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மை மக்கள் முன்னேற்றத்தில் பெரிதும் அக்கறை கொண்டிருந்தவர் முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. சிறுபான்மை மக்களை கூடுதல் அக்கறையோடு நாம் கவனித்துக்கொள்ள வேண்டும் என்கின்ற கருத்தோடு, சிறுபான்மை இஸ்லாமிய மக்கள் 'சவலைப் பிள்ளைகள்' என்ற வார்த்தையையும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

அவர்கள் ஆட்சியில் வறுமையில் வாடிய பள்ளிக்கூட ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத ஊழியர்கள்மேல் பரிவுள்ளம் கொண்டு, தாயன்போடு 1999 ஆம் ஆண்டு மே மாதம் வரை அரசு அங்கீகாரம் பெற்று செயல்படும் சிறுபான்மை மற்றும் சிறுபான்மையல்லாத பள்ளிகளுக்கு ஆண்டுக்கு 331 கோடி ரூபாய் செலவில், 11,307 ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 648 ஆசிரியரல்லாத பணியிடங்களுக்கு அனுமதி வழங்கி ஆணையிட்டார்கள். 1999 ஆம் ஆண்டிற்குப் பிறகு தொடங்கப்பட்ட பள்ளிகளுக்கும் பணியிடங்கள் அனுமதிப்பது தொடர்பாக, அடுத்த கல்வியாண்டிலேயே பரிசீலிக்கத்தக்க முடிவு மேற்கொள்ளப்படும் என்று அதே அரசாணையில் சேர்த்து வெளியிட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

2021 ஆகஸ்ட் 26] [திரு. ப. அப்துல் சமது]

ஆனால், அடுத்து வந்த அ.தி.மு.க. அரசு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆணையை சட்டமன்றத்தில் சட்டமாக மாற்றாமலும், கண்டுகொள்ளாமலும், கிடப்பில் போட்டுவிட்டது. தற்போது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தொடர்ச்சியாக, அனைவரும் பாராட்டும் முதல்வராக அமர்ந்திருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சிறுபான்மை மக்களின்மீது பரிவும், பாசமும் கொண்டவர் என்பதை நாம் நன்கு அறிவோம்.

இன்று தங்கள் ஆட்சியில், 26–2–2011 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அரசு வெளியிட்ட ஆணையை மீண்டும் நடைமுறைப்படுத்தி பணியிடங்களை அனுமதித்து, இருண்ட வாழ்வில் சிக்கித் தவிக்கும் தமிழ்வழி சிறுபான்மை மற்றும் சிறுபான்மையல்லாத சுயநிதி பள்ளிகளில் 1991 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை பணியாற்றிவரும் அனைத்து ஆசிரியர் மற்றும் அலுவலர்களின் வாழ்வில் உதயசூரியனின் உதவியால் ஒளியேற்ற வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழக மானியக் குழு வரலாற்றிற்கான ஒரு வரைவுத் திட்டத்தை வடிவமைத்து, இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகங்களும், கல்லூரிகளும் இந்தப் பாடத் திட்டத்தினை அடிப்படையாக வைத்து, தம்முடைய பாடத் திட்டத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டுமென்ற ஒரு வழிகாட்டுதலை, ஆணையைப் பிறப்பித்துள்ளது. பல்கலைக்கழக மானியக் குழுவின் இந்த வரலாற்றுப் பாடமானது, இந்தியாவின் பன்முகத் தன்மைக்கு எதிராகவும், மாநில கலாச்சார மற்றும் பண்பாட்டைப் புறந்தள்ளுவதாகவும் இருக்கின்றது என்று தமிழகத்தைச் சேர்ந்த வரலாற்று அறிஞர்கள் மற்றும் கல்வியாளர்கள் கருதுகின்றனர். மேலும், தமிழகப் பல்கலைக்கழகங்களும், இதர கல்லூரிகளும் இந்தப் பாடத்திட்டத்தை ஏற்றுக்கொண்டால் தமிழக கலாச்சாரமும், பண்பாடும், தமிழகப் பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளிலிருந்து புறக்கணிக்கப்படும்.

மேலும், இந்தப் பாடத்திட்டமானது, சிறுபான்மையினரைப் புறந்தள்ளுவதாகவும் இருக்கின்றது. ஆகையால், தமிழக உயர் கல்வித் துறை பல்கலைக்கழக மானியக் குழுவின் இந்த எதேச்சதிகாரத் திட்டத்தை முறியடிக்க உரிய முறையில் வழிகாட்டல் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

[திரு. ப. அப்துல் சமது] [2021 ஆகஸ்ட் 26

மேலும்,தமிழ்நாடுஉயர்கல்விமன்றம்,தமிழகத்திற்கேற்றாற்போல சிறுபான்மையினரின் நலனையும் பாதுகாக்கும் நோக்கில் ஒரு மாதிரி வரலாற்று பாடத்திட்டத்தை வடிவமைத்து, தமிழகத்தில் பல்கலைக்கழகங்களுக்கும், கல்லூரிகளுக்கும் வழங்கி, அதைப் பின்பற்றிட வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழகத்தில் உயர் கல்வி பயிலும் மாணவர்கள் தங்களது கல்வியை தமிழ் வழியில் அரசுப் பள்ளிகளில் பயின்றவர்களாக இருக்கின்றார்கள். உயர் கல்வி என்று வரும்போது, அவர்களுக்கு தமிழ் மொழியில் உயர் கல்விக்கான பாடப் புத்தகங்கள் இல்லாமல் தவித்து வந்தனர். இந்தச் சூழ்நிலையை தெளிவாகப் புரிந்துகொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1970–களிலேயே, முதல்வராக இருந்தபோது தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் சார்பாக தமிழில் உயர் கல்விக்கான பாடப்புத்தகங்களைத் தயாரிப்பதற்காக தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்திற்கு ஆணையிட்டதன் அடிப்படையில், பல்வேறு ஆசிரியர்களை வைத்து தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் தமிழ் மொழியில் உயர் கல்விக்கான பாடப் புத்தகங்களைத் தயாரித்து வெளியிட்டது.

பிற்பகல் 12–35

அதேபோல, வட இந்திய எழுத்தாளர்கள் ஆங்கிலத்தில் எழுதிய உயர் கல்விக்கான பாடப் புத்தகங்களை மொழியாக்கம் செய்து வெளியிட்டனர். 1970–ல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆணைக்கிணங்க தொடங்கிய இந்தப் பணி இடையில் தொய்வடைந்துவிட்டது. தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் உயர் கல்விக்கான புதிய பாடப் புத்தகங்களைத் தயாரிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதேபோல், சமீபத்தில் வெளிவந்த வட இந்திய ஆசிரியர்களின் புத்தகங்களையும் மொழிபெயர்க்கக்கூடிய பணியையும் சமீப காலங்களாக யாரும் செய்யவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. ப. அப்துல் சமது: எனவே, நமது அரசு தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மூலமாக புதிய புத்தகங்களைத் தயாரிக்கும் பணியையும், புதிய மொழிபெயர்ப்புப் புத்தகங்களை உருவாக்கும் பணியையும் மேற்கொண்டு மாணவர்களின் உயர் கல்விக்கு உதவிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

2021 ஆகஸ்ட் 26] [திரு. ப. அப்துல் சமது]

மிக முக்கியமாக, திரு. மௌலானா அபுல் கலாம் ஆசாத் அவர்களின் பிறந்த நாளான நவம்பர் 11 ஆம் நாள் தேசிய கல்வி நாளாகக் கொண்டாடப்படுகிறது. திரு. மௌலானா அபுல் கலாம் ஆசாத் அவர்கள் இந்திய விடுதலை இயக்கத்தின் மூத்த அரசியல் தலைவரும், அறிஞருமாவார். சமய அடிப்படையிலான இந்தியப் பிரிவினையை எதிர்த்து, இந்து முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்திய முஸ்லிம் தலைவர்களில் முதன்மையானவர் அவர். ஆனால், கடந்த சில ஆண்டுகளாக ஆளும் ஒன்றிய அரசு திட்டமிட்டு திரு. மௌலானா அபுல் கலாம் ஆசாத் அவர்கள் பிறந்த நாளான, தேசிய கல்வி நாளை சிறப்பாகக் கொண்டாடுவதில்லை. எனவே, தமிழக அரசு திரு. மௌலானா அபுல் கலாம் ஆசாத் அவர்களின் பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். திரு. மௌலானா அபுல் கலாம் ஆசாத் அவர்கள் India Wins Freedom என்ற நூலை எழுதியிருக்கிறார். இந்த நூல் இந்திய விடுதலை வரலாற்றை விவரிக்கும் ஒரு மிக முக்கியமான சாட்சியம். 1958–ல் எழுதப்பட்ட 30 பக்கங்களை 30 ஆண்டுகளுக்குப் பிறகு வெளியிட வேண்டுமென்று அவர் சொல்லிவிட்டுச் சென்றார். 30 ஆண்டுகளுக்குப் பிறகு 1988–ல் அந்த 30 பக்கங்களும் சேர்த்து வெளியிடப்பட்டிருக்கிறது. இது ஓர் அருமையான சாசனம். அந்தக் காலகட்டத்தில் என்ன நடந்தது என்பதை இந்தியாவிற்குச் சொல்லக்கூடிய செய்தி அந்தப் புத்தகம். அனைத்துப் பள்ளிகள், கல்லூரிகளின் நூலகங்களுக்கும், பொது மக்களுக்கும் அந்தப் புத்தகத்தைக் கொண்டு செல்ல அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இறுதியாக, தமிழ்நாட்டுச் செய்திக்கு வந்துவிடுங்கள். டெல்லியிலிருந்து இங்குள்ள விஷயத்திற்கு வந்து நன்றி சொல்லி முடியுங்கள்.

திரு. ப. அப்துல் சமது: இறுதியாக, பன்னெடுங்காலமாக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கௌரவ விரிவுரையாளராகப் பணியாற்றுபவர்களை பணி நிரந்தரம் செய்ய இந்த அரசு கனிவுடன் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மீதம் பேச வேண்டியதை எழுதிக் கொடுத்துவிடுங்கள். நாங்கள் பதிவு செய்துவிடுகிறோம்.

[பேரவைத் தலைவர்] [2021 ஆகஸ்ட் 26

நன்றி சொல்லி அமருங்கள். நீங்கள் உரையாற்றத் தொடங்கி 20 நிமிடங்கள் கடந்துவிட்டன.

திரு. ப. அப்துல் சமது: முடித்துவிடுகிறேன். எனது தொகுதி சார்ந்த கோரிக்கைகள் மற்றுமுள்ள கருத்துகளை நான் பேசியதாகக் கருதி, இந்த அவையின் பதிவேடுகளில் பதிவு செய்துகொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, நிறைவு செய்கிறேன். நன்றி.

தொகுதிக் கோரிக்கைகள்:

காவேரி ஆறு மாயனூர் கதவணையிலிருந்து பொன்னணி ஆறு அணை மற்றும் கண்ணூத்து ஏரிக்கு குழாய்மூலம் உபரி நீரைக் கொண்டு வருவதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

பொன்னணி ஆறு அணையைத் தூர் வார நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மணப்பாறையில் பிரசித்தி பெற்ற மாட்டுச் சந்தைக்கு சுற்றுச்சுவர் எழுப்பவும், மாடுகள் நீர் அருந்த போதிய வசதியும், மின் விளக்கு வசதி மற்றும் வாகனத்தில் ஏற்ற மேடை வசதியும் செய்து தர வேண்டும்.

மணப்பாறை முறுக்குக்கு புவிசார் குறியீடு கிடைக்க ஆவன செய்ய வேண்டும்.

மருங்காபுரி வட்டத்திலுள்ள கொடங்குப்பட்டி ஊராட்சியை மணப்பாறை வட்டத்தில் இணைத்து தனி வருவாய் கிராமமாக அறிவிக்க வேண்டும். மருங்காபுரி வட்டம், ஊனையூரில் உள்ள அருள்மிகு நீலியம்மன் திருக்கோயிலுக்கு ராஜகோபுரம் அமைக்கவும், மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் திருத்தேரைச் சீர்படுத்தவும் ஆவன செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, 2011–ல் 5,000 ஆசிரியர்களுக்குப் பணி வழங்குவதை நிறைவு செய்கின்ற நேரத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதாகச் சொன்னார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராகப்

2021 ஆகஸ்ட் 26] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

பொறுப்பேற்றதற்குப் பிறகு இரண்டாம் நிலை பட்டதாரிகள், முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் என்று 20,920 பேர் ஒரே ஆண்டில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பகுதி நேர ஆசிரியர்கள் 14,000 பேர், துப்புரவுப் பணியாளர்கள் 5,000 பேர், நூலகர்கள் 600 பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள். (குறுக்கீடு) 15 நிமிடங்கள் வழங்கப்படுகின்றன.

***திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக நிறுவனத் தலைவர். . .(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Point of order–ஆ? ஒரு நிமிடத்தில் சொல்லுங்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யார் பேசியதில் இந்த point of order வருகிறது என்பதைச் சொல்லுங்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: முன்னாள் அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் பேசும்போது, அவர்களுடைய ஆட்சியில் பல ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டதாகச் சொன்னார்கள். ஆனால், 2011–ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது சிறுபான்மை, சிறுபான்மையல்லாத சுயநிதி கல்லூரிகளில் பணியாற்றக்கூடிய தமிழ் வழி ஆசிரியர்களுக்குப் பணி நியமனம் செய்வதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதற்குப் பிறகு ஆட்சி மாறியது. ஆட்சி மாறியபோதும் அந்த அவையில் நான் உறுப்பினராக இருந்தேன். அந்த ஆணையை நிறைவேற்ற வேண்டுமென்று பல முறை கோரிக்கைகள் வைத்தோம். அதை அந்த ஆட்சி நிறைவேற்றவே இல்லை. அதை இந்த ஆட்சி நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் உறுப்பினர்களுடைய வேண்டுகோள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள்.

[*2021 ஆகஸ்ட் 26*

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கழக நிறுவனர் தலைவர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், அனைவருக்கும் சமமான உயர் கல்வி என்ற நிலையை உருவாக்கிய எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கழக இணை ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் முதலமைச்சரும், எதிர்க்கட்சித் தலைவருமான அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சிக் கொறடா திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கும், துணைக் கொறடா திரு. சு. ரவி அவர்களுக்கும், என்னுடைய தாய் சரஸ்வதி அம்மாள், தந்தை பச்சையப்ப கவுண்டர் ஆகியோருக்கும், மேலும் இந்த அவையிலே இருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஐந்து சட்டமன்ற தொகுதிகளிலும் நடந்து முடிந்த சட்டமன்ற பொதுத் தேர்தலிலே வெற்றிபெறச் செய்த வாக்காள பெருமக்கள் அத்தனைபேருக்குமே (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய அன்பார்ந்த நன்றியை அவர்களுடைய பொற்பாதங்களிலே காணிக்கையாக்குகின்றேன். எங்கள் இயக்கத்தின் சார்பாகவும், கூட்டணி கட்சியின் சார்பாகவும் போட்டியிட்ட ஐந்து சட்டமன்றத் தொகுதி வேட்பாளர்களுக்காக பிரச்சாரம் செய்த எங்களுடைய இயக்கத்தின் பொறுப்பாளர்களுக்கும், தொண்டர்களுக்கும், கூட்டணி கட்சித் தலைவர்களுக்கும், பொறுப்பாளர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12–40

மேலும், 1996 ஆம் ஆண்டு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எனக்கு மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினராகின்ற வாய்ப்பினைத் தந்தார்கள். அதனைத் தொடர்ந்து 2001, 2006, 2011, 2016, 2021 ஆக ஐந்து முறைகளும் ஒரே சட்டமன்றத் தொகுதி, பாலக்கோடு சட்டமன்றத் தொகுதியிலே (மேசையைத் தட்டும் ஒலி) போட்டியிடுகின்ற வாய்ப்பைத் தந்து வெற்றிபெறச் செய்தமைக்கும், 2021 தேர்தலிலே எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவரும், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சருமாகிய அண்ணன் எடப்பாடியார் அவர்களும், எதிர்க்கட்சித் துணைத் தலைவரும், கழகத்தின் ஒருங்கிணைப்பாளருமான அண்ணன்

2021 ஆகஸ்ட் 26] [திரு. கே.பி. அன்பழகன்]

ஓ.பி.எஸ். அவர்களும் தேர்தல் களத்தில் வந்து பணியாற்றி வெற்றிபெறச் செய்தமைக்கும், எனக்கு பாலக்கோடு சட்டமன்ற தொகுதியிலே வாக்களித்து வெற்றிபெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும் இந்த நேரத்திலே அவர்களுடைய பொற்பாதங்களிலே மலர்களைத் தூவி என்னுடைய நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன். அதேநேரத்தில் அந்தப் பகுதியிலிருந்து கழகத்தினுடைய பொறுப்பாளர்களும், கழகத்தினுடைய தொண்டர்களும், கூட்டணிக் கட்சிப் பொறுப்பாளர்களும், கூட்டணிக் கட்சித் தொண்டர்களும் ஒன்றாக இணைந்து பணியாற்றி வெற்றிபெறச் செய்தார்கள். அனைவருக்கும் என்னுடைய நன்றியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறை, உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கைகளில் பேசுகின்ற வாய்ப்பைத் தந்த தங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாணாக்கர்கள் இடைநிற்றலைத் தவிர்க்க வேண்டுமென்ற ஒரு முனைப்போடு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்றைக்கு மிதிவண்டி, மடிக்கணினி உள்ளிட்ட 14 வகையான பொருட்களை விலையில்லாமல் வழங்கியதோடு மட்டுமல்லாமல், 2001 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதற்கொண்டு, ஒரு கிலோ மீட்டருக்கு மிகாமல் ஒரு துவக்கப் பள்ளி, மூன்று கிலோ மீட்டருக்குள்ளாக ஒரு நடுநிலைப் பள்ளி, ஐந்து கிலோ மீட்டருக்குள்ளாக ஓர் உயர் நிலைப் பள்ளி, எட்டு கிலோ மீட்டருக்குள்ளாக ஒரு மேல்நிலைப் பள்ளி என்ற நிலையை உருவாக்க வழிவகுத்தார்கள். அதேநேரத்தில் தேர்விலே தேர்ச்சி பெறாத மாணவர்கள் ஓராண்டு கழித்து தேர்வு எழுதுகின்றபொழுது இடையிலே அவர்கள் படிக்கின்ற நிலையே மாறிவிடுகிறது என்பதையெல்லாம் கருத்தில்கொண்டு, உடன் தேர்வு எழுதும் நிலையைக் கொண்டுவந்த காரணத்தினாலும், அனைவரும் பள்ளிக் கல்வியை முடித்து உயர் கல்விக்கு உடனே செல்லக்கூடிய நிலையை உருவாக்கித் தந்தவர் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடித்தள மக்கள், பின்தங்கிய பகுதியினர், மலைவாழ் மக்கள், மாற்றுத் திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவர், மெதுவாகக்

[திரு. கே.பி. அன்பழகன்] [*2021 ஆகஸ்ட் 26*

கற்பவர்கள், உயர் கல்வி கற்க வாய்ப்பு கிடைக்கப்பெறாதவர்கள் என்று அனைவரையும் உள்ளடக்கிய உயர் கல்வி, உயர் கல்வியுடன் மென் திறன், தொழில் திறன், ஆளுமைப் பண்புகளை வளர்க்கும் சிறப்புப் பயிற்சிகள், நவீன உலகத்தின் தேவைக்கேற்ப அறிவுத் திறன் கொண்ட ஆற்றல்மிக்க இளைய சமுதாயத்தினை உருவாக்குதல் என்பதை நோக்கமாகக் கொண்டது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா, அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசு என்பதை நான் இந்த நேரத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் இருக்கின்றார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள், இன்றைக்கு ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும், ஆளுங்கட்சி கூட்டணிக் கட்சியைச் சேர்ந்தவர்களும் உயர் கல்வித் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பிலே இந்தியாவே திரும்பிப் பார்க்கின்ற வகையிலே உயர் கல்வியில் தமிழ்நாட்டில் 51.4 சதவிகித மாணாக்கர்கள் சேர்க்கை இடம்பெற்றுள்ளது என்பதைக் குறிப்பிட்டு, இங்கே வாழ்த்திப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையை உருவாக்கித் தந்தவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய உயர் கல்வி மன்றம் இருக்கின்ற இடமானது அம்மாவினுடைய பெயரில் வளாகமாக மாற்றப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டது. அங்கே அம்மாவினுடைய ஒரு முழு உருவச் சிலை வைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சிலை வைக்கப்பட்ட காலம் முதற்கொண்டு தொடர்ந்து மாலை அணிவிக்கப்பட்டது. கடந்த ஒரு வார காலமாக அந்த மாலை அணிவிப்பதை, அணிவிக்கக் கூடாது என்று அங்கு வைக்கப்பட்டிருந்த ஏணியும் எடுக்கப்பட்டு, அந்த இடம் பூட்டப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்கு அதைக் கொண்டுவருகிறேன். தொடர்ந்து அங்கே மாலை அணிவிப்பதற்கு அனுமதியும், அங்கே அமைக்கப்பட்ட garden–ஐப் பராமரிப்பதற்கு அனுமதியும் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12–45

அதோடுமட்டுமல்லாமல், இன்றைக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாண்புமிகு உறுப்பினர் திறந்தநிலை பல்கலைக்கழக பாடத்

2021 ஆகஸ்ட் 26] [திரு. கே.பி. அன்பழகன்]

திட்டத்திலே ஒரு பாடம் தேவையில்லாமல் இடம்பெற்றிருந்தது என்று கூறினார். அதற்கு மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், அதை நீக்கிவிட்டதாகச் சொன்னார்கள். ஆனால், 2006 முதல் 2011 வரை அவர் அமைச்சராக இருந்த காலகட்டத்தில்தான் அது இடம் பெற்றிருந்தது என்பதை ஒரு தகவலுக்காக இங்கே சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு உயர் கல்வியில் 51.4 சதவிகிதம் மாணவர் சேர்க்கை என்பது எப்படி வந்தது என்று குறிப்பிட விரும்புகிறேன். இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் All India Survey of Higher Education–ன் 2019–2020 ஆம் ஆண்டிற்கான அறிக்கையின்படி, உயர் கல்வியில் இந்தியாவின் தலைசிறந்த 8 மாநிலங்களில் தமிழகம் முதன்மையிடத்தைப் பெறுகிறது. 18 வயது முதல் 23 வயதிற்குட்பட்டவர்களில் உயர் கல்வியில் சேருபவர்களின் மொத்த எண்ணிக்கையில், Gross Enrolment Ratio–ல் தமிழகம் முதலிடத்தில் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நிலைக்கு நம்முடைய தமிழகம் வருவதற்குக் காரணமாக இருந்தவர்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கு 2011–ல் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதற்கொண்டு உயர் கல்வித் துறையின்கீழ் மட்டும் பொறியியல் கல்லூரிகள்–4, பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள்–21, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் (உறுப்புக் கல்லூரிகள் சேர்த்து)–67. ஆக, 92 கல்லூரிகளை புதிதாகத் தோற்றுவித்த பெருமை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு ஒட்டுமொத்தமாக உறுப்புக் கல்லூரிகள் அரசுக் கல்லூரிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன என்பதையும் தகவலுக்காகச் சொல்கிறேன். அதோடுமட்டுமல்ல, புதிய பாடப் பிரிவுகளைப் பொறுத்தவரையில், கடந்த 10 ஆண்டுக் காலத்தில் 1,666 புதிய பாடப் பிரிவுகளைத் தோற்றுவித்த பெருமையும் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) உயர் கல்வியில் அதிக மாணாக்கர்களைக் கொண்ட 3 மாநிலங்களில் தமிழகம் முன்னோடியாக உள்ளது. மற்ற மாநிலங்கள் உத்தரப்பிரதேசம் மற்றும் மஹாராஷ்டிரா ஆகும். உயர் கல்வியில் மாணாக்கர்களின் சேர்க்கை மட்டுமல்லாமல், மாணாக்கர்களின்

[திரு. கே.பி. அன்பழகன்] [2021 ஆகஸ்ட் 26

தேர்ச்சி விகிதத்திலும் தமிழகம் முதன்மையிடத்தில் உள்ளது என்பதையும் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உயர் கல்வியின் அடிப்படையே ஆராய்ச்சிப் படிப்புதான். இதில் இந்திய அளவிலே தமிழ்நாடுதான் முதலிடத்தில் உள்ளது. ஆசிரியர், மாணாக்கர்கள் விகிதம்–pupil–teacher ratio–ல் இந்திய சராசரியைவிட தமிழகம் முதலிடத்தில் உள்ளது. மாணாக்கர் தங்கிப் பயிலும் விடுதி வாய்ப்பு வசதியிலும் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. சராசரியாக 1 இலட்சம் மக்கள்தொகைக்கு 38 கல்லூரிகள் என்ற நிலையை அடைந்துள்ளோம். ஒட்டுமொத்தத்தில் இந்திய உயர் கல்வியில் தமிழகம் தலைசிறந்து திகழ்கிறது. இவற்றையெல்லாம் நான் சொல்லவில்லை; சமீபத்தில் இந்திய அரசு வெளியிட்ட அறிக்கை தெளிவாகச் சொல்கிறது. MHRD அறிக்கை 2019–2020–ன்படி மொத்த மாணாக்கர்களின் எண்ணிக்கையில் Gross Enrolment Ratio இந்திய அளவில் 27.1 சதவிகிதம், தமிழ்நாட்டில் 51.4 சதவிகிதம்; ஆண்கள் 51.8 சதவிகிதம், பெண்கள் 51 சதவிகிதம். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், அனைவருக்கும் சமமான உயர் கல்வி என்ற நிலையை எய்த வேண்டும் என்பதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டு, பெண்களுக்கும் உயர் கல்வி பெறக்கூடிய வாய்ப்பை அதிகமாக உருவாக்கித் தந்தார்கள்.

அதோடுமட்டுமல்ல, தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட மாணாக்கர்கள் சேர்க்கை விகிதம் சராசரியாக இந்திய அளவில் 23.4 சதவிகிதம், தமிழ்நாட்டில் 39.6 சதவிகிதம், ஆண்கள் 38.8 சதவிகிதம், பெண்கள் 40.4 சதவிகிதம். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல பழங்குடியினர்–இந்திய அளவில் 18.2 சதவிகிதம், தமிழ்நாட்டில் 40.7 சதவிகிதம், ஆண்கள் 43.8 சதவிகிதம், பெண்கள் 37.7 சதவிகிதம். இன்றைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை உயர் கல்வித் துறை அமைச்சராக இருந்தபோது, 2010–2011, மானியக் கோரிக்கை எண்–20, உயர் கல்வித் துறையின்கீழ் அளிக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் 2–ல், "பல்கலைக்கழக துணைவேந்தர்கள் மற்றும் தலைசிறந்த கல்வியாளர்களுடன் கலந்தாலோசனை செய்து, அதனடிப்படையிலே 2020–ல் உயர் கல்வியில் மொத்த மாணவர்களுடைய சேர்க்கை விகிதத்தை 25 சதவிகிதமாக உயர்த்த உயர் கல்வி கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. இந்த

2021 ஆகஸ்ட் 26] [திரு. கே.பி. அன்பழகன்]

இலக்கினை அடைவதற்கு இவ்வரசால் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்றைய கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கின்றார். மத்திய அரசானது இன்றைக்கு என்ன சொல்லியிருக்கிறது என்றால், 2035 ஆம் ஆண்டிலே 50 சதவிகிதத்தை நாம் அடைய வேண்டும் என்று இலக்கை நிர்ணயித்திருக்கிறது. ஆனால், இதற்கிடைப்பட்டு தமிழ்நாட்டில் பார்த்தோம் என்றால், 2019–2020–ல் 51.4 சதவிகிதத்தை அடைந்துவிட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்குக் காரணமாக இருந்தவர்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும், முன்னாள் முதலமைச்சரும், தற்போது எதிர்க்கட்சித் தலைவராகவும் இருக்கக்கூடிய அண்ணன் எடப்பாடியார் அவர்களும்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, தொடர் ஆராய்ச்சியின்மூலம் நாம் நிலையான நீடித்த வளர்ச்சியைக் காண முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வியின் அடிப்படையே ஆராய்ச்சிதான். அந்த வகையில், இந்திய அளவிலே ஆராய்ச்சிப் படிப்புகளில் தமிழ்நாடு உயர்வான நிலையைப் பெற்றுள்ளது. 2019–2020 அறிக்கையின்படி, இந்திய அளவில் அதிக அளவு ஆராய்ச்சிப் படிப்பு மாணவர்களைக் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. அதனடிப்படையில், தற்போது 30,660 பேர் ஆராய்ச்சியாளருக்கான Ph.D. படிப்பைப் படிக்கிறார்கள். அதில், ஆண்கள் 15,828 பேர், பெண்கள் 14,832 பேர் படிக்கிறார்கள். அதேபோல், M.Phil. படிப்பில் 9,779 பேர் சேர்ந்துள்ளார்கள். அவர்களிலே ஆண்கள் 2,470 பேர், பெண்கள் 7,309 பேர். அதேபோல், பட்ட மேற்படிப்பில் ஆண்கள் 1,84,265 பேர்களும், பெண்கள், 2,95,673 பேர்களும் சேர்ந்துள்ளார்கள். அதிலும் பெண்கள் கூடுதலாக இருக்கிறார்கள். ஆக, 4,79,938 பேர் பட்ட மேற்படிப்பு படிப்பதற்கு மாண்புமிகு அம்மாவின் ஆட்சியில் வழிவகை செய்யப்பட்டிருந்தது என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–50

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சருக்கு ஒரு வேண்டுகோள். கடந்த 2006 முதல் 2011 வரை, ஐந்தாண்டு

[திரு. கே.பி. அன்பழகன்] [2021 ஆகஸ்ட் 26

காலத்திலே தற்போதைய மாண்புமிகு அமைச்சர்தான் அன்றைக்கு அமைச்சராக இருந்தார். அந்த 5 ஆண்டுக் காலத்திலே ஒட்டுமொத்தமாக 100 புதிய பாடப் பிரிவுகள் மட்டும்தான் தமிழகம் முழுவதும் வழங்கப்பட்டிருந்தன. ஆனால், கடந்த 10 ஆண்டுக் காலத்திலே 1,666 பாடப் பிரிவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. நான் அவரிடம் கோரிக்கையாக வைப்பது என்னவென்றால், இப்போது புதிதாகத் தொடங்கப்பட்ட கல்லூரிகளிலே, UG 3 வருடங்கள் முடித்தவர்களுக்கு PG courses தேவைப்படுகின்றன. அதேபோல, UG, PG முடித்தவர்களுக்கு M.Phil., Ph.D. courses தேவைப்படுகின்றன. உதாரணத்திற்கு, என்னுடைய தொகுதியான பாலக்கோடிலே புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கல்லூரியிலே 2,000–க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் சேர்ந்திருக்கிறார்கள். 3 ஆண்டுகள் நிறைவுபெற்று, அவர்கள் PG படிப்பதற்கு வசதி இல்லை. அது ஒரு பின்தங்கிய பகுதியாகவும் இருக்கின்ற காரணத்தினால், வருகின்ற காலகட்டங்களிலே புதிய பாடப் பிரிவுகளுக்கு அங்கு PG courses ஆரம்பிக்கப்பட வேண்டும். அதேபோல, எதிர்க்கட்சியின் துணைக் கொறடாவாக இருக்கக்கூடிய, திரு. சு. ரவி அவர்களுடைய அரக்கோணம் தொகுதியிலே உள்ள கல்லூரி முன்பே ஆரம்பிக்கப்பட்ட கல்லூரி. அங்கே பட்டப்படிப்பும், பட்ட மேற்படிப்பும் இருக்கின்றன, அவர்களுக்கு M.Phil., Ph.D. போன்ற படிப்புகள் வேண்டும். இவற்றையெல்லாம் கணக்கிலே எடுத்து, புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அந்த 67 கல்லூரிகளிலே, எந்தெந்தக் கல்லூரிகளுக்கு புதிய பாடப் பிரிவுகள் தேவையோ அத்தனை பாடப் பிரிவுகளையும் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணாக்கர் சேர்க்கையில் மட்டுமல்ல; தரத்திலும் தமிழகம் உயர் கல்வியில் முதலிடத்தில் உள்ளது. தமிழ்நாட்டில் 21 பல்கலைக்கழகங்கள், 35 கல்லூரிகள் தேசிய கல்வித் தர கட்டமைப்பு–NIRF தர வரிசைப் பட்டியலிலே முதல் 100 இடங்களுக்குள் இடம் பெற்றுள்ளன. இந்திய அளவிலே அண்ணா பல்கலைக்கழகம் தொழில்நுட்பப் பிரிவில் 9 ஆவது இடத்தில் உள்ளது. சென்னை மாநிலக் கல்லூரி 3 ஆவது இடத்தில் உள்ளது. சென்னைப் பல்கலைக்கழகம் தேசிய அளவிலே 20 ஆவது இடத்தில் உள்ளது என்று இப்படி பல்வேறு வகையிலே சுட்டிக்காட்டலாம். RUSA திட்டத்தின் மூலமாக அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு 100 கோடி ரூபாயும், அண்ணா

2021 ஆகஸ்ட் 26] [திரு. கே.பி. அன்பழகன்]

பல்கலைக்கழகம், அண்ணாமலை பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மற்றும் சென்னைப் பல்கலைக்கழகம் ஆகிய 6 பல்கலைக்கழகங்களுக்கு 50 கோடி ரூபாயும் வழங்கப்படவிருக்கிறது. அந்தத் திட்டத்தின்கீழ், 40 சதவிகிதம் நம்முடைய மாநில அரசும் பங்களிப்பும், 60 சதவிகிதம் மத்திய அரசும் வழங்குகிறது. மாநில அரசின் 40 சதவிகித பங்களிப்பை செலுத்திய காரணத்தினால் மத்திய அரசின் 60 சதவிகித நிதியை நாம் பெறக்கூடிய சூழல் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகை வெல்ல அறிவுத் திறனோடு தொழில் திறனும் தேவை. வேலைவாய்ப்புகளைப் பெற ஏதுவாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் வாயிலாக Siemens மற்றும் Design Tech ஆகிய தொழில் நிறுவனங்களுடன் இணைந்து ரூ.546.84 கோடி மதிப்பீட்டிலே திறன் மேம்பாட்டு சிறப்பு மையம் ஒன்றும், 5 திறன் மேம்பாட்டு பயிற்சி மையங்களும் ஏற்கெனவே அண்ணன் மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலக்கட்டத்திலே தொடங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019–லே நடந்தபோது, உயர் கல்வி நிறுவனம் சார்பில் 339.49 கோடி ரூபாய்க்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு, இதன் வாயிலாக 3,275 பேர் வேலைவாய்ப்பினைப் பெறக்கூடிய சூழ்நிலையும் உருவாக்கப்பட்டு இருக்கிறதென்பதையும், 62 அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் மென்திறன் பயிற்சி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள் கட்டமைப்பைப் பொறுத்தவரையில், உலகத்தரத்திலான உள் கட்டமைப்பு வசதிகள், நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய ஆய்வகங்கள், மகிழ்வாகக் கற்கும் சூழல், 2011 முதல் 2020 வரை தொடங்கப்பட்ட அனைத்துக் கல்லூரிகளுக்கும் கட்டட வசதி, ஆய்வக வசதி, சுற்றுச் சுவர் வசதி மற்றும் உள் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட்டிருக்கின்றன. ஒரு சில கல்லூரிகளுக்கு இடம் தேர்வாகி, கிடைக்காத காரணத்தினால் கட்டடம் கட்டும் பணி தொடங்கப்படாமல் இருக்கிறது. அதேபோல, அனைத்துக்

[திரு. கே.பி. அன்பழகன்] [2021 ஆகஸ்ட் 26

கல்லூரிகளுக்கும் மரத் தளவாடங்கள், உபகரணங்கள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானும் உங்களுக்குச் சுட்டிக்காட்டுகிறேன். நீங்கள் பேச ஆரம்பித்து 15 நிமிடங்களுக்கும் மேலாகிவிட்டது என்பதை உங்கள் கவனத்திற்குச் சுட்டிக்காட்டுகிறேன், அவ்வளவுதான்.

திரு. கே.பி. அன்பழகன்: ஆக, இப்படி தொடர்ந்து மாணாக்கர்களின் தேவைகளை அறிந்து, கடந்த 10 ஆண்டுக் காலமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசும், அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசும் உயர் கல்விக்குச் செல்லுகின்றவர்களுடைய எண்ணிக்கையைக் கூட்டுவதற்கு என்னென்ன தேவையோ அத்தனையையும் நிறைவு செய்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விழுப்புரத்தைப் பொறுத்தவரையில், அது மாண்புமிகு அமைச்சருடைய மாவட்டம். இருந்தாலும், ஒரு சில கருத்துகளை நான் இங்கு கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். விழுப்புரத்தைப் பொறுத்தவரை, அறிஞர் அண்ணா கல்லூரியும், திண்டிவனத்தில் கோவிந்தசாமி கல்லூரியும் ஏற்கெனவே இருக்கின்றன.

பிற்பகல் 12–55

அதேபோல, விழுப்புரம் கலை அறிவியல் கல்லூரியில் மாணாக்கர்களின் சேர்க்கைக்கு விண்ணப்பங்கள் அதிகமாக வருகின்றன என்கின்ற காரணத்தினால் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். கலை மற்றும் அறிவியல் பெண்கள் கல்லூரி ஒன்றும், வானூரிலே ஓர் இருபாலர் கல்லூரி ஒன்றும் அமைக்கப்பட்டது. எங்களுடைய கடந்த ஆட்சிக் காலத்தில் ரிஷிவந்தியம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர் இருந்தபோதிலும், அங்கே விண்ணப்பங்கள் அதிகமாக வருகின்றன என்பதைக் கருத்தில் கொண்டு அங்கேயும் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை வழங்கியவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே திருவெண்ணெய்நல்லூரில் ஒரு கல்லூரியைக் கொண்டு வந்திருக்கின்றார். அதைப்போல,

2021 ஆகஸ்ட் 26] [திரு. கே.பி. அன்பழகன்]

கள்ளக்குறிச்சியிலே அம்மா அவர்கள் இருக்கின்றபோது ஒரு கலைக் கல்லூரியைக் கொண்டு வந்திருக்கின்றார். அதேபோல, பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளைப் பொறுத்தவரை, அவர் அமைச்சராக இருக்கின்றபோது அரகண்டநல்லூரிலே ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியைக் கொண்டு வந்திருக்கின்றார். அம்மா அவர்கள் சங்கராபுரத்திலே பலவகை தொழில்நுட்பக் கல்லூரியைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். இவ்வளவு கல்லூரிகள் இருக்கின்றபோதும்கூட கடந்த ஆண்டு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மட்டும் 64 ஆயிரத்து 73 பேர் விண்ணப்பித்திருந்தார்கள். ஆனால், கிட்டத்தட்ட 3,000 பேர்களுக்குத்தான் மாணவர் சேர்க்கைக்கான இடம் இருந்தது. அப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திலிருந்து பிரித்து விழுப்புரத்தை மையமாகக் கொண்டு அம்மா பெயரைத் தழுவிய ஜெ ஜெயலலிதா பல்கலைக்கழகம் என்று ஒரு பல்கலைக்கழகத்திற்கு இறுதி நேரத்திலே Bill pass செய்யப்பட்டது. அதன் பிறகு கவர்னர் அவர்கள் கையொப்பமிடுவதற்கு கடைசி நேரமாகிவிட்டது. அங்கே இன்றைக்கு அது தொடர்ந்து செயல்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்திலே உள்ள கல்லூரிகள் மட்டுமின்றி, அனைத்து மாவட்டங்களிலும் நிறைய demand இருக்கத்தான் செய்கிறது. பல்கலைக்கழகத்தை உருவாக்குவதனால் மட்டுமே கல்வித் தரம் அதிகரித்துவிடாது. இதை நான் சொல்லவில்லை. உங்கள் அம்மா காலத்தில் 22–7–2012–ல் அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பை நான் படிக்க விரும்புகிறேன்.

"அதிக எண்ணிக்கையில் பல்கலைக்கழகங்கள் தொடங்கினால் மட்டும் கல்வியின் தரத்தில் எந்தவிதமான உயர்வும் ஏற்படாது". புரிகிறதா? "பல்கலைக்கழகங்களை அதிக அளவில் துவங்குவதால் மட்டும் கல்வித் தரத்தில் எந்த உயர்வும் ஏற்படாது. ஆனால், ஒரே பல்கலைக்கழகமாக இருந்தாலும் உயர்தரமான கல்வி வழங்கும் பல்கலைக்கழகத்தால் மட்டுமே மாணவர்களுக்கு நல்ல கல்வியளித்து, சிறப்பான எதிர்காலத்தினை உருவாக்கித் தர இயலும். ஒரே பல்கலைக்கழகம் சிறந்த பல்கலைக்கழகமாக

[முனைவர் க. பொன்முடி] [2021 ஆகஸ்ட் 26

இருக்க வேண்டும். எனவே, ஒன்றாக இருந்த அண்ணா பல்கலைக்கழகத்தினைப் பிரித்து மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களைத் தொடங்கியதால் அப்பல்கலைக்கழகம் தனது வலிமையை இழந்துவிட்டது" என நான் சொல்லவில்லை. உங்கள் ஆட்சியில் நீங்கள் அரசு குறிப்பில் வெளியிட்டது. அதைத்தான் நாங்கள் சொல்கிறோம். பல்கலைக்கழகத்தைத் துவக்குவதால் மட்டும் நீங்கள் சொன்ன மாதிரி, 50,000 பேர் விண்ணப்பிக்கிறார்கள், 6,000 பேருக்குதான் இடம் இருக்கிறது என்றால், பல்கலைக்கழகத்தில் அரசு கல்லூரிகளெல்லாம் ஆரம்பிக்கப் போகிறோமா? Control தான் பல்கலைக்கழகம். அதற்காகத்தான் 100 ஆண்டுக் காலம் புகழ்மிக்க அண்ணாமலை பல்கலைக்கழகத்தோடு இந்த மாவட்டத்தில் இருக்கின்ற பல்கலைக்கழகத்தை இணைப்பதன் மூலமாக பெருமை சேர்ப்பதற்காக எடுக்கப்பட்டிருக்கின்ற முடிவே தவிர (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுக்கு அந்தப் பல்கலைக்கழகத்தின்மீது காழ்ப்புணர்வு எதுவும் கிடையாது. ஜெ.ஜெ. பல்கலைக்கழகம் என்று நாகப்பட்டினத்தில் ஒன்று இருக்கிறது, அதேமாதிரி இசை பல்கலைக்கழகம் என்று சென்னையில் ஒன்று இருக்கிறது. இதையெல்லாம் எங்களுக்கு பெயர் மாற்ற வேண்டும் என்பது கிடையாது. ஆனால், அதை திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திலிருந்து பிரிக்கின்றபோதே நம்முடைய திரு. துரைமுருகன் அவர்கள் எழுந்து சொன்னார்கள். அதை இங்கேயிருக்கும்போது பேசினார்கள், உங்களுக்கு ஞாபகம் இருக்கும். அதனால், இந்த நான்கு மாவட்டங்களையும் ஒருங்கிணைத்து அண்ணாமலை பல்கலைக்கழகத்தோடு இணைப்பதுதான் அந்த மாவட்டத்திலே இருக்கின்ற மாணவர்கள், ஆசிரியர்கள், மக்கள் அனைவருக்கும் பலனளிக்கும். 100 ஆண்டுக் காலமாக இருந்த ஒரு பல்கலைக்கழகத்தில் படித்தார்கள் என்பதுதான் பெருமை. நானெல்லாம் Annamalai University student என்று சொல்லிக்கொள்வதில் இன்றைக்கும் பெருமையாக இருக்கிறது. Madras University student என்று சொல்லிக்கொள்வதில் பெருமையாக இருக்கிறது. பல்கலைக்கழகங்களை உருவாக்கக் கூடாது என்று நான் சொல்லவில்லை, அவர்கள் சொன்னதைச் சொன்னேன். அதிக எண்ணிக்கையில் பல்கலைக்கழகங்களைத் தொடங்கினால் மட்டும் கல்வியின் தரத்தில் எந்தவிதமான உயர்வும் ஏற்படாது. இதை மட்டும் மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்களுக்கு உங்கள் செய்தியின் மூலமாகவே நான் தெரிவிக்க விரும்புகிறேன். (குறுக்கீடு)

2021 ஆகஸ்ட் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் இன்றைக்கு ஒரு கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திலிருந்து இந்தப் பல்கலைக்கழகத்தைப் பிரிப்பதால், அந்தப் பல்கலைக்கழகத்திற்கு எந்த இழப்பும் கிடையாது. அது அவருக்கு நன்றாகத் தெரியும். ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் இன்றைக்கு M.Phil., Ph.D., P.G. படிக்கின்ற மாணவர்கள் 3,000, 4,000 பேர் இருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு P.G. Extension centre மட்டும்தான் விழுப்புரத்தில் இருக்கின்றது. அதில் படிப்பவர்களின் எண்ணிக்கை என்று பார்த்தால் 300 பேர்தான் இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–00

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: ஒரு கேள்வியை மட்டும் நான் கேட்கிறேன். பல்கலைக்கழகம் என்று பெயர் அறிவித்தார்களே தவிர, ஏதாவது நிதியொதுக்கியிருக்கிறார்களா, இடம் பார்த்திருக்கிறார்களா? அவர்கள் காலத்தில், அமைச்சர் அவர்கள் 70 ஏக்கர் என்று case போட்டார்கள். கண்டிப்பாகக் கிடையாது. 1 ஏக்கர்கூட கிடையாது. இன்றைக்கு நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். அதைக் கொடுத்தார்கள் என்றால், பல்கலைக்கழகம் கொடுக்கிறோம். பெயர் வைக்க வேண்டுமென்பதற்காக ஒரு பல்கலைக்கழகத்தை ஆரம்பித்தீர்களே தவிர, அங்கே உண்மையிலேயே பல்கலைக்கழகத்திலே ஆராய்ச்சி நடத்த வேண்டும், என்பதெல்லாம் கிடையாது. கலைஞர் ஆட்சியில்தான் அரசு கலைக் கல்லூரிகளில் P.G. courses கொண்டுவரப்பட்டன. திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் மூலமாக விழுப்புரம் அரசு கலைக் கல்லூரியில் P.G. பயிலுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததும் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில்தான். ஆகவே, நீங்கள் சொல்கின்ற மாதிரி, M.Phil., Ph.D. படிப்பை மேற்கொள்ள வேண்டுமென்று சொன்னால், பல்கலைக்கழகங்களிலே பதிவு செய்துகொண்டு, கல்லூரிகளில் செய்வதற்கு வாய்ப்பிருக்கிறது. இரண்டாயிரம் ஏக்கர் நிலப்பரப்புடன் பல்வேறு துறைகளைக் கொண்ட அண்ணாமலை பல்கலைக்கழகத்தில்தான் ஆராய்ச்சி

[முனைவர் க. பொன்முடி] [2021 ஆகஸ்ட் 26

போன்றவை செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும். அதனால்தான் இந்த நான்கு மாவட்டங்களையும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தோடு இணைத்திருக்கிறோம். அங்கே படிக்கின்ற மாணவர்களுக்கும், அங்கே இருக்கின்ற மக்களுக்கும் அது நல்லது என்பதை மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்களுக்கு நான் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன், University சப்ஜெக்ட்டை விட்டு வெளியே வந்துவிடுங்கள். நீங்கள் பேச ஆரம்பித்து 21 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். மேலும், ஒரு சட்டமுன்வடிவு ஆய்வு செய்து நிறைவேற்றப்பெற வேண்டும். உரையைச் சுருக்கமாக முடியுங்கள். நான் ஆரோக்கியமான முறையில்தான் சொல்கிறேன். உரையைச் சுருக்கமாக முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் நான் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், அம்மா அவர்களுடைய பெயரிடப்பட்ட பல்கலைக்கழகம் என்பதால், காழ்ப்புணர்ச்சியின் காரணமாக அதை நிறுத்தக் கூடாது. கடந்த ஆட்சியின் இறுதி நேரத்தில், Code of conduct அமலில் வந்த காரணத்தினால்தான் அதற்கான மற்ற பணிகளை எங்களால் செய்ய முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: நிச்சயமாக, நாங்கள் அதை நிறுத்தவில்லை. காழ்ப்புணர்ச்சியோடு நாங்கள் அதை எடுத்திருந்தோம் என்று சொன்னால், இன்றைக்கு நாகையில் இருக்கின்ற மீனவர் பல்கலைக்கழகம், ஜெ.ஜெ. பல்கலைக்கழகம் என்ற அந்தப் பெயர் இன்னும் இருந்துகொண்டுதானே இருக்கிறது. சென்னையில் இருக்கின்ற இசை பல்கலைக்கழகம் இன்னும் அவர்களுடைய பெயரில்தானே இருக்கின்றது. முன்பு இருந்ததை எல்லாம் எடுத்தது நீங்கள்தான். கலைஞர் கட்டினார் என்பதற்காக சட்டமன்றத்தை மாற்றியமைத்ததே நீங்கள்தான். அங்கு இருக்கக் கூடாது என்று செய்ததெல்லாம் நீங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் சொல்வது மிகவும் சரியல்ல.

2021 ஆகஸ்ட் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள், ஏதோ காழ்ப்புணர்ச்சியோடு அந்தப் பெயரை எடுப்பதற்காக திட்டமிட்டு சதி செய்திருக்கின்றீர்கள் என்ற பொருள்பட ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். அப்படிக் காழ்ப்புணர்ச்சியோடு நாங்கள் செயல்படத் தொடங்கியிருந்தால், 'அம்மா உணவகம்' இன்றைக்கு இல்லை என்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருப்போம். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, எந்தவிதக் காழ்ப்புணர்ச்சியும் கிடையாது; இந்த அரசைப் பொறுத்தவரைக்கும், எந்தவிதக் காழ்ப்புணர்ச்சியும் கிடையாது. ஏன் அது எடுக்கப்பட்டது என்பதற்கான விளக்கத்தை, உண்மையான காரண, காரியங்களையெல்லாம் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, தயவுகூர்ந்து காழ்ப்புணர்ச்சியோடு நாங்கள் நடந்து கொண்டோம் என்பதை மறந்துவிடுங்கள். நிச்சயமாக அப்படி இல்லை, இல்லையென்பதை தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த வார்த்தையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன், University சப்ஜெக்ட்டை விட்டு வெளியே வாருங்கள்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கடந்த கால ஆட்சியில் இறுதி நேரத்திலே அறிவித்ததோடு சரி, எதையும் செய்யவில்லை என்று சொன்னார்கள். உதாரணத்திற்கு ஒரு சிறிய குறிப்பை மட்டும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். முந்தைய தி.மு.க. ஆட்சியில் ஆளுநர் உரை அறிவிப்பில், 8 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் தொடங்குவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டு அரசாணை நிலை எண் 35, உயர் கல்வித் துறை, நாள் 8–2–2011–ல் நிருவாக அனுமதிக்கான ஆணை வழங்கப்பட்டது. அதில், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின்கீழ் ஆணையிடப்பட்ட விருதுநகர் மாவட்டம், திருச்சுழி உறுப்புக் கல்லூரி மட்டும் சாத்தனூருக்கு மாற்றப்பட்டது. அதற்குப் பிறகு 2011–ல் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி வந்தது. மீதமுள்ள 7 கல்லூரிகள் மட்டுமல்ல, அதற்கு முன்பாக அறிவித்த லால்குடி, அறந்தாங்கி,

[திரு. கே.பி. அன்பழகன்] [2021 ஆகஸ்ட் 26

திருவெண்ணெய்நல்லூர், தென்னாங்கூர் போன்ற கல்லூரிகளுக்கும் இடங்களைத் தேர்வு செய்து, கட்டமைப்பு வசதிகளைச் செய்து இப்போது அந்தக் கல்லூரிகள் முழுமையாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆட்சி மாற்றம் வருகின்றபோது எதற்குமே பணம் ஒதுக்கவில்லை என்று சொல்லக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லிவிடுகிறேன். இவர்களுடைய ஆட்சியில், கடைசி ஆண்டில் 13 கல்லூரிகளை அறிவித்தார்கள். இன்றைக்கு, நான்கு இடங்களில் நாங்கள்தான் கட்டடங்கள் கட்டப் போகிறோம். இவ்விடங்களில் உள்ள கல்லூரிகளெல்லாம் வாடகைக் கட்டடங்களில் நடைபெற்று கொண்டிருக்கின்றன. கல்லூரிகள் நடத்துவது என்பது வேறு, பல்கலைக்கழகங்களை புதிதாக உருவாக்குவது என்பது வேறு. அதுவும் பல்கலைக்கழகங்களுக்குப் பெயர் வைத்ததற்காக எடுத்தோம் என்று சொல்வதும் தவறான கருத்தாகும். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, எங்களுக்கு எந்தவித காழ்ப்புணர்ச்சியும் கிடையாது. அண்ணாமலை பல்கலைக்கழகம் ஒரு Unitary University ஆக இருப்பதால் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. அதை இணைப்புப் பல்கலைக்கழகமாக மாற்றுவதால், அதனோடு சேர்ந்து படிக்கின்ற கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் சிறப்பாகப் பயனடைவார்கள். உயர் கல்வியிலே அவர்களுக்கு உலகளவிலே சிறந்த பெயர் கிடைக்கும். அந்தக் காலத்தில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் படித்தவர்களுக்கு சிறப்பான பெயர் இருந்தது. அதேமாதிரி அண்ணாமலை பல்கலைக்கழகத்திலே படிக்க வேண்டுமென்ற உணர்வு, அனைவருக்கும் உண்டு. அங்கு பயில்கின்றவர்களின் கல்வி மேம்பட வேண்டும். மாணவர்கள் பலனடைய வேண்டுமென்பதற்காகத்தான் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, வேறு காரணம் அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேச ஆரம்பித்து 25 நிமிடங்கள் ஆகிவிட்டன. உரையை சீக்கிரம் முடியுங்கள். University சப்ஜெக்ட்டை விட்டு வெளியே வாருங்கள். அடுத்த சப்ஜெக்ட் பற்றி சொல்லுங்கள்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கின்றார்கள். ஆகவே, ஒரேயொரு கருத்தை மட்டும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு, அண்ணாமலை பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரைக்கும், அது பல்துறை பல்கலைக்கழகமாக இருக்கிறது. அதில் கலை மற்றும் அறிவியல் தொடர்பான U.G. Course கிடையாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில், நாம் இன்றைக்கு பல்கலைக்கழகங்களை உருவாக்குகின்றபோது, அதிலே கலை மற்றும் அறிவியல் தொடர்பான U.G. courses ஆரம்பிப்பதில்லை, P.G., மற்றும் M.Phil., Ph.D. மட்டும்தான் அங்கே இருக்கிறது. விழுப்புரம் மாவட்டம் ஒரு பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அதில் 3,000 முதல் 4,000 பேர் படிக்கக்கூடிய வாய்ப்புக் கிடைக்கும் என்ற காரணத்தினால்தான் நான் இன்றைக்கு விழுப்புரத்தை மையமாகக் கொண்டு பல்கலைக்கழகம் வேண்டும் என்று கேட்கிறேன் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, மேலும் அந்தப் பல்கலைக்கழகம் அங்கு தொடங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஒரு சில கோரிக்கைகளை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். பாலக்கோடைத் தலைமையிடமாகக் கொண்டு வருவாய்க் கோட்டம் அமைக்க, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய காலத்திலே முன்மொழிவு அனுப்பப்பட்டு, ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அது தயார் நிலையில் இருக்கிறது. அதை ஒரு கோட்டமாக அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களைப் பொறுத்தவரை, 'வானம் பார்த்த பூமியாக' இருக்கக்கூடிய சூழ்நிலையில் அங்கே மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களால் எண்ணேகொள் அணைக்கட்டின் வலதுபுறம், இடதுபுறம் கால்வாய்த் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு,

[திரு. கே.பி. அன்பழகன்] [2021 ஆகஸ்ட் 26

அதற்கான நிலத்தைக் கையகப்படுத்துவதற்காக 72 கோடி ரூபாய் அன்றைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. எண்ணேகொள் புதூரில் இருந்து தும்பலஅள்ளி அணைக்கட்டு வரை 72 கோடி ரூபாய் மதிப்பில் 33 ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டு செல்லும் வகையில் 16 தடுப்பணைகளைக் கட்டுவதற்கான நிலத்தைக் கையகப்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் பல நில உடைமையாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம், package 1, package 2 என்ற வகையில் tender விடப்பட்டது. அதிலே package 2–ஐப் பொறுத்தவரை tender எடுக்கப்பட்டிருக்கிறது. அது இறுதி செய்யப்படவில்லை. Package 1-ஐப் பொறுத்தவரை இன்னும் யாரும் ஒப்பந்தப்புள்ளி கோரி வரவில்லை என்று இரண்டுமுறை தள்ளிப் போடப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய நிலத்தடி நீரை உயர்த்துவதற்கும், குடிநீர் வசதியைப் பெருக்குவதற்கும், விவசாயப் பெருமக்கள் விவசாயம் செய்வதற்கும், அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும். மேலும் அங்கே இருக்கக்கூடிய அனையாளம் அணைக்கட்டிலிருந்து வலதுபுறக் கால்வாய் நெடுகை 8.8 கிலோ மீட்டர் வரையில் ஏற்கெனவே கால்வாய் இருக்கிறது. அதை நீட்டித்து கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 12 ஏரிகளுக்கும், தருமபுரி மாவட்டத்தில் தூள் செட்டி ஏரி என்ற ஒரு ஏரிக்கும் தண்ணீர் வருகின்ற நிலையை உருவாக்குவதற்காக நில எடுப்பிற்காக 12.12 கோடி ரூபாய்க்கான திட்டம் வருவாய்த் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றித்தர tender விடப்பட்டிருக்கிறது. Tender விடப்பட்டு இறுதி செய்யப்பட்டு இன்னும் அறிவிப்பு வெளியிடப்படவில்லை. அதேபோல புலிக்கரை கால்வாய் திட்டம், ஜெர்தலாவ் கால்வாய் 5,000 மீட்டரிலிருந்து, புலிக்கரை ஏரி மற்றும் 14 ஏரிகள் பயன்படக்கூடிய வகையிலே இந்தத் திட்டத்திற்கும் tender விடப்பட்டிருக்கிறது. ஆனால், நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பில் அது குறித்து தகவல் எதுவும் இடம்பெறவில்லை. ஆகவே இந்த மூன்று திட்டங்களையும் நிறைவேற்றி, அங்கே நம்முடைய தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களினுடைய நிலத்தடி நீர் ஆதாரத்தை உயர்த்துவதற்கான வாய்ப்பை நீங்கள் உருவாக்கித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்,

2021 ஆகஸ்ட் 26]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணேகொள் திட்டத்தையும் மற்ற திட்டங்களையும் நாங்கள் கைவிட வேண்டும் என்று நினைக்கவில்லை. ஆனால், அந்தத் திட்டத்தை நான் படித்துப் பார்க்கிறபொழுது over estimate ஆகத் தெரிகிறது, அதுதான். நான் பெரிய Engineer அல்ல. ஆனால் எனக்குத் தெரிந்த அளவிலே அந்த estimate–ஐ boost செய்ததுபோல் இருக்கிறது. அதை எப்படி boost செய்வார்கள் என்று எனக்குத் தெரியும்; எப்படி boost செய்திருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும்; நான் அந்தத் திட்டத்தைக் குறை சொல்லவில்லை. அந்தத் திட்டத்திற்கு போடப்பட்ட estimate சரியா என்றுதான் எங்களுடைய பொறியாளர்களிடத்தில் கேட்டிருக்கிறேன். அவர்களுடைய மதிப்பீடு கிடைத்தபிறகு அதைப்பற்றி முடிவு எடுக்கப்படும். இப்போது திட்டத்தை cancel செய்யவில்லை. It is kept in abeyance.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், மறுமதிப்பீடு கேட்டிருக்கிறார்கள். 30 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள், முடித்துவிடுங்கள்

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். இன்றைக்கு தருமபுரி மாவட்டத்தை மையமாகக்கொண்டு, Diploma in Agriculture, Diploma in Horticulture போன்ற படிப்புகளுக்கான இரண்டு கல்லூரிகள் அங்கே அறிவிக்கப்பட்டு, 92 ஏக்கர் நிலமானது பல்கலைக்கழகத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டது. இப்போது மாணவர்கள் சேர்க்கை தொடங்குகின்றபட்சத்தில் ஒரு பள்ளியினுடைய இடத்தைத் தேர்வு செய்துள்ளோம். பள்ளி மாணவர்களுக்குத் தேவைப்படாத காரணத்தினால் அந்தப் பள்ளியையும் எடுக்க அனுமதி பெற்றுள்ளோம். கல்லூரிக்கு வரக்கூடிய மாணவர்கள் தங்குவதற்கு hostel–க்கு உண்டான வீடுகளும் பார்க்கப்பட்டு, தயார் நிலையில் உள்ளது. ஆகவே, இந்தாண்டு அதிலே மாணவர்கள் சேர்க்கைக்காக முயற்சி எடுத்து செயல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், எல்லா அமைச்சர்களிடத்திலும் கோரிக்கை வைத்துவிட்டீர்கள்.

[*2021 ஆகஸ்ட் 26*

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுவெல்லாம் ஏற்கெனவே G.O. போட்டு ready செய்யப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நல்லதைத்தான், நல்ல கருத்தைத்தான் சொல்கிறீர்கள், போதும், மீதி இருக்கிற கோரிக்கைகளைத் தாருங்கள், நான் பதிவு செய்துக்கொள்கிறேன். 31 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள், கொஞ்சம் முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு Diploma in Agriculture–ல் 40, Diploma in Horticulture–ல் 40 ஆக 80 மாணவர்கள் இப்போது படிப்பதற்குண்டான வாய்ப்புக் கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், சொல்லிவிட்டீர்கள்.

பிற்பகல் 1–10

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாவட்டத்தைச் சேர்ந்த, வெளியில் சென்று படிக்க வாய்ப்பில்லாத ஏழையெளிய மக்கள் அங்கே வேளாண் துறை சம்பந்தப்பட்ட படிப்பைப் படிக்க வேண்டும் என்பதற்காக நீங்கள் வாய்ப்பை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள், இப்போது சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க தருமபுரி மாவட்டத்தைத் தேர்வு செய்திருக்கின்றார். அங்கே 1,783 ஏக்கர் நிலம் கையகப்படுத்துவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே 1,233 ஏக்கர் நிலமானது அரசு புறம்போக்கு நிலம் மற்றும் 550 ஏக்கர் நிலமானது பட்டா நிலம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் மானியக் கோரிக்கையின்மீது பேசலாமே, school, college–க்கு வந்துவிடலாம். College குறித்த subject–க்கு வந்து நன்றி சொல்லுங்கள்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி சொல்வதற்காகத்தான். ரூ.1,500 கோடி அறிவித்திருக்கிறார்கள். அந்த இடத்தில் 1,000 ஏக்கரில்

2021 ஆகஸ்ட் 26] [திரு. கே.பி. அன்பழகன்]

SIPCOT Phase–I என்று அறிவிக்கப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டிருக்கின்றது. அது இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதற்காக அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தருமபுரி மாவட்டத்தில் தொழிற்சாலைகள் எதுவுமே இல்லை. ஆகவே, உடனடியாக முதற்கட்டமாகவே அதனை எடுத்துச் செயல்படுத்த வேண்டுமென்று அவரிடம் அந்தக் கோரிக்கையை வைக்கின்றேன்.

அதேபோல, பெரியார் பல்கலைக்கழக முதுநிலை விரிவாக்க மையமானது இப்போது தருமபுரியில் நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று பக்கம் 112–ல், கொள்கை விளக்கக் குறிப்பில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அங்கே மாணவர் சேர்க்கையும் அதிகமாக இருக்கின்றது. அதற்காக தனியாகக் கட்டடம் கட்டுவதற்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் 27 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு, இப்போது அங்கே கட்டமைப்பு வசதிக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, அங்கே புதியதாக ஒரு பல்கலைக்கழகத்தை உருவாக்க வேண்டுமென்றும் அவரிடம் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும். நன்றி சொல்லுங்கள். நேரம் 1–11 ஆகிவிட்டது.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழக மண்டல மையம் கட்டுவதற்காக tender விடப்பட்டு, அந்த tender இறுதி செய்யப்படாமல் அங்கே கட்டட கட்டுமானப் பணியானது தொடங்கப்படாமல் இருக்கிறது. அதையும் அவர்கள் கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லுங்கள்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டே இரண்டு points.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடம்; 1–12–க்கு முடியுங்கள்.

[*2021 ஆகஸ்ட் 26*

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் 10 வாரங்களாக பால் பட்டுவாடா இல்லை. கிருஷ்ணகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, 15 வாரங்களாக பால் பட்டுவாடா இல்லை. ஆகவே, அந்த ஏழையெளிய மக்களுக்கு அந்தப் பணம் கிடைக்கின்ற வகையில் அந்தப் பகுதியில் பால் பட்டுவாடா செய்வதற்குண்டான வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு, M.P. fund–ஐப் பயன்படுத்தி கட்டடம் கட்டலாம் என்று இருக்கிறது. அதேமாதிரி M.L.A. fund–ஐ செலவு செய்து கட்டடம் கட்டலாம் என்று வழிவகைகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே இருந்து, தற்போது இந்த 10 ஆண்டுகளாகத்தான் இல்லை. நாங்களே பள்ளிக்கூடம் கட்டியிருக்கிறோம். உங்கள் தகவலுக்குச் சொல்கிறேன்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இன்றைக்கு விலையில்லா மடிக்கணினி திட்டமானது தொடருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்து விடுகிறேன். இன்றைக்கு காணும் இடமெல்லாம் கல்லூரிகள்; கலை அழகோடு கல்வி வளாகங்கள்; கல்வியின் தரத்தைக்கூட்டி, அறிவினை ஊட்டி, கற்க வேண்டும் என்ற வேட்கையைக் கூட்டி, அலையலையென மாணவர்களுடைய சேர்க்கை; அறம் சொல்லும் கல்வி, அகிலம் வெல்லும் கல்வி, வந்தவரெல்லாம் வென்றவர் என்ற நிலை; அறத்தில் உயர்ந்த நிலை; அறிவின் சுடர் ஆராய்ச்சி; நம் தேசத்திற்கே உயர் கல்வியில் நாம் தான் உயர்ந்த சாட்சி. எல்லோர் இதயங்களையும் தம் ஈகை குணத்தால் ஈர மனத்தால் ஈர்த்த மாதரசி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மற்றும் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் திட்டங்களால் உச்சத்தைத் தொட்டுள்ளோம் என்று கூறி இந்த நிதிநிலை அறிக்கையில் பேசுகின்ற வாய்ப்பினைத் தந்த உங்களுக்கும் நன்றி தெரிவித்து, அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

2021 ஆகஸ்ட் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றதிலிருந்து அவர் மறையும் வரை, இன்றைக்கு கிராமத்திலிருந்து நகரம் வரை ஏழையெளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட குடும்பங்களில் வாழும் மாணவ மாணவியர்களெல்லாம் நன்றாகப் படித்து உயர்ந்த நிலைக்கு வர வேண்டுமென்பதற்காக ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகவும், நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும், உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் தரமுயர்த்தியதோடு, பல கல்லூரிகளைத் திறந்து இன்றைக்கு ஏழையெளிய ஒடுக்கப்பட்ட மாணவர்கள் உயர் கல்வியைப் படிப்பதற்கு வித்திட்டவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவருடைய திருநாமத்தின் பெயரிலேதான் விழுப்புரத்திலே புதிதாகப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதற்குள் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அந்த நிலையிலே அது தொடர வேண்டும் என்று மாண்புமிகு முன்னாள் அமைச்சர், மரியாதைக்குரிய சகோதரர் திரு. அன்பழகன் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் உயர் கல்வித் துறை அமைச்சர் அந்தப் பல்கலைக்கழகம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்படும் என்று அறிவித்திருக்கின்றார். ஆகவே, இதனைக் கண்டித்து வெளிநடப்புச் செய்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கோரிக்கையாக வைக்கின்றேன் என்று சொல்லியிருக்கிறார். நீங்கள் பதிலுரையைக் கேட்டுவிட்டு செல்லுங்கள். பதிலுரை. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை. நீங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். கோரிக்கை வைத்தது உங்கள் உறுப்பினர். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். நேரம் ஆகிவிட்டது, போகலாம் என்று நினைத்தால் அதில் ஒன்றும் மாற்றுக் கருத்து கிடையாது. வெளிநடப்புக்குச் சென்றுவிட்டு வாருங்கள். அதில் தவறு இல்லை. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[*2021 ஆகஸ்ட் 26*

பிற்பகல் 1–15

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மானமும், அறிவும் மனிதனுக்கு அழகு' என்று சொன்ன தந்தை பெரியார் அவர்களை வணங்குகின்றேன்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

தலைவர் என்பார்; தத்துவ மேதை என்பார்; நடிகர் என்பார்; நாடக வேந்தர் என்பார்; சொல்லாற்றல், சுவைமிக்க எழுத்தாற்றல் பெற்றார் என்பார்; மனிதர் என்பார்; மாணிக்கம் என்பார்; மாநிலத்து அமைச்சர் என்பார்; அன்னை என்பார்; அருள்மொழிக் காவலர் என்பார்; அத்தனையும் தனித்தனியே சொல்வதற்கு நேரமற்றோர், நெஞ்சத்து அன்பாலே அண்ணா என்ற ஒரு சொல்லால் அழைக்கட்டும் என்றே அவருடைய அன்னை பெயரும் தந்தார். (மேசையைத் தட்டும் ஒலி)

அண்ணா அவர்களுக்காக இதை யார் சொன்னார்களோ, அவர்களுக்கும் இவையனைத்தும் பொருந்தும்விதமாக 'கலைஞர்' என்ற ஒற்றைச் சொல்லால் அனைத்துத் துறைகளையும் ஆண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) மண்ணுக்குள் போனாலும், கண்ணுக்குள் நிற்கின்ற எங்களுடைய முத்தமிழறிஞரை நெஞ்சத்தில் நிறுத்தி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தினுடைய மேயராக, அதற்கான அங்கியை அணிந்தபொழுது, அவரிடமிருந்த கடமையுணர்ச்சி; லண்டன் மாநகரிலே கௌரவ டாக்டர் பட்டம் பெற்றபொழுது அன்று அவர் அந்த அங்கியை அணிந்திருந்தபோது அவரிடமிருந்த அந்த கம்பீரம், கோவை கொரோனா வார்டிலே பாதுகாப்புக் கவசத்தை அவர் அணிந்திருந்தபொழுது, அதே கடமையுணர்ச்சியோடு, அதே கம்பீரத்தோடு, இந்த நாட்டு மக்களைக் காக்க நானிருக்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொன்னவர், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

2016 ஆம் ஆண்டிலே நான் முதன்முதலில் என்னுடைய கன்னிப் பேச்சைப் பேசும்பொழுது, 'சொல்லாடலில் கண்ணியமான

2021 ஆகஸ்ட் 26] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

பேச்சின் சுருக்கமே கன்னிப் பேச்சு என்கின்ற வகையிலே நீ பேசவேண்டும், நீ எழுப்புகின்ற உன்னுடைய கேள்வி கண்ணியமான முறையில் இருக்க வேண்டும்' என்று எனக்கு அறிவுறுத்தி, இன்றைக்கு 'அதே கண்ணியத்தோடு உன்னுடைய பதிலுரையும் இருக்க வேண்டும்' என்று சொல்லி, ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, சரியாக 110–வது நாளில் வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பாக பேரவை விதி 110–ன்கீழ் நம்முடைய முத்தமிழறிஞருக்குப் பெருமை சேர்த்திருக்கின்ற என்னுடைய அரசியல் ஆசான், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய அமைச்சரவையில் உள்ளாட்சித் துறை அமைச்சராக, வேளாண் துறை அமைச்சராக, வருவாய்த் துறை அமைச்சராக, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சராகப் பணியாற்றிய மறைந்த என்னுடைய தாத்தா அன்பிலார் அவர்களையும் இரண்டு முறை இந்தச் சட்டமன்றத்தில் பணியாற்றுகின்ற வாய்ப்பைப் பெற்ற, மறைந்த என்னுடைய தந்தை, அன்பில் பொய்யாமொழி அவர்களையும் நெஞ்சத்தில் நிறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பு, இந்தக் கல்வித் துறையைக் கையாண்ட ஐயா அவினாசலிங்கனார், ஐயா சி. சுப்பிரமணியம் அவர்கள், ஐயா இனமான பேராசிரியர் பெருந்தகை அவர்கள், நம்முடைய மாண்புமிகு அண்ணன் தங்கம் தென்னரசு அவர்கள் உள்ளிட்டவர்கள் வகுத்துத்தந்த பாதையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, கடமையுணர்வோடு நான் பணியாற்ற வேண்டுமென்று உறுதியேற்கின்ற ஒரு நாளாக இந்த நாளை நான் பார்க்கின்றேன்.

பொன்விழா காணுகின்ற நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர், மூத்த உறுப்பினர், அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும்; திருச்சியிலே உள்ளாட்சித் தேர்தல் என்று சொன்னால், 100 சதவிகிதம் வெற்றி; திருச்சி (தெற்கு) மாவட்டக் கழகச் செயலாளராக நான் சார்ந்திருக்கின்ற மூன்று தொகுதிகள் மட்டுமல்ல, திருச்சியில் இருக்கின்ற 9 தொகுதிகளிலும் வெற்றி என்ற வகையில் 'வெற்றியென்றால், நூற்றுக்கு நூறு அதுதான்

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2021 ஆகஸ்ட் 26

கே.என். நேரு' என்று எங்களுடைய தலைவர் அவர்களால் (மேசையைத் தட்டும் ஒலி) பாராட்டப்பட்டிருக்கின்ற எங்களுடைய மாவட்டத்தின் மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களையும், இந்த நேரத்தில் நான் வணங்குகின்றேன்.

நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் அவர்கள் பல நேரங்களில் பல ஆலோசனைகளை எனக்கு வழங்கியிருக்கின்றார். அவருக்கும் என்னுடைய நன்றி.

'காற்றடித்தால் கலைந்து போவதற்கு இது மேகக் கூட்டம் அல்ல; களத்தில் இறங்கி கலங்கடிக்கின்ற கலைஞர் கூட்டம்' என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் (மேசையைத் தட்டும் ஒலி) பணியாற்றிக்கொண்டிருக்கின்ற எங்களுடைய சிறப்புமிக்க அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய வணக்கத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நீங்கள் பேரவைத் தலைவராக இங்கே இருக்கிறீர்கள். இது குற்றங்களைச் சொல்கின்ற மன்றம்; குற்றத்திற்குத் தேவையான விளக்கத்தை வழங்குகின்ற மன்றம். குறைகளைச் சொல்கின்ற மன்றம்; குறைகளைத் தீர்க்கின்ற மன்றம், இந்த மன்றம். இன்றைக்கு நீங்கள் ஒரு சட்டமன்ற உறுப்பினராக இருந்திருந்தால், ஒரு மைக்தான் இருந்திருக்கும். அதுவும் உங்கள் control–இல் இருந்திருக்காது. ஆனால் 234 மைக்குகளும் இன்றைக்கு உங்களுடைய control–இல் இருக்கின்றன என்று சொன்னால், அனைவருக்கும் சமமான வாய்ப்பை வழங்கி அந்த நாற்காலிக்குப் பெருமை தேடிக்கொண்டிருக்கிற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1–20

+2 தேர்வுகள் நடத்தலாமா, வேண்டாமா என்று என்னுடைய துறை அதிகாரிகளுடன் நான் ஆலோசனை நடத்தியபோது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகத்திலிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. "அதிகாரிகள் மட்டத்தில் நீங்கள் ஆலோசனை நடத்துவது ஒருபுறம் இருந்தாலும், ஜனநாயக முறையில் நமது சட்டமன்றப் பேரவையில் இருக்கின்ற அனைத்து சட்டமன்றக் கட்சித் தலைவர்களுடனும் ஆலோசனை

2021 ஆகஸ்ட் 26] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

நடத்தி, அதன்பிறகு நாம் முடிவெடுக்கலாம்" என்று சொன்ன ஜனநாயகப் பாதுகாவலர், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உள்ளிட்ட அனைத்து சட்டமன்றக் கட்சித் தலைவர்களுக்கும் நானே தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினேன். அழைப்பவன் சிறியவன் என்று கருதாமல் மாண்புமிகு அமைச்சர் அழைக்கின்றார் என்றும், மாணவர்களின் நலன் காக்க அழைக்கின்றார் என்கின்ற அந்த உணர்வோடு கலந்து கொண்ட அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும், அவர்கள் சார்பாகக் கலந்துகொண்ட பிரதிநிதிகளுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

6½ கோடி மக்கள் இருக்கின்ற நம்முடைய தமிழகத்தில், 234 நபர்களுக்குத்தான் இந்த அவையில் உட்கார்ந்து பங்கு பெறுகின்ற வாய்ப்பு கிடைக்கின்றது. அந்தப் பொறுப்புணர்வோடு அமர்ந்திருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கங்களை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இரண்டாவது முறையாக திருவெறும்பூர் தொகுதியில் போட்டியிட்டு என்னை வெற்றி பெறச் செய்த என்னுடைய தொகுதி மக்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்திருக்கின்ற அன்பு உடன்பிறப்புகளுக்கும், மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணியைச் சார்ந்திருக்கின்ற அனைத்துத் தலைவர்களுக்கும், தோழர்களுக்கும், தொண்டர்களுக்கும், ஆதரவு தெரிவித்த அனைத்து அமைப்புகளுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை அவர்களுடைய பாத மலர்களில் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

என்னுடைய தொடக்கப் பள்ளியிலிருந்து என்னுடைய கல்லூரிக் காலம் வரை எனக்குப் பாடம் புகட்டிய அனைத்து ஆசிரியப் பெருமக்களையும் இந்த நேரத்தில் நன்றியோடு நினைவுகூர நான் கடமைப்பட்டிருக்கின்றேன். இதைவிட பெரும்பேறாக நான் கருதுவது, 'நெஞ்சுக்கு நீதி'–யிலே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், எங்களின் நட்பைப் பற்றி எழுதும்போது, என்னுடைய பெயரையும் அதில் mention செய்து எழுதியிருக்கிறார். உள்ளபடியே பெருமையான ஒன்றாக அதை நான் கருதுகிறேன். அதை விடவும், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவருடைய மூத்த

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2021 ஆகஸ்ட் 26

பிள்ளையாக இருக்கின்ற முரசொலியில் இரண்டு மாதத்திற்கு முன்பு "அன்பில் எழுப்பிய ஆவேசக் குரல்" என்ற பெயரில் தலையங்கத்தை வெளியிட்டிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன். பள்ளி மாணவனாக பள்ளிக்குச் சென்ற அவரை நான் பார்த்திருக்கின்றேன். கல்லூரி மாணவனாக கல்லூரிக்குச் சென்ற அவரை நான் பார்த்திருக்கின்றேன். பள்ளியிலும், கல்லூரியிலும் அவருடன் சேர்ந்து நான் படிக்கவில்லையே என்கிற அந்த ஏக்கம் இருக்கிறது என்று சொன்னாலும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, correspondent ஆக நீங்களும், H.M. ஆக மாண்புமிகு முதலமைச்சரும் இருக்கும் இந்த அவையில் நமது சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினரோடு நான் அமர்ந்து பணியாற்றுகிறதென்பது, (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு பெருமைக்குரிய ஒரு விஷயம். அப்படிப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் இந்த மாபெரும் இயக்கத்தை, வருங்காலத்தில் வழிநடத்த இருக்கின்ற எங்கள் இளைஞரணிச் செயலாளருக்கு இந்த நேரத்தில் நான் என்னுடைய நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு, ஓர் அழகான, அருமையான ஆளுநர் உரையுடன் இந்தச் சட்டமன்றப் பேரவை தொடங்கப்பட்டது. 5 வருடங்களுக்கு முன்னால் எப்படி இருந்தது என்பதை இங்குள்ள அனைவரும் பார்த்திருப்பீர்கள். பழைய உறுப்பினர்கள் அனைவரும் இருக்கின்றீர்கள். ஆனால் இந்த முறை அந்த ஆளுநர் உரையைப் பார்க்கும்போது அவ்வளவு கம்பீரம், அவ்வளவு ஒரு பெருமை, முதல் பக்கத்தைப் படித்துப் பார்த்தபோது, தன்மானம் என்ற வேட்டி இடுப்பேறியது. இரண்டாவது பக்கத்தைப் படித்துப் பார்த்தபோது, சுயமரியாதை என்ற மேல்சட்டை மேலேறியது. மூன்றாவது பக்கத்தைப் படித்துப் பார்த்தேன். தமிழனாகப் பெருமைப்பட்டேன், தொடர்ந்து 48 ஆம் பக்கம் வரை சென்றேன். முழுமையான திராவிடனாக உணர்ந்தேன் என்று சொல்லுகின்ற அளவிற்கு அந்த ஆளுநர் உரை மிக நேர்த்தியான ஆளுநர் உரையாக இருந்தது. அந்த ஆளுநர் உரையில்தான், நம்முடைய அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் பற்றி, அதனை எப்படியெல்லாம் புனரமைக்க வேண்டும் என்ற செய்தியெல்லாம் வெளியிடப்பட்டிருந்தது. அது மட்டுமல்ல, அனைத்துக் குழந்தைகளுக்கும், கல்வி சென்றடைய

2021 ஆகஸ்ட் 26] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

வேண்டும் என்ற ஒரு செய்தியும் இருந்தது. இப்படி தொடர்ந்து அந்த ஆளுநர் உரைக்குப் பிறகு, நிதிநிலை அறிக்கை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, நம்முடைய மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்கள், என்னுடைய பாசத்திற்குரிய அண்ணன் அவர்கள், பொதுவாக அடுத்தவர்களிடம் குறிப்பிடும்போது அவரை நான் Angry Bird என்று தான் சொல்லுவேன். அநியாயத்திற்குக் கோபப்படக் கூடியவர் அல்ல; நியாயத்திற்குக் கோபப்படக் கூடிய நம் மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்களை நான் இந்த நேரத்தில் பெருமையுடன் நினைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த நிதி நெருக்கடியிலும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தாயுள்ளத்தோடு, இந்தப் பள்ளிக் கல்வித் துறைக்கு *32,599.54* கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கும் இந்த நேரத்தில் நான் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். *32,599.54* கோடி ரூபாய் நிதி ஒதுக்கிய பிறகு "இது மக்களுடைய வரிப் பணம். இதை ஒழுங்கான முறையில், பள்ளிச் செல்வங்களுக்கு, பள்ளி மாணவர்களுக்குப் பயன்படுத்தும்வகையில், உங்களுடைய துறை செயல்பட வேண்டும்" என்ற ஒரே ஒரு அறிவுரையை முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார். கண்டிப்பாக அதை நாங்கள் நிலைநிறுத்துவோம்.

பிற்பகல் 1–25

'முழு வயிறு உண்ணாதவர், முதுகெலும்பு முறிய உழைப்பவர், வாழ்வின் சுவையை அனுபவியாதார், வலியோரின் பகடைக்காய்களாய், உலகோர்தந்த வரிப் பணமே, கோட்டையாய், கொடி மரமாய், பாதையாய், பகட்டுகளாய், அறிவு பெற விரும்பும் கல்விக் கூடங்களாய் திகழ்கின்றன' என்பது அண்ணாவினுடைய கூற்று. அதை நெஞ்சில் நிறுத்தி, எந்தப் பாமர மக்கள் அவர்களுடைய வரிப் பணத்தை இந்த நாட்டிற்காகச் செலுத்துகிறார்களோ, அந்தப் பாமர மக்களுடைய குழந்தைகளினுடைய கல்வி அறிவிற்காக, அவர்கள் சமுதாயத்தில் முன்னேற வேண்டும் என்பதற்காக, பொருளாதாரத்தில் முன்னேற வேண்டுமென்பதற்காக, அவர்களுக்காகச் செலவிடுகின்ற மிகப் பெரிய அர்ப்பணிப்புத் துறைதான் எங்களுடைய பள்ளிக் கல்வித் துறை.

இந்தப் பள்ளிக் கல்வித் துறை என்பது, கிட்டத்தட்ட *5* I.A.S. Officers, *12* Directors, *21* Joint Directors கொண்ட மிகப் பெரிய

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2021 ஆகஸ்ட் 26 துறை. கிட்டத்தட்ட 58,000 பள்ளிகள் இருக்கின்றன. 1,30,00,000 மாணவர்கள் இருக்கிறார்கள். நாம் பார்க்கிற மக்கள்தொகையில் 6 பேரில் ஒருவர் பள்ளி மாணவராக இருக்கிறார். School Education Department–ல் கிட்டத்தட்ட 4 vertical levels இருக்கின்றன. Education Department என்று எடுத்துக்கொண்டால், அதிலிருக்கின்ற Elementary Education ஆக இருந்தாலும் சரி, Matriculation ஆக இருந்தாலும் சரி, Examination ஆக இருந்தாலும் சரி, SCERT ஆக இருந்தாலும் சரி, non–formal education ஆக இருந்தாலும் சரி, library ஆக இருந்தாலும் சரி, vertical ஆக பார்க்கப்படுகின்றது.

உங்களில் நிறைய பேர் teachers பற்றி கேட்டிருக்கிறீர்கள். Teachers Recruitment Board இருக்கிறது; Textbook and Educational Services Corporation தனியாக இருக்கிறது. Samagra Shiksha (SS) என்று சொல்லப்படுகின்ற ஒருங்கிணைந்த பள்ளித் திட்டம் ஒன்றிய அரசும் மாநில அரசும் 60:40 என்ற ratio–வில் நிதி ஒதுக்கி, அதன் மூலமாக பள்ளி செல்லும் மாணவச் செல்வங்களுக்கு, எப்படியெல்லாம் பள்ளிகளில் கல்வியைக் கொண்டு செல்ல வேண்டும் என்கின்ற உயரிய நோக்கம் எங்களுக்கு இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தப் பள்ளிக் கல்வித் துறைக்கு அமைச்சராக 7 ஆம் தேதி பொறுப்பேற்றேன், 8 ஆம் தேதி ஊரிலிருந்து நண்பர்கள் எல்லாம் வாழ்த்துச் சொல்ல வந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொலைபேசியில் "என்ன செய்துகொண்டிருக்கிறாய்" என்று கேட்டார்கள், 'வாழ்த்து வந்துகொண்டிருக்கிறது, வாழ்த்து பெற்றுக்கொண்டிருக்கிறேன்' என்று கூறினேன். 'உடனடியாக Anna Centenary Library சென்று அங்கு ஆய்வு செய். அதுதான் உண்மையான வாழ்த்தாக இருக்கும்' என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உடனடியாக Anna Centenary Library–க்குச் சென்றேன். மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. செங்கோட்டையன் அண்ணன் அவர்கள் பேசும்போது "Anna Centenary Library–ஐ ரொம்ப அழகாக வைத்திருக்கிறோம்" என்று சொன்னார்கள். அப்படியில்லை. நேரடியாகச் சென்று பார்க்கும்போதுதான் எப்படி கேட்பாரற்றுக் கிடக்கிறது என்பது தெரிந்தது. மிகவும் வருத்தத்திற்குரியதாக இருந்தது. ஏனென்றால் அவ்வளவு foresee செய்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அவ்வளவு அழகாக, ஆசியாவிலேயே இரண்டாவது பெரிய (மேசையைத் தட்டும் ஒலி) library ஆக அதைக் கட்டினார்கள். பெருமைக்குரிய அந்த library–ஐ

2021 ஆகஸ்ட் 26] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

சின்னாபின்னமாக்கி வைத்திருந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போதுகூட "அங்கிருக்கிற மண்டபத்தைக்கூட கல்யாணத்திற்கு வாடகைக்கு விட்டு நீங்கள் பார்த்தீர்களே, அதை நீதிமன்றம் கண்டித்தது" என்று சொன்னார்கள். அது உண்மைதான். அப்படிப்பட்ட அந்த library–ஐ மீட்டெடுக்க வேண்டிய பணி என்பது, எங்களுக்கு ஒரு மிகப் பெரிய பணியாக இருக்கின்றது. அதற்கென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள்.

இதுமட்டுமல்ல, தொடக்கப் பள்ளியில் நாம் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். இங்கே பேசிய பல உறுப்பினர்கள் Performance Grading Index–ல் நாம் இரண்டாவது இடத்தில் இருக்கிறோம், மூன்றாவது இடத்தில் இருக்கிறோம் என்று சொன்னார்கள். கிட்டத்தட்ட 1,000 mark–ல் 906 mark வாங்கியிருந்தாலும் பெருமைப்பட முடியவில்லை. ஏனென்றால் அதில் நிறைய parameters இருக்கின்றன. Access என்று ஒரு parameter இருக்கிறது. Infrastructure என்று ஒரு parameter இருக்கிறது. Equity என்று ஒரு parameter இருக்கிறது. அதேபோல் learning outcomes என்று ஒரு parameter இருக்கிறது. இதெல்லாம் பார்க்கும்பொழுது, மற்ற எல்லாவற்றிலும் அதிக mark வாங்குகிறார்கள். Learning outcome, 'கற்றல் திறன்' என்று பார்த்தால், அதில் இந்தியாவில் 23–வது மாநிலமாக இருக்கிறோம். Review Meeting–ல் சொல்லும்போது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிர்ச்சியாகி "முதலில் அதைச் சரிசெய்யும் வேலையை நீங்கள் செய்ய வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 'கண்டிப்பாக அதையும் நாங்கள் செய்வோம்' என்ற உறுதிமொழியைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆரம்ப நிலையில் இருக்கின்ற dropouts 0.75 விழுக்காடாக இருக்கிறது. அதைக்கூட இல்லாதவண்ணம் நாம் செய்ய வேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தலுக்கு முன்பு 7 உறுதிமொழிகளைச் சொல்லியிருந்தார்கள். அதில் நான்காவது உறுதிமொழியாக இருப்பது மருத்துவமும், கல்வியும்தான். இன்றைக்கு pandemic situation–இல் மிகவும் sensitive ஆக இருக்கின்ற departments இந்த இரண்டு departments–ம்தான். ஏனென்றால், ஏதாவது ஒரு சின்ன வார்த்தை பேசினால்கூட, அது அப்படியே spread ஆகிறது. நம்முடைய கல்வித்தரத்தைப் பொறுத்தவரையில், 17–வது இடத்தில் இருக்கிறோம். National Achievement Survey–படி பார்த்தால், 17–வது இடத்தில்

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2021 ஆகஸ்ட் 26

இருப்பதற்குக் காரணம், கற்றல் திறன் மிகவும் குறைவாக உள்ளது. 10 இடங்களுக்குள் கொண்டு வரவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, dropouts; ஏழாவது வரையில் படிப்பார்கள், எட்டாவது வகுப்பிற்கு வராமல் பாதியிலேயே நின்றுவிட்டு போய்விடுவார்கள். அதுபோல், 10 ஆம் வகுப்பு வந்தவுடன், 11 ஆம் வகுப்புக்குச் சேராமல் பாதியில் நின்றுவிட்டுப் போய்விடுவார்கள். இதுமாதிரி dropouts சதவிகிதமே almost 16 சதவிகிதமாக இருக்கிறது. அதை '5 சதவிகிதமாகக் குறைக்கின்ற அந்த வேலையில் நீங்கள் முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள வேண்டுமென்று' மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால், ஆரம்பகட்ட தொடக்கப் பள்ளி மிக மிக முக்கியமானதாக இருக்கின்றது. இந்தியாவில் பிறந்த Raj Chetty, Harvard University–ல் தனியாக இதற்கென்று research செய்திருக்கிறார். அவர் ஆரம்ப கட்ட தொடக்கப் பள்ளியில் பெறும் கல்வியின் முக்கியத்துவத்தினைச் சொல்லும்போதே 'இந்தத் தொடக்கப் பள்ளியில் நீங்கள் என்ன கற்றுக்கொள்கிறீர்களோ, 5 ஆம் வகுப்பிற்குள்ளாக நீங்கள் என்ன கற்றுக்கொள்கிறீர்களோ அதுதான் பிற்காலத்தில் பயன்படுகிறது. நீங்கள் கல்லூரி முடித்த பிறகு, நீங்கள் ஒரு நிறுவனம் ஆரம்பிப்பதாக இருந்தாலும் சரி, ஒரு நிறுவனத்தில் பணிபுரிவதாக இருந்தாலும் சரி, அந்தந்த emotional quotient, அங்கிருக்கின்ற sentiments, நீங்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும், அந்த discipline எல்லாவற்றையும் எது கற்றுத் தருகிறது என்று பார்த்தால், தொடக்க நிலை கல்விதான்' என்கிறார். ஆக, ஏதோ அமெரிக்காவில் படிக்கின்ற பள்ளி மாணவர்களுக்கு மட்டுமல்ல, நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பள்ளி மாணவர்களுக்கும் பொருந்தும்விதமாக ஒரு Research–ஐ அவர் அழகாகக் கொடுத்திருக்கிறார். Budget Session–ல்கூட நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "கற்பித்தல், வாசித்தல்" திட்டம் குறித்து அறிக்கை ஒன்றினை அளித்தார்கள். தமிழ்நாட்டில் 413 Blocks இருக்கின்றன. ஒரு Block–கிற்கு ரூ.50 இலட்சம் வீதம் கிட்டத்தட்ட ரூ.206.5 கோடியை "கற்பித்தல்–வாசித்தல்" திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1–30

எல்லோருமே சொல்கிறோம், இந்தக் கொரோனா காலத்தில் மாணவர்கள் பள்ளிக்கூடம் போகாமல் இருந்ததால் கடந்த

2021 ஆகஸ்ட் 26] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

இரண்டு வருடத்தில் learning outcome உடைய deficit அதிகம். கடந்த இரண்டு வருடங்களில் கற்றல் திறன் வெளிப்பாடு குறைந்துகொண்டே வருகிறது. நாங்கள் செப்டம்பர் 1 ஆம் தேதி பள்ளிகளைத் திறக்கப் போகிறோம், அதற்கு Standard Operating Procedures தயார் செய்துகொண்டிருக்கிறோம். ஆனால், நாங்கள் சிந்திக்காததையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிந்தித்து, அவர் சொன்னது என்ன தெரியுமா? 1–வது படித்துக் கொண்டிருந்த குழந்தைகள் 3–வது படிக்கப் போகிறார்கள். 7–வது படித்துக்கொண்டிருந்த குழந்தைகள் நேராக 9–வது படிக்கப் போகிறார்கள். அந்த gap–ஐ, நீங்கள் எப்படி சரிசெய்யப் போகிறீர்கள்? முதலில் அதனை நீங்கள் சரிசெய்ய வேண்டும் என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான திட்டத்தை நீங்கள் உருவாக்க வேண்டும் என்று சொன்னதற்குப் பிறகுதான், அதற்கு என்னென்ன முயற்சிகள் எடுக்கலாம், அதில் என்னென்ன புதிது புதிதாகச் செய்யலாம் என்ற வகையில் நாங்கள் ஆலோசனை செய்துகொண்டிருக்கிறோம். ஓர் அமைச்சராக எனக்கு இது ஒரு புதிய அனுபவம். எனக்குதான் அனுபவம் புதிதாக இருக்கிறதென்றால், எனது துறையில் உள்ள I.A.S. அதிகாரிகள்—அனைவரும் trained and experienced officers—ஆனால், அனைவருக்குமே இது ஒரு மிகப்பெரிய challenge ஆக இருக்கிறது. கொரோனா காலத்தில், pandemic situation–ல் எப்படி இதனை handle செய்வது, எப்படிப்பட்ட முடிவினை எடுப்பது என்று நாங்கள் அனைவரும் நினைக்கும்போது எங்களுக்கெல்லாம் மிகப்பெரிய ஒரு நம்பிக்கை விளக்காக இருப்பது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான். அவர், அவரது பொது வாழ்க்கையில் பல பேரிடர்களைப் பார்த்திருக்கிறார். அவர் மேயராக பதவிக்கு வந்தவுடன், 6 மாதத்திற்குள் அதிக அளவு மழை பெய்து, அதனை எவ்வாறு சரி செய்தார்கள், sort out செய்தார்கள் என்பதைப் பார்த்தோம். அதிலிருந்து அவர் பல பேரிடர்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறார். ஆக, அவரது ஆலோசனை பள்ளிக் கல்வித் துறையை அடுத்தக் கட்டத்திற்குக் கொண்டு செல்வதற்கு எல்லாவிதங்களிலும் எங்களுக்குப் பயனுள்ளதாக உள்ளது.

எங்களைப் பொறுத்தவரைக்கும் மாணவர்கள், ஆசிரியப் பெருமக்கள், பெற்றோர்கள், பள்ளி நிருவாகம், அது தனியார் பள்ளியாக இருந்தாலும் சரி, அரசுப் பள்ளியாக இருந்தாலும் சரி, அதுபோல் பள்ளிக் கல்வித் துறையைச் சார்ந்திருக்கின்ற Department ஆக இருந்தாலும் சரி, அந்த ஐந்து பேரும் ஒன்று

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2021 ஆகஸ்ட் 26

சேர்ந்து ஒருங்கிணைந்து இருந்தால்தான் இந்தப் பள்ளிக் கல்வித் துறையை அடுத்த கட்டத்திற்குக் கொண்டுசெல்ல முடியும். ஏனென்றால் இந்த system அப்படி உள்ளது. அனைத்து உறுப்பினர்களும் பேசியதில், நம்முடைய முன்னாள் அமைச்சர் அண்ணன் செல்லூர் ராஜுவாக இருந்தாலும் சரி, முன்னாள் அமைச்சர் அண்ணன் காமராஜ் ஆக இருந்தாலும் சரி ரொம்பப் பெருமையாகச் சொன்னார்கள். ஒரே துறையில் பத்து வருடம் இருந்தோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். இன்னொருவர் நான் ஒன்பது வருடங்கள் இருந்தேன் என்று சொல்கிறார். ஆனால், எங்களுடைய பள்ளிக் கல்வித் துறையைப் பொறுத்தவரையில், துறை ஒன்றுதான், ஆனால், அதற்கு அமைச்சராக இருந்தவர்கள் ஒன்பது பேர். அந்த அளவிற்கு, இதில் musical chair போல விளையாடியிருக்கிறார்கள். அப்படி விளையாடும்போது பாதிக்கப்படப்போவது யார் என்று பார்த்தால், மாணவச் செல்வங்கள்தான். எல்லாவிதத்திலுமே confuse ஆகிறார்கள். இந்த அளவிற்கு கற்றல் திறன் குறைந்துள்ளதற்கு இதுதான் காரணம். 10 ஆம் வகுப்பு, 11 ஆம் வகுப்பில் அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை கிட்டத்தட்ட 76 சதவிகிதம் இருந்தது, இன்றைக்கு 53 சதவிகிதம் அளவிற்குக் குறைந்துள்ளது என்று சொன்னால், அதை மீட்டெடுக்க வேண்டிய கடமை இருக்கின்றது. அண்ணன் திரு. வேல்முருகன் அவர்கள்கூட அவர்களுடைய ஊரில், ஊராட்சியில் இருந்த நூலகத்தையே காணவில்லை என்று சொல்கிறார். அம்மையார் அவர்கள் மறைந்த பிறகு தமிழ்நாட்டையே காணவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டை மீட்டெடுக்க வேண்டிய பணியில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார். நீங்கள் சொன்ன அந்தக் கோரிக்கை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் வருகின்றது. கண்டிப்பாக நீங்கள் சொன்ன கோரிக்கையினைச் சரிசெய்து தருவோம் என்று சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல், கல்வி சம்பந்தமாக யார் பேசினாலும், அவற்றை நான் குறிப்பு எடுத்து வைத்துக்கொள்வதைப் வழக்கமாக வைத்துள்ளேன். நானும் கடந்த ஐந்து ஆண்டுகள் எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.–வாக இருந்தேன். இங்கு உட்கார்ந்துள்ள அனைத்து எம்.எல்.ஏ.–க்களின் thought எப்படி இருக்கும் என்று சொன்னால், எனக்கு ஒரு வாய்ப்பு கிடைக்காதா, இன்றைக்கு எனது தொகுதியைப் பற்றி ஒரே ஒரு கேள்வியை நான் கேட்டுவிடமாட்டேனா,

2021 ஆகஸ்ட் 26] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

அதனைப் பதிவு செய்வதால் என் தொகுதி மக்கள் என்னை பாராட்டமாட்டார்களா என்ற mind set–ல் தான் இருப்பார்கள். பேசுபவர்களின் பேச்சு அவர்களின் காதில் கேட்காது. ஆனால், இங்குள்ள ஒவ்வொருவரும் பேசும்போது நான் குறுக்கிடமாட்டேன். நமது முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் அவர்கள், முதன்முதலில் ஆளுநர் உரையில் பேசும்போது, அரசுப் பள்ளியில் படித்த மாணவர்களுக்கு 7.5 சதவிகிதம் ஒதுக்கப்படும் என்று சொன்னீர்களே, அது என்ன ஆனது என்று கேட்டார். நீங்கள் ஒரு துறைக்குத்தான் கொண்டுவந்துள்ளீர்கள். எங்களது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 4, 5 துறைகளுக்கு 7.5 சதவிகிதத்தினைக் கொண்டுவந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இதைக் கேட்பதற்குக்கூட நீங்கள் இங்கு இல்லாமல் இருக்கிறீர்கள். அதுபோல் +2 மதிப்பெண்களை நீங்கள் எப்படி evaluate செய்யப் போகிறீர்கள் என்று கேட்டார்கள். இதற்கென 13 methodology–யை நாங்கள் உருவாக்கினோம். இந்த methodology–யை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவிக்கும்போது, ஒவ்வொரு முறையும் தன்னை ஒரு மாணவனாக நினைத்துக்கொண்டு, சில கேள்விகளைக் கேட்கிறார்கள். தன்னை ஒரு பெற்றோராக நினைத்துக்கொண்டு சில கேள்விகளைக் கேட்கிறார்கள். தன்னை ஓர் ஆசிரியராக நினைத்துக்கொண்டு சில கேள்விகளைக் கேட்கிறார்கள். அவர் கேட்கும்போது நாங்கள் எங்களை tune செய்துகொள்கிறோம். இவ்வாறு கேள்வி கேட்கிறார்களே, இதற்கு நாம் எவ்வாறு பதில் சொல்வது என்று எண்ணி பிறகு பதில் சொல்கிறோம். அந்த 13 methodology–களில், 12 ஆம் வகுப்பு மதிப்பெண்களை எவ்வாறு evaluate செய்வது என்பதற்கு அவர் ஒரு methodology–ஐ select செய்தார். அவர் select செய்ததை கிட்டத்தட்ட 8,20,000 பேர்களுக்குமேல் ஒத்துக்கொண்டார்கள். 19 பேர் தான் அதனை ஒத்துக்கொள்ளவில்லை. அவர்களுக்கும் option கொடுத்தோம். அந்த 19 பேர் re–exam எழுதினார்கள். இப்படி ஒவ்வொரு நிலையிலும் கடந்த 112 நாட்களாக பள்ளிக் கல்வித் துறை சார்பாக நேர்த்தியாக, சரியான நேரத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சரியாக முடிவு எடுத்திருக்கிறார் என்பது எங்களுக்கு மிகவும் ஊக்கமளிக்கக் கூடியதாக இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–35

அடுத்து, Library. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய நினைவாக மதுரையில் ஒரு Library அமைக்கப்படும் என

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2021 ஆகஸ்ட் 26

அறிவித்திருக்கிறார்கள். அதன் மதிப்பீடு 70 கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அதன் மதிப்பீடு ரூ.90 கோடியைத் தாண்டும் என்று நான் நினைக்கின்றேன்.

ஆக, ரொம்ப அழகாக ஒரு virtual reality–ஐ அங்கே கொண்டு வரவேண்டும். Multimedia–வை உருவாக்க வேண்டும். அங்கு e–Books system கொண்டு வர வேண்டும். நேற்று உறுப்பினர் திரு. ராஜன் செல்லப்பா அவர்கள் பேசும்போது, "ஏன் e–Books–ல் கொண்டு வர வேண்டும்? அந்தப் புத்தகங்கள் எல்லாவற்றையும் ஏன் online–ல் கொண்டு வருகிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், கூட சொன்னார் "அப்படி கிடையாது. நிறைய புத்தகங்கள் வரும்போது—ஒரு இடத்தில் 2,00,000 புத்தகங்கள்தான் வைக்க முடியும் என்ற நிலையில் இன்றைக்கு இருக்கிற trend–க்கு நாம் எல்லாவற்றையும் புதிது புதிதாக உடனடியாக தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், e–Books தான் கொண்டு வர வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார்கள்.

குறிப்பாக, teachers பற்றி எல்லோரும் சொல்வார்கள்; Consolidated pay–ல் இருந்த 46,000 teachers–க்கு ஆட்சிக்கு வந்தவுடன் காலமுறை ஊதியம் கொடுத்தது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான். இப்படி ஒவ்வொன்றாக சொல்லிக்கொண்டே போகலாம்.

எங்களுக்கு ஒரு மிகப் பெரிய challenge ஆக இருந்தது என்னவென்றால், students–க்குக் கொடுக்க வேண்டிய புத்தகப் பைகள்தான். கிட்டத்தட்ட 65,00,000 புத்தகப் பைகளில் முன்னாள் முதலமைச்சர்கள் இரண்டு பேருடைய photos இன்னமும் இருக்கின்றன. நிறைய இடங்களில் அதையே கொடுக்கிறார்கள். அந்தந்த ஊரில் இருக்கும் கட்சிக்காரர்கள் எனக்கு phone செய்து இதுகுறித்து திட்டிக்கொண்டிருந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அலுவலகத்தில் ஒரு வாதம் நடக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் நானும், Officers–ம் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். அப்பொழுது நான், "இது என் துறை, என் துறையில் நீங்கள் மாற்றித்தான் அமைத்துத் தர வேண்டும். இல்லையென்றால், என்னுடைய கட்சிக்காரர்களை என்னால் face பண்ண முடியாது" என்று சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "நீ கட்சிக்காரனாக இங்கே இல்லை, அமைச்சராக உட்கார்ந்திருக்கிறாய், கட்சிக்காரனாகப் பேச வேண்டுமென்றால், நேராக நீ அறிவாலயத்துக்கு வா, அங்கே

2021 ஆகஸ்ட் 26] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

பேசிக்கொள்ளலாம். இது தலைமைச் செயலகம். தலைமைச் செயலகத்தில் நான் முதலமைச்சர், நீ அமைச்சர். நான் இந்த மன்றத்தில் எல்லோருக்கும் பொதுவானவன்" என்று சொன்னார். இதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தபோது, ஒன்று புத்தகப் பையை மாற்றிவிடலாம் அல்லது sticker ஒட்டலாம் என அறிவுறுத்தப்பட்டது. எதையாவது செய்யலாம் என்றால், estimate மட்டும் கிட்டத்தட்ட 13 கோடி ரூபாய் வருகிறது. ஒரே வார்த்தை சொன்னார், "அந்த பையில் அவர்களுடைய முகமே இருந்துவிட்டு போகட்டும். இந்த 13 கோடி ரூபாயில், என்னுடைய அரசுப் பள்ளி மாணவர்களுக்கு வேறு ஏதாவது திட்டத்தை நான் கொண்டு வருவேன்" (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொன்ன, பெருந்தன்மை கொண்ட, தாயுள்ளம் கொண்ட முதலமைச்சர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இன்றைக்கு அவர்களுக்கு இதெல்லாம் தெரிகிறதா? காழ்ப்புணர்ச்சி என்கின்ற வார்த்தையை உபயோகப்படுத்துகிறவர்களிடம் நான் ஒன்று சொல்கின்றேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரில் இருக்கின்ற சத்துணவுத் திட்டத்திற்குத்தான் நாங்கள் இன்னமும் பணம் ஒதுக்கிக் கொண்டிருக்கிறோம்.

ஒன்பது மாதங்களுக்கு முன்பு அவர்கள்தானே Kalvi TV கொண்டு வந்தார்கள். அந்த Kalvi TV–ஐ மேம்படுத்த வேண்டுமென்றுதான் நாங்கள் பேசிக்கொண்டிருக்கின்றோம். அதைக் கைவிட வேண்டுமென்று நாங்கள் சொல்லவேயில்லை. நாங்கள் என்றைக்குமே மாணவர்களின் எதிர்காலத்தில் விளையாடக்கூடியவர்கள் அல்ல என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்ய நான் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினராகிய நீங்கள் தற்போது சட்டமன்ற பேரவைத் தலைவர். Spoken Engish பற்றிகூட நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் 5 ஆண்டுகளுக்குமுன், Court–ல் பொது நல வழக்கு PIL போட்டிருக்கிறீர்கள். இன்றைக்கு Spoken English சம்பந்தமாக நம்முடைய Department சார்பாக ஒரு திட்டத்தைக் கொண்டுவர இருக்கிறோம். நீங்கள் சொல்வது உண்மைதான். கிராமப் புறங்களில் இருக்கின்ற மாணவர்கள் 8–வது வகுப்பு படித்துவிட்டுப் போனாலும், அதற்கேற்ற வகையில், அவர்களால் English பேச முடியாது. 10–வது வகுப்பு படித்துவிட்டுப் போனாலும் அவர்களால் English பேச

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2021 ஆகஸ்ட் 26

முடியாது. இன்றைக்கு Spoken English–க்கான வகுப்பை normal class hours–ல் கொண்டு வந்தோம் என்றால், நம்மால் syllabus–ஐ cover செய்ய முடியாது. ஆகையால், பள்ளிக்கூடங்கள் முடிந்தபிறகு ½ மணிநேரம் இதற்கென்று ஒதுக்கி, 6, 7, 8 வகுப்புகளைச் சார்ந்த மாணவர்களுக்கு ஒரு class ஆகவும், 9, 10, 11, 12 வகுப்புகளைச் சார்ந்த மாணவர்களுக்கு ஒரு class ஆகவும் நடத்தலாம் என்கின்ற விதத்தில் இங்கே பரிசீலனை நடந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நல்ல அறிவிப்பு. தமிழ்நாட்டு மக்கள் சார்பாக நன்றி. தமிழ்நாட்டில் 1–லிருந்து 12 ஆம் வகுப்பு வரை தமிழ்வழியில் படிக்கின்ற பிள்ளைகளுக்கு ஆங்கிலம் பேசத் தெரியாமல் இருந்தது. அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டீர்கள். நல்ல அறிவிப்பு. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், உங்களுக்கும் நன்றி.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: அதைப்போல, Examination என்று ஒரு section இருக்கிறது. பொதுவாக, பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் மட்டும்தான் Examination இருக்கும். மனப்பாடம் செய்து எழுதுவார்கள்; mark வாங்கிக்கொண்டு போய்விடுவார்கள். எந்தெந்த குழந்தைகள் எல்லாம் மனப்பாடம் செய்து நிறைய mark வாங்கினார்களோ, அவர்களெல்லாம் பின்னர் competitive exam–ல் கோட்டை விட்டுவிடுகிறார்கள். புரிதல் தன்மையை ஊக்குவிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு அறிவுறுத்தியபடி, அதையும் சரிசெய்ய வேண்டுமென்கின்ற வகையில், கிட்டத்தட்ட 413 Blocks–ல் இருக்கின்ற Officers–க்கு தனித்தனியாக Tablet device கொடுத்து, அதன் மூலமாக, எப்படியெல்லாம் அந்தப் புரிதல் ஏற்படுத்துகின்ற திட்டத்தை உருவாக்கலாம் என்கின்ற வகையில் நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம். அதைத் தொடர்ந்து நம்முடைய தமிழ்நாடு, கற்றல் என்ற அளவில் அதிக தரமானதாக இருக்க வேண்டுமென்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இன்னும் பல திட்டங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றையும் சொல்லிக்கொண்டே போகலாம்.

2021 ஆகஸ்ட் 26] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

Teachers–ஐப் பொறுத்தவரைக்கும், அரசு நிர்வாகம் என்பது ஒரு தேர் மாதிரி என்றால், அதில் அரசு ஊழியர்கள் எல்லாம் சக்கரம் மாதிரி என்று சொல்கின்றோம். அதேமாதிரி, நம்முடைய சமூகம் என்பது ஒரு தேர் என்றால், அந்தத் தேரினுடைய புரவிகளாக இருப்பது ஆசிரியப் பெருமக்கள் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கின்றார். ஆகவே, அவருடைய அந்தப் பக்குவத்தின் அடிப்படையில் இன்றைக்கு நம்மையெல்லாம் கையாண்டு கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஆசிரியர் பெருமக்களின் நியாயமான கோரிக்கைகள் எதுவாக இருந்தாலும், அதையெல்லாம் படிப்படியாகத் தீர்த்து வைக்கின்ற முயற்சியில் நாங்கள் முழுமையாக எங்களை ஈடுபடுத்திக்கொள்வோம் என்ற உறுதிமொழியை இந்த நேரத்தில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1–40

SSA–Samagra Shiksha Abhiyan திட்டத்தின்கீழ், ஒன்றிய அரசாங்கத்திற்கு நாங்கள் 3,000 கோடி ரூபாய் அளவிற்கு estimate போட்டு budget approval–க்கு அனுப்பியிருந்தோம். அதில், ரூ.2,500 கோடி அளவிற்குத்தான் அவர்கள் approval கொடுத்திருக்கிறார்கள். அந்த 2,500 கோடி ரூபாயும் முழுமையாகக் கிடைப்பதில்லை. கிட்டத்தட்ட ரூ.2,000 கோடிதான் நமக்குக் கிடைக்கிறது. ஆக, இதைச் சரிசெய்யும் விதமாக, நாம் என்ன estimate கொடுக்கிறோமோ, அந்தத் தொகையையே வழங்குமாறு ஒன்றிய அரசிடம் வலியுறுத்தவிருக்கிறோம். ஆனால், SSA–Samagra Shiksha Abhiyan மூலமாகப் பெறப்படுகின்ற நிதி infrastructure development–க்கானது. அதைக் கொண்டு நிறைய buildings கட்டலாம். இடிந்த நிலையில் இருக்கும் நிறைய கட்டடங்களைச் சீரமைக்க வேண்டும் என்றுதான் இன்றைக்கு நிறைய பேர் கோரிக்கை வைக்கின்றார்கள். மாண்புமிகு மணப்பாறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்கூட PWD–யிலிருந்து demolition order ஏன் இன்னும் கொடுக்கவில்லை என்று கேட்டிருந்தார். Demolition orders–ஐ உடனுக்குடன் கொடுத்தார்களென்றால், நாமும் உடனடியாக DRDA மூலமாகவோ, RD மூலமாகவோ, Nabard வங்கி மூலமாகவோ, இப்படி, எங்கெங்கேயெல்லாம் funds வாங்க முடியுமோ, அவற்றை வாங்கி உடனடியாக அந்தக் கட்டடங்களைக் கட்டித் தருகின்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதுகுறித்து கண்டிப்பாக

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2021 ஆகஸ்ட் 26

பொதுப் பணித் துறையின் மாண்புமிகு அமைச்சருடன் கலந்து பேசி, demolition orders–ஐ எல்லாம் விரைவில் பெற்று, அதற்கான funds ஒதுக்குகின்ற பணிகளையும் நாங்கள் விரைவாகச் செய்து கொடுப்போம் என்கிற உறுதிமொழியையும் வழங்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கிட்டத்தட்ட 180–க்கும் மேற்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் இருக்கின்றன. அந்த 180 வெட்டுத் தீர்மானங்களில் நிறைய repetitions இருக்கின்றன. அவற்றையெல்லாம் sort out செய்து பார்த்தால், கிட்டத்தட்ட 37 வெட்டுத் தீர்மானங்கள்தான் வருகின்றன. அந்த 37 வெட்டுத் தீர்மானங்களையும் இந்த ஐந்து வருடங்களில் தொடர்ந்து முயற்சிகளை எடுத்து, அவற்றைச் சரி செய்வதற்கான பணிகளில் நாங்கள் எங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்வோம். ஏனென்றால், இதில் நிர்வாக ரீதியாகச் சரி செய்ய வேண்டியவை, financial involvement இருப்பவை, Court Order பெற வேண்டியவை போன்ற சூழ்நிலைகளெல்லாம் இருக்கின்றன.

அடுத்து, தரம் உயர்த்தல். நிறைய பேர் பள்ளிகளைத் தரம் உயர்த்துமாறு கேட்டிருக்கிறார்கள். Budget Session–ன்போதுகூட நாம் 12 தொடக்கப் பள்ளிகளும், 22–க்கும் மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகளும் தரம் உயர்த்தப்படும் என்று சொல்லியிருக்கிறோம். அவ்வாறு எங்கெங்கெல்லாம் தேவையோ, அதுகுறித்து உடனடியாக அலசி, ஆராய்ந்து உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். ஏனென்றால், தரம் உயர்த்த வேண்டுமென்று சொன்னால், அதாவது, 10 ஆம் வகுப்பில் 100 மாணவர்களாவது இருக்க வேண்டும்; கிராமப்புறப் பகுதியாக இருந்தால் 5 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும் என்று சில conditions இருக்கின்றன. இதுபோன்ற conditions நிறைய இடங்களில் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றன. அங்கிருக்கின்ற மக்கள் அதற்கான மனுக்களை அளிக்கும்போது, அதற்கான conditions பூர்த்தி செய்யப்பட்டிருந்தால், அவை கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அவற்றையும் சரிசெய்கின்ற பணியில் எங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்வோம்.

இன்னும் நிறைய பொருள்கள் இருக்கின்றன. நாம் என்னதான் நிறைய பேசினாலும், நாம் ஏற்கெனவே சொன்னதுபோன்று, கற்றல் திறனை அதிகரிக்க வேண்டும். உதாரணத்திற்கு, Performance

2021 ஆகஸ்ட் 26] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

Grading Index பற்றி சொல்கிறார்கள். மூன்றாம் வகுப்பு படிக்கின்ற குழந்தைகளுக்கு வீட்டில் இருக்கின்ற உறவு முறைகளான, அப்பா, அம்மா, சித்தப்பா என்று யாரை அழைக்க வேண்டும், மாமா என்று யாரை அழைக்க வேண்டும் என்பது தெரிய வேண்டும். இதில் 53 சதவிகித குழந்தைகள்தான் சரிவர உறவு முறையைச் சொல்கிறார்கள். இதுபோன்று 300–க்கும் மேற்பட்ட index–கள் இருக்கின்றன. இதை நாம் மிகவும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

அதேபோன்று Non–formal Education–முறைசாரா கல்வி என்ற ஒன்று இருக்கிறது. அதாவது, 15 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கல்வி வழங்குவது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, இதுவும் பள்ளிக் கல்வித் துறையைச் சேர்ந்ததுதானே; இதில் எவ்விதம் கவனம் செலுத்தப் போகிறாய் என்று என்னிடம் கேட்டார்கள். இதற்காக, திருச்சி மாவட்டம், மணிகண்டம் என்ற இடத்திற்கு நான் நேரடியாகச் சென்றபோது, அங்கு அஞ்சலை என்ற பாட்டி இருந்தார்கள். அவரது கையைப் பிடித்துக் கொண்டு அஞ்சலை என்று அவருக்கு எழுதக் கற்றுக் கொடுத்துவிட்டு, 100 நாட்கள் கழித்து நான் இங்கு மீண்டும் வருவேன், அதற்குள் நீங்கள் எழுத்துக் கூட்டி படிக்க வேண்டும். இதே கையெழுத்தை நீங்கள் போட வேண்டும் என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறோம். ஆகவே, அதிலும் நாங்கள் அதிகக் கவனம் செலுத்தி வருகிறோம். இந்த வருடம் 3,10,000 பேர்களையாவது at least எழுத்துக் கூட்டிப் படிக்கின்ற மற்றும் கையெழுத்து போடுகின்ற அளவிற்குக் கொண்டு வர வேண்டும் என்பதுதான் எங்களுடைய target. ஆனால், இந்த 112 நாட்களில் எங்களது இலக்கான 3,10,000 பேருக்கும் மேல். 3,22,000 பேருக்கு எழுத்துக் கூட்டிப் படிக்கவும், கையெழுத்து போடுவதற்கும் பயிற்சி கொடுத்திருக்கிறோம் என்று சொல்லும்போது (மேசையைத் தட்டும் ஒலி) மகிழ்ச்சியாக இருக்கிறது.

பள்ளிக் கல்வித் துறையில் பணியாற்றுகின்ற ஒவ்வொரு I.A.S. Officer–க்கும், ஒவ்வொரு Joint Director–க்கும், ஒவ்வொரு Directors–க்கும் ஒவ்வொரு மாவட்டத்தை தத்தெடுத்திருக்கிறோம். அவ்வாறு தத்தெடுத்தவர்கள் மூலமாக, அவரவர்களது மாவட்டத்திற்கு என்னென்ன தேவை, அந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கு என்ன தேவை, அந்த மாவட்டத்தில் பணியாற்றுகின்ற மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு என்ன தேவை, அந்த மாவட்டத்தில் எத்தனை பள்ளிகள் இருக்கின்றன, அவற்றின் தரத்தை எவ்வாறு உயர்த்தலாம், பள்ளிக் கல்வியை

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2021 ஆகஸ்ட் 26

எவ்வாறு உள்ளே புகுத்தலாம் என்பதைப் பற்றியெல்லாம் அலசி, ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். இதில் எனக்கு உறுதுணையாக இருக்கின்ற நம்முடைய Chief Secretary ஆக இருந்தாலும் சரி, Secretary திரு. உதயசந்திரன் அவர்கள், Tmt. Kakarla Usha Madam, Prinicpal Secretary to Government, திரு. நந்தகுமார் அவர்கள், திரு. மணிகண்டன் அவர்கள், Thiru Sudhan, I.A.S., அவர்கள், திருமதி லதா அவர்கள் ஆகிய எல்லோருக்கும் நான் சொல்வது ஒன்றே ஒன்றுதான். எந்த ஒரு Department Head–ம், அந்த department–ஐப் பற்றி மட்டும் என்னிடம் பேசிவிட்டுப் போகாமல், ஒட்டுமொத்த துறையைப் பற்றியும் அவர்களுக்கு ஏதேனும் ideas இருந்தால், தயவுசெய்து என்னிடம் சொல்லுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில்தான் நாங்கள் இந்தத் துறையை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்கிறோம்.

Recent ஆக, Chief Educational Officers shuffling–ல் நீங்கள் பார்த்திருப்பீர்கள். கன்னியாகுமரி மாவட்டம் number one–லும், தருமபுரி மாவட்டம் கடைசியிலும் இருக்கிறது என்று சொன்னால், அந்த மாவட்டங்களில் யார், யாரெல்லாம் முதன்மைக் கல்வி அலுவலர்களாகப் பணியாற்றினார்களோ அவர்களையெல்லாம் shuffle செய்து, performance–ஐ அதிகமாகக் காட்டுங்கள் என்றும் நாங்கள் சொல்லியிருக்கின்றோம். இதற்காக, முதன்மைக் கல்வி அலுவலர்களில், இவர்கள் நன்றாக வேலை செய்கிறார்கள், இவர்கள் நன்றாக வேலை செய்யவில்லை என்று தரம் பிரித்துச் சொல்ல விரும்பவில்லை. ஒரு முதன்மைக் கல்வி அலுவலர், அவர் பணி செய்த மாவட்டத்தில் ஒரு முயற்சியை எடுத்திருப்பார். அது அங்கே கைகூடியிருக்காது. அந்த முயற்சி மற்றோர் இடத்தில் கைகூடி வரலாம் என்ற எண்ணத்தில்தான் நாங்கள் இதைச் செய்திருக்கிறோம். எங்களுடைய முதன்மைக் கல்வி அலுவலர்களைப் பொறுத்தவரையில், எங்களுடைய பள்ளிக் கல்வித் துறையில் நான் தலைவர் என்றால், முதன்மைக் கல்வி அலுவலர்கள்தான் என்னுடைய மாவட்டச் செயலாளர்கள். அந்த அளவிற்கு அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆக, அனைத்துப் பிரச்சினைகளையும் C.E.Os. சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் சரி, Non–teaching staff சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் சரி, பல இடங்களில் நான் நேரடியாக field visit போகும்போது ஆய்வு செய்திருக்கிறேன்.

நிறைய பள்ளிகளில் நாங்கள் உள்ளே நுழையும்போது தலைமை ஆசிரியர்கள் அவர்களுடைய Office–க்கு முதலில் கூட்டிக்கொண்டு

2021 ஆகஸ்ட் 26] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

போவார்கள். நான் உங்கள் Office–க்கு கடைசியாக வருகிறேன்; முதலில் எங்கே கழிவறை இருக்கிறது என்று நான் கேட்பேன். கழிவறையை நேரடியாகப் பார்த்துவிட்டு, அதைச் சரிசெய்வதற்கு என்ன செய்ய வேண்டுமென்று சொல்லிவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பின்னர் hi–tech lab மற்றும் class rooms–ஐப் பார்த்துவிட்டு, கடைசியாக தலைமை ஆசிரியர் room–க்கு வந்து, ஆய்வு செய்ததற்கான கையெழுத்தைப் போட்டுவிட்டு வருவதை நான் வழக்கமாக வைத்துக்கொண்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–45

அதுமட்டுமல்ல, எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும், எந்தத் தொகுதிக்குச் சென்றாலும், அந்தத் தொகுதியில், அ.இ.அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, பா.ஜ.க. கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, முதலில் அந்த M.L.A.–ஐ தொடர்பு கொண்டு சொல்லிவிட்டுத்தான் நான் செல்வேன். ஏனென்றால், அது அவர்கள் தொகுதி. முன்னாள் அமைச்சர்களில், ஓர் அமைச்சர், 'இதையெல்லாம் நாங்கள் செய்யாமல் விட்டுவிட்டோமே என்று சங்கடமாக இருக்கிறது, இப்பொழுது நாங்கள் அதை நினைத்து வருத்தப்படுகிறோம்' என்றுகூட சொன்னார்கள். அந்த அளவுக்கு நான் எந்தெந்த MLAs–க்கு என்னென்ன குறைகள் இருக்கின்றன என்று கேட்கிறேன். எந்தெந்தப் பள்ளிகள் தரமுயர்த்தப்பட வேண்டுமென்ற பட்டியல் ஏற்கெனவே உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதை நாங்கள் மனதில் வைத்திருக்கின்றோம். கண்டிப்பாக ஒவ்வொன்றாக, படிப்படியாக phased manner–ல் சரிசெய்து தருவோம். நிதிநிலை அறிக்கையில் 184–வது பத்தியில் நாங்கள் சொல்லியிருக்கிறோம். நாங்கள் கொடுத்திருக்கின்ற தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் உடனே நிறைவேற்ற வேண்டுமென்ற ஆசையில்தான் இருக்கின்றோம். இன்றைக்கு இருக்கின்ற நிதிநெருக்கடியில் ஒரே நேரத்தில் எல்லாவற்றையும் செய்துவிட முடியாது. அதையெல்லாம் sort out செய்து, அதற்கேற்ப எங்கள் செயல்பாடுகள் இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நாம் எப்படிப்பட்ட முதலமைச்சரைப் பெற்றிருக்கிறோம் என்பது எல்லோருக்கும் தெரியும். முன்பெல்லாம் Corporation School–ல் சேர்வதையே inferior ஆக எண்ணுவார்கள்; அவர் Mayor ஆக இருந்தபோது, அதை மாற்றிக் காண்பித்தார்கள். Corporation

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2021 ஆகஸ்ட் 26

School–ல் recommendation letter உடன் சேரவேண்டிய ஒரு நிலையை உருவாக்கித் தந்தவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, அவர்களுடைய வழிகாட்டுதலின்படி கண்டிப்பாக தமிழ்நாட்டினுடைய கல்வியின் தரம் உயர்த்தப்படும். நான் ஏற்கெனவே சொன்னதுமாதிரிதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காலத்தில் நம்முடைய அரசுப் பள்ளிகள் வறுமையின் அடையாளமாக இருக்காது; பெருமையின் அடையாளமாக இருக்கும் என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அளவில் என்னுடைய உரையை நான் நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு பள்ளிக் கல்வித் துறைக்கான மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி புதிய அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவிப்புகளின் தலைப்புகளை மட்டும் படிக்கிறேன். முழுவதும் படித்ததாக பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அறிவிப்புகள்

1. திசைதோறும் திராவிடம்

திராவிட மொழிகளிலேயே தொன்மைமிக்க மொழியான தமிழின் வரலாறு, பண்பாட்டு மரபு மற்றும் தமிழ்ச் சமூகத்தின் சிறப்புகளை வெளிப்படுத்தும் வகையில் சிறந்த தமிழ் நூல்கள் (மாபெரும் தமிழ்க் கனவு ஆங்கிலத்திலும், பொன்னியின் செல்வன், வைக்கம் போராட்டம் ஆகிய நூல்கள் மலையாளத்திலும், திருக்குறளுக்கான கலைஞர் உரை தெலுங்கிலும், தி. ஜானகிராமனின் சிறுகதைகள் கன்னடத்திலும்) மொழிபெயர்க்கப்பட்டு ஆங்கிலம் மற்றும் சம்பந்தப்பட்ட மாநில மொழிப் பதிப்பகங்களோடு தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் கூட்டு வெளியீடுகளாகக் கொண்டுவரப்படும். இதேபோல், பிற திராவிட மொழிகளிலிருந்து சிறந்த நூல்கள் தமிழுக்கு மொழிபெயர்க்கப்படும்.

2021 ஆகஸ்ட் 26] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

2. முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்

உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்குப் பயன்படக்கூடிய இலக்கியம், இயற்பியல், மருத்துவம், பொருளாதாரம், பொறியியல், வேதியியல், வேளாண்மை போன்ற துறைகளில் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள தலைசிறந்த நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து சம்பந்தப்பட்ட பதிப்பகங்களோடு தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் கூட்டு வெளியீடாக ரூ.2 கோடி செலவில் வெளியிடப்படும். இது "முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்" எனும் மாபெரும் திட்டத்தின் தொடக்கமாக அமையும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. இளந்தளிர் இலக்கியத் திட்டம்

குழந்தைகளின் படைப்பாற்றலை மேம்படுத்தவும் (பேச்சாற்றல், எழுத்தாற்றல், ஓவியம் தீட்டும் ஆற்றல்) நன்னெறிக் கல்வியைக் கற்பிக்கவும் மற்றும் அறம்சார் சமூக விழுமியங்களை வளர்த்தெடுக்கவும் "இளந்தளிர் இலக்கியத் திட்டம்" செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ், முதல்கட்டமாக 100 குழந்தை இலக்கிய நூல்கள் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் வெளியிடப்படும்.

4. குழந்தை எழுத்தாளர்களுக்கு "கவிமணி விருது"

குழந்தைகளின் எழுத்தார்வத்தை ஊக்குவிக்கும் வண்ணம், 18 வயதிற்குட்பட்ட இளம் எழுத்தாளர்களில், ஆண்டுதோறும் மூன்று சிறந்த எழுத்தாளர்களைத் தேர்வு செய்து ரூ.25,000 ரொக்கம், கேடயம் மற்றும் சான்றிதழுடன் "கவிமணி விருது" வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கம்

தமிழ் மொழிக்கு அளப்பரிய பங்காற்றிய எழுத்தாளர்கள் மற்றும் தமிழறிஞர்களைப் போற்றும் வகையிலும், அத்தகைய அறிஞர் பெருமக்களை இளம் தலைமுறையினர் முன்மாதிரியாகக் கொள்ளும் வகையிலும், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் "செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கம்" அமைக்கப்படும்.

இந்த அரங்கத்தில் சாகித்ய அகாதமி விருது, ஞானபீட விருது போன்ற உயரிய விருதுகளைப் பெற்ற தமிழ் எழுத்தாளர்களின்

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2021 ஆகஸ்ட் 26

புகைப்படங்கள், கையெழுத்துப் பிரதிகள் மற்றும் படைப்புகள் காட்சிப்படுத்தப்படும்.

இளம் தலைமுறையினரின் எழுத்தார்வத்தைத் தூண்டும் வகையில் மேற்கூறிய படைப்பாளிகளின் படைப்புகள் சார்ந்த நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த அறிவிப்புகளில் financial involvement இருக்கின்றதோ, அவற்றை மட்டும் full ஆக படிக்கிறேன். மற்றவற்றுக்கெல்லாம் நான் heading மட்டும் படிக்கிறேன். அவையிலே படித்ததாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

6. உயர் கல்வி, தொழில் மற்றும் வேலைவாய்ப்பிற்கு வழிகாட்டும் ஆலோசனை மையம்

அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு, உயர் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்த ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் அளிப்பதற்கு ஏதுவாக ஒவ்வொரு பள்ளியிலும் வழிகாட்டும் ஆலோசனை மையம் உருவாக்கப்படும். இதற்கென தனியே கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு, 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முறையாகக் கொண்டு சேர்ப்பதற்கு ஏதுவாக தொடர் வகுப்புகள் நடத்தப்படும்.

முன்னாள் மாணவர்களைக் கொண்டு, அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்குத் தொடர் நெறிப்படுத்தும் (Continuous Mentoring) முறையும் அறிமுகப்படுத்தப்படும்.

7. பள்ளிகளில் பாரம்பரியக் கலைகள்

கரகாட்டம், கும்மி, சிலம்பாட்டம், ஒயிலாட்டம், காவடியாட்டம், பன்னிசை, நாட்டுப்புறப் பாட்டு போன்ற தமிழரின் பாரம்பரியக் கலை வடிவங்களை அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடம் எடுத்துச் செல்வதை இலக்காகக் கொண்டு கிராமப்புறங்களில் உள்ள நாட்டுப்புறக் கலைஞர்களின் உதவியுடன் பயிற்சியளிக்கப்படும். இதுபோலவே சிலம்பம், மல்யுத்தம் முதலான தமிழரின் பாரம்பரிய தற்காப்புக் கலைகளையும் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு முறையாகக் கொண்டு சேர்க்க உரிய பயிற்சி அளிக்கப்படும்.

2021 ஆகஸ்ட் 26] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

8. விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்

மாணவர்களின் உடல்நலம் மற்றும் மனநலத்தைப் பேணும் வகையில் அனைத்துப் பள்ளிகளுக்கும் விளையாட்டுப் பொருட்கள் வழங்கப்படும். பள்ளி ஒன்றுக்கு ரூ.5,000/– வீதம் 24,266 அரசு தொடக்கப் பள்ளிகளுக்கும், ரூ.10,000/– வீதம் 6,948 அரசு நடுநிலைப் பள்ளிகளுக்கும், ரூ.25,000/– வீதம் 6,177 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் விளையாட்டு உபகரணங்கள் ரூ.35 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்து வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–50

9. பொது நூலகங்களுக்குப் புத்தகங்கள் கொள்முதல்

பொது நூலகங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் தேவையான புத்தகங்கள் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. பொது மக்களுக்குத் தேவையான மிகச் சிறந்த புத்தகங்கள், நாளிதழ்கள், பருவ இதழ்கள் வழங்குவதை உறுதி செய்யும் வகையில், தற்போதுள்ள புத்தகங்களுக்கான கொள்முதல் கொள்கையில் தக்க திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். புத்தகக் கொள்முதலின் ஒவ்வொரு படிநிலையிலும் ஒளிவு மறைவின்றி வெளிப்படைத் தன்மை உறுதி செய்யப்படும்.

10. அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு நூல்கள் வாங்குதல்

அண்ணா நூற்றாண்டு நூலகம் 5 இலட்சம் நூல்களுடன் 2010 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்நூலகத்தில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் பதிப்பிக்கப்பட்ட சிறந்த நூல்கள் இடம் பெற்றுள்ளன. இந்நூலகத்தை தினந்தோறும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். மாறிவரும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப, வாசகர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், அனைத்துத் துறைகளிலும் வெளிவந்துள்ள தலைசிறந்த புத்தகங்கள் கொள்முதல் செய்து வழங்கப்படும். மின்–புத்தகங்கள், மின்–பருவ இதழ்கள், மின்–ஆராய்ச்சி இதழ்களை வாசகர்கள் எளிதாகப் பயன்படுத்தும் வகையில் இணையவழி குறிப்புதவிப் பிரிவும் ரூ.6.5 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2021 ஆகஸ்ட் 26

11. முனைவர் எஸ்.ஆர். அரங்கநாதன் நினைவு நூலகம்

தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் உருவாக முக்கியப் பங்காற்றிய இந்திய நூலகத் தந்தை எனப் போற்றப்படும் பத்மஸ்ரீ முனைவர் எஸ்.ஆர். அரங்கநாதன் அவர்களை நினைவுகூரும் வகையில், அவர் பிறந்த ஊரான மயிலாடுதுறை மாவட்டத்திலுள்ள சீர்காழியில் ரூ.1.37 கோடி மதிப்பீட்டில் மாதிரி நூலகம் அமைக்கப்படும்.

இந்நூலகத்தில் முனைவர் எஸ்.ஆர். அரங்கநாதன் அவர்களின் படைப்புகளுடன், அரிய புத்தகங்கள், ஆராய்ச்சி வசதி, குழந்தைகள் பிரிவு, இணைய வசதியுடன்கூடிய மின் நூலகம் ஆகியவை ஏற்படுத்தப்படும்.

12. செந்நாப் புலவர் ஆ. கார்மேகனார் பெயரில் புதிய நூலகக் கட்டடம் கட்டுதல்

செந்நாப் புலவர் ஆ. கார்மேகனார் அவர்கள், அறிவு நூல் திரட்டு, கண்ணகி தேவி, காப்பியக் கதைகள், மூவர் உலா ஆராய்ச்சி, தமிழ்மொழியின் மறுமலர்ச்சி, நல்லிசைப் புலவர்கள் போன்ற பல நூல்களை இயற்றியுள்ளார்.

தமிழுக்கு அவர் ஆற்றிய சேவையினைப் போற்றும் வகையில், இராமநாதபுரம் மாவட்டம், அபிராமத்தில் தற்போது வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் கிளை நூலகத்திற்கு ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நூலகம் கட்டப்படும்.

13. கிராமப்புற நூலகங்களில் மின் நூலக சேவை

தமிழ்நாடு அரசு பொது நூலக இயக்ககத்தின்கீழ் 1,926 கிளை நூலகங்கள் மற்றும் 1,915 ஊர்ப்புற நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. சர்வதேச நாளிதழ்கள், பருவ இதழ்கள் கிராமப்புறங்களில் உள்ள வாசகர்களுக்கும் கிடைக்கும்வண்ணம் அனைத்து நூலகங்களிலும் மின் நூலகம் அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.2.40 கோடியில் ஏற்படுத்தப்படும்.

14. கன்னிமாரா பொது நூலகத்தை நவீனமயமாக்கல்

1896 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கன்னிமாரா பொது நூலகம் இந்தியாவில் உள்ள பழமையான நூலகங்களுள் ஒன்றாகும். இந்தியாவின் தேசிய வைப்பு நூலகமாகச் செயல்படும் இந்நூலகம் நாடு முழுவதும் வெளியாகும் அனைத்து நாளிதழ்,

2021 ஆகஸ்ட் 26] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

பருவ இதழ்களில் ஒரு பிரதியை இலவசமாகப் பெற்று வருகிறது. இந்நூலகத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் அதன் பாரம்பரிய நிலை மாறாத வகையில் ரூ.3.20 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

15. ஆசிரியர்களுக்கான பொது மாறுதல் கொள்கை

அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் நலனுக்காக ஆண்டுதோறும் பொது மாறுதல் நடத்தப்பட்டு வருகிறது. இப்பொது மாறுதலை ஒளிவுமறைவின்றி 2021–2022 ஆம் கல்வியாண்டு முதல் நடத்திட பொது மாறுதல் கலந்தாய்வுக் கொள்கை வகுக்கப்பட்டு வெளிப்படையாக நடைமுறைப்படுத்தப்படும்.

16. பள்ளிப் பதிவேடுகள் கணினிமயமாக்கல்

தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நிர்வாகப் பணிப்பளுவைக் குறைக்கும்வண்ணம் பள்ளிகளில் பராமரிக்கப்படும் தேவையற்ற பதிவேடுகள் நீக்கப்படும். அவசியமான பதிவேடுகள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டு, கல்வித் தகவல் மேலாண்மை முறைமை (EMIS) வாயிலாகப் பெறத்தக்க வகையில் மாற்றியமைக்கப்படும்.

17. பள்ளிகளுக்கான அங்கீகாரம் இணைய வழியில் வழங்குதல்

அனைத்து அரசு நிதி உதவி/பகுதி நிதி உதவி/சுயநிதிப் பள்ளிகளில் தொடக்க/ஆரம்ப/தொடர் அங்கீகாரம், பிற வாரியப் பள்ளிகள் (சி.பி.எஸ்.இ., சி.ஐ.எஸ்.சி.இ., கி.ஏ.ஐ.இ., ஐ.பி. மற்றும் பிற) சார்பான தடையின்மைச் சான்று, அங்கீகாரம் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு வகையான சேவைகளை எளிமையாக்கி, இணைய வழியே, ஒளிவு மறைவின்றிப் பெறத்தக்க வகையில் மென்பொருள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.

18. மின்னணு சேவைகள் (e–Services)

பள்ளிக் கல்வித் துறையில் பொது மக்கள் மற்றும் மாணவர்களுக்கு வழங்கப்படும் சான்றுகளான நன்னடத்தைச் சான்று, ஆளறிசான்று, தமிழ் வழியில் படித்ததற்கான சான்று உள்ளிட்ட அனைத்துச் சான்றுகளும் அவர்தம் இல்லத்திற்கு அருகிலுள்ள அரசு பொது சேவை மையங்களின் வாயிலாக விண்ணப்பித்து காலவிரயமின்றிப் பெற்றுக்கொள்ளும் திட்டம் செயல்படுத்தப்படும்.

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2021 ஆகஸ்ட் 26

19. மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்விப் பாடத் திட்டத்தைச் சீரமைத்தல்

தொழிற்கல்வி பயிலும் மாணவர்களின் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பயிற்றுவிக்கப்படும் தொழிற்கல்விப் பாடங்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் உறுதுணையோடு மேம்படுத்தப்படும். இதனால் மாணவர்கள் தொழிற்சாலைகளின் தேவைகளுக்கேற்ப திறனைப் பெற்று உடனடி வேலைவாய்ப்பினைப் பெறுவர்.

20. கஸ்தூரிபா காந்தி பெண்கள் உண்டு உறைவிடப் பள்ளிகளைத் தரம் உயர்த்துதல்

கல்வியில் பின்தங்கிய 44 ஒன்றியங்களில் வசித்து வரும் சமுதாயத்தில் பின்தங்கிய பிரிவுகளைச் சார்ந்த 10 முதல் 14 வயதிற்குட்பட்ட மாணவியருக்குத் தரமான கல்வி வழங்கும்பொருட்டு, 61 கஸ்தூரிபா காந்தி பெண்கள் உண்டு உறைவிடப் பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளன.

பெண் குழந்தைகளின் கல்வியை மேம்படுத்தவும், இடைநிற்றலைத் தடுக்கவும், கல்வியைத் தொடரவும், 5 உண்டு உறைவிடப் பள்ளிகள் ரூ.8 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்படும்.

21. மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு வீட்டிலேயே கல்வி மற்றும் இயன்முறை மருத்துவம்

பிறப்பு முதல் 18 வயதிற்குட்பட்ட 7,786 மாற்று திறனாளி மாணவர்கள் பள்ளி வயதை அடைந்த பிறகும், உயர் ஆதரவு தேவைப்படும் மாணவர்கள், பலதரப்பட்ட குறைபாடுகள், அறிவுசார் குறைபாடு, பெருமூளை முடக்குவாதம், மன இறுக்கம் மற்றும் பல காரணங்களால் பள்ளிக்கு வர இயலாத நிலையில் உள்ளனர். அம்மாணவர்களுக்கு கல்வி, இயன்முறை மருத்துவம் உள்ளிட்ட சிகிச்சைகளை வீடுகளுக்கே சென்று வழங்கி, அவர்தம் கற்றல் சூழலை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு ஒரு கல்வித் திட்டம் தொடங்கப்படும்.

ஒரு மாணவருக்கு ரூ.10,000/– வீதம் 7,786 மாணவ/மாணவியர்க்கு ரூ.7.80 கோடி மதிப்பீட்டில் உயர் தொழில்நுட்ப உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

2021 ஆகஸ்ட் 26] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

22. மாநில வளமையம் ஏற்படுத்துதல்

மாநில அளவிலான பயிற்சிகளின்போது கற்றல்–கற்பித்தல் செயல்பாடுகளில் ஆசிரியர்களுக்கு ஆய்வக வழி அனுபவக் கற்றலை (hands on and experiential learning) வழங்குவது மிகவும் அவசியமாகிறது. இதற்கென ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் "மாநில வளமையம்" உருவாக்கப்படும். இம்மையத்தை ஆண்டு முழுவதும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பார்வையிடவும் வழிவகை செய்யப்படும்.

23. கல்வியில் பின்தங்கியுள்ள ஒன்றியங்களில் பயிலும் மாணவர்களுக்கு மனநலம் மற்றும் வாழ்வியல் திறன் பயிற்சிகள்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், யுனிசெஃப் நிறுவனத்துடன் இணைந்து, தமிழ்நாட்டில் கல்வியில் பின்தங்கியுள்ள 44 ஒன்றியங்களில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு மனநலன் மற்றும் வாழ்வியல் திறன் சார்ந்த பயிற்சிகள் அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென ரூ.1 கோடி மதிப்பீட்டில் கலை மற்றும் விளையாட்டு அடிப்படையிலான ஆசிரியர் கட்டகம் மற்றும் மாணவர் கையேடு உருவாக்கப்படும்.

24. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் மதிப்பீட்டுப் புலத்தை உருவாக்குதல்

ஒவ்வொரு மாணவரின் கற்றல் அடைவுகளை, தகுந்த கால இடைவெளியில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் (Hi–Tech Labs) வாயிலாக அளவிடவும், தரவுகளின் அடிப்படையில் பதிவு செய்யவும், கற்றல் கற்பித்தல் தரத்தை உறுதி செய்யவும், அதனடிப்படையில் உகந்த குறைதீர் உத்திகளை உருவாக்கி கற்றல்—கற்பித்தலின் தரத்தை மேம்படுத்தவும், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் மதிப்பீட்டுப்புலம் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

25. உயர் தொழில்நுட்பப் படப்பதிவுக் கூடங்கள்

பள்ளிக் கல்வித் துறையில் மாணவர்களின் நலனுக்காக கல்விசார் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பு செய்ய கல்வித் தொலைக்காட்சி அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் தற்காலிகமாகச்

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [*2021 ஆகஸ்ட் 26 செயல்பட்டு வருகிறது. கல்வித் தொலைக்காட்சியில் தரமான காணொளிகளை ஒளிபரப்புவதற்கென மெய்நிகர் ஒளிப்பதிவுக் கூடம் உள்ளிட்ட ஐந்து ஒளிப்பதிவுக் கூடங்கள் ரூ.2.5 கோடி மதிப்பீட்டில் பள்ளிக் கல்வி இயக்கக வளாகத்தில் உருவாக்கப்படும்.*

இப்புதிய படப்பதிவுக் கூடங்களின் வாயிலாக, சிறந்த வல்லுநர்களைக் கொண்டு மாணவர்களுக்கு உயர்தரக் கல்வி வழங்கப்படுவதையும் ஆசிரியர்களுக்குத் தேவையான பயிற்சி அளிக்கப்படுவதையும் உறுதி செய்ய இயலும். மேலும், இந்தக் கல்வியாண்டில் கூடுதலாக இரண்டு கல்வித் தொலைக்காட்சி அலைவரிசைகள் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

26. சிறந்த கற்போர் மையங்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்குதல்

கற்போம் எழுதுவோம் இயக்கத்தின்கீழ், திட்டச் செயல்பாடுகளைச் சிறப்பாகவும், புதுமையாகவும் செயல்படுத்தும் கற்போர் மையங்களை ஊக்கப்படுத்தும்விதமாக, ஒரு மாவட்டத்திற்கு தலா 3 மையங்கள் வீதம் 38 மாவட்டங்களில் 114 மையங்களைத் தெரிவு செய்து, பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயம் ரூ.5.70 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

பிற்பகல் 1–55

27. வயது வந்தோர் கல்விக்காக மாநில எழுத்தறிவு மையம் உருவாக்குதல்

வயது வந்தோருக்கான கல்வித் திட்டங்களில் புதுமைச் செயல்பாடுகளைக் கொண்டுவரும் வகையில், கலைத் திட்ட உருவாக்கப் பிரிவு, செயலாராய்ச்சிப் பிரிவு, பயிற்சிப் பிரிவு, தகவல் தொழில்நுட்பப் பிரிவு எனப் பல்வேறு பிரிவுகளை உள்ளடக்கிய மாநில எழுத்தறிவு மையம், பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககத்தின்கீழ் ரூ.26.96 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

28. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு விருது

கிராமப்புறங்களைச் சேர்ந்த இலட்சக்கணக்கான ஏழை, எளிய மாணவர்களுக்கு அரசுப் பள்ளிகள் சிறந்த கல்விச்

2021 ஆகஸ்ட் 26] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

சேவையை ஆற்றி வருகின்றன. இப்பள்ளிகளின் உட்கட்டமைப்பு, கல்வித் தரம், பெற்றோருக்கான விழிப்புணர்வு என ஒட்டுமொத்த மேம்பாட்டிற்கென சிறந்த முறையில் அர்ப்பணிப்போடு பணியாற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு விருது ஆண்டுதோறும் வழங்கப்படும் என்பதைப் பெருமையோடு சொல்லி, இந்த அளவில் நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் உங்களை நான் வணங்குகிறேன். 1966 முதல் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் தி.மு.க. மாணவரணியில் இருந்த எனக்கு, 1989–ல் 17 ஆண்டுக் காலம் பேராசிரியராகப் பணியாற்றியதற்குப் பிறகு விழுப்புரம் தொகுதியிலே சட்டமன்ற உறுப்பினராகப் போட்டியிட வாய்ப்பளித்து, அப்பொழுதே என்னை அமைச்சராகவும் ஆக்கி, எங்களுடைய குடும்பத்தினுடைய தலைவராகத் திகழ்ந்து, உலகத் தமிழர்களின் உள்ளங்களிலெல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கிற என் தலைவர் கலைஞர் அவர்கள் துயில்கொள்ளும் இடம் நோக்கி, தலைதாழ்ந்து என் வணக்கத்தை முதலில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, கலைஞர் காலத்தில்தான் நான் விழுப்புரம் தொகுதியிலே 4 முறையும், திருக்கோவிலூர் தொகுதியிலே ஒரு முறையும் போட்டியிட்டேன். இப்பொழுது மீண்டும் திருக்கோவிலூர் தொகுதியிலே போட்டியிட்டு 4 ஆவது முறையாக என்னை அமைச்சராக ஆக்கியிருக்கிற என் தலைவர், 14 வயதிலேயே அரசியலுக்குள் நுழைந்து அனைத்துத் தரப்பு தமிழகத்து மக்களுடைய உள்ளங்களிலே மட்டுமின்றி, இந்திய மக்களுடைய உள்ளங்களிலெல்லாம் நிரந்தர இடத்தைப் பெற்றிருக்கின்ற, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக திகழ்ந்துகொண்டிருக்கிற தமிழக முதல்வர், அதுவும் குறிப்பாக, விழுப்புரத்திலே நடைபெற்ற மாநாட்டில் முதன்முதலாக தலைமையேற்று, இன்று கழகத்தினுடைய தலைவராகவும், தமிழக முதல்வராகவும் உயர்ந்திருக்கிற என் தலைவர், தளபதி அவர்களுக்கு என்னுடைய உளமார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கி, அவரை வணங்குகிறேன்.

[முனைவர் க. பொன்முடி] [2021 ஆகஸ்ட் 26

அதேபோல, இளமைப் பருவத்திலேயே கொள்கைப் பிடிப்போடு, இங்கே கன்னி உரையாற்றுகிறபோது NEET தேர்வைப் பற்றி அவர் ஆற்றிய உரை மறக்க முடியாத உரை. தேர்தல் பிரச்சாரத்தின்போதும் அந்த NEET தேர்வைப் பற்றியும், அண்ணாமலை பல்கலைக்கழகத்திலே இருந்த மாணவர்களின் கோரிக்கை பற்றியும் என்னிடம் அவர் குறிப்பிட்டு, அவைகளையெல்லாம் நிறைவேற்றித் தரவேண்டும் என்ற இன்றைய இளைஞர்களின்மீது, மாணவர்களின்மீது அக்கறையுள்ள ஒரு தலைவராகத் திகழ்ந்துகொண்டிருக்கிற சட்டமன்ற உறுப்பினர், என் அன்புச் சகோதரர் திரு. உதயா அவர்களுக்கும், அதேபோல, நம்முடைய பொதுச் செயலாளர், அண்ணன் மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்களுக்கும், என்னுடைய திருக்கோவிலூர் தொகுதி மற்றும் விழுப்புரம் தொகுதி மக்கள் அனைவருக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய வணக்கத்தை நான் முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

என் உரையைத் துவங்குவதற்கு முன்பாக என்னுடைய தொகுதியைச் சார்ந்த, கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சார்ந்த திருக்கோவிலூரை நகராட்சியாக அறிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தளபதி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் திரு. நேரு அவர்களுக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றியை நான் இங்கே காணிக்கையாக்குகிறேன்.

அங்கேகூட சில பிரச்சினைகள் வந்தன. பக்கத்தில் இருக்கிற ஊர்களையெல்லாம் இதிலே சேர்த்துவிடப் போகிறார்கள் என்று சில பேர் கிளப்பி விட்டு, மாவட்ட ஆட்சியரிடம் சென்றார்கள். ஆனால், நமது மாண்புமிகு அமைச்சர் திரு. நேரு அவர்கள் உறுதியளித்திருக்கிறார்கள். இப்போது இருக்கிற அந்தப் பேரூராட்சி, அதுவே நகராட்சி ஆவதற்குரிய மக்கள் தொகையும், நிதியும் பெற்றிருக்கிற காரணத்தினால், அத்துடன் அதிகமாக பக்கத்திலே இருக்கிற கிராமங்களைச் சேர்க்க மாட்டோம் என்று சொல்லியிருக்கிறார். அவர்களுக்கும் இந்தச் சட்டமன்றத்தின் மூலமாக அதைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கல்வித் துறைக்கு நான் வருகிறேன். குறிப்பாக, பாரதிதாசன் ஒரு கவிதையைச் சொல்லியிருக்கிறார்.

பாரதிதாசனுடைய கவிதைகளிலே அது புதுக்கவிதை, உங்களுக்குத் தெரியும்.

"கல்வியை விரும்பிப் படிக்க வேண்டும், பிடித்ததைப் படிக்க வேண்டும்;

புதிய நுட்பங்களோடு கற்க வேண்டும், அறிவியல் சாதனை வேண்டும்;

உன்னுடைய திறமை அறிந்து போராட வேண்டும்;

மாற்றம் நிறைந்த கல்வி கற்கும் முறை மற்றும் பயிலும் முறை வேண்டும்".

இது பாரதிதாசனுடைய கவிதை. அதைத்தான் இன்று எங்களுடைய தமிழக முதல்வர் தளபதி அவர்கள் எங்களுக்கெல்லாம் சுட்டிக்காட்டியிருக்கிறார், கல்வித் துறை அமைச்சராக இருக்கிற நம்முடைய அமைச்சர் மாண்புமிகு திரு. மகேஸாக இருந்தாலும், நானாக இருந்தாலும், கல்வித் துறையிலே வளர்ச்சி அடைந்தால்தான் மற்ற அனைத்துத் துறைகளிலேயும் வளர்ச்சி ஏற்படும் என்ற உணர்வோடு எங்களை வழிநடத்திச் செல்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை மீண்டும் நான் வணங்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: இங்கே நீதிக்கட்சி என்று சொன்னாலே, சம உரிமைக்காகப் போராடிய கட்சி என்பதை நாம் அறிவோம். பெரியாரும், அண்ணாவும், கலைஞரும் சமத்துவத்திற்காக, சம உரிமைக்காகப் போராடியவர்கள், கல்வியை வளர்த்தவர்கள். அந்த வழியிலே இன்று பீடு நடை போட்டுக் கொண்டிருக்கின்ற தலைவர்தான் எங்கள் தளபதி. அதனால்தான், இங்கே நண்பர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, பத்திரிகைகளின் கருத்துக் கணிப்பில் இந்தியாவில் இருக்கின்ற முதல்வர்களிலேயே முதன்மையான முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர் நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் நம்முடைய விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்

[முனைவர் க. பொன்முடி] [2021 ஆகஸ்ட் 26

சுட்டிக்காட்டினார்கள். எப்படி ஆரம்பக் கல்விக்கு பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காரணமாக இருந்தாரோ, அதுபோல உயர் கல்வியின் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தவர் தலைவர் கலைஞர் என்பதை மனசாட்சி உள்ள யாரும் மறுக்க முடியாது. ஏனென்றால், அவர்கள் சொல்லிவிட்டு சென்றார்கள். இப்படி சொல்பவர்களெல்லாம்கூட இருக்கிறார்கள். உயர் கல்வியில் மாணவர் சேர்க்கை சதவிகிதம் என்று அவர் சொன்னார். அதற்கெல்லாம் யார் காரணம்? ஆசிரியராக இருந்தவர் சபாநாயகர் அவர்கள். திரு. கோ.க. மணியெல்லாம் ஆசிரியராக இருந்தவர். 20 சதவிகிதம் மதிப்பெண்கள் வாங்குகிற ஒருவரை, 25 சதவிகிதம் மதிப்பெண்கள் வாங்க வைப்பது பெரிய கஷ்டம். ஆனால், 60 சதவிகிதம், 70 சதவிகிதம் மதிப்பெண்கள் வாங்குகிறவர்களை 90 சதவிகித மதிப்பெண்களை சுலபமாக வாங்க வைத்துவிடலாம். நமக்குத் தெரியும். அதுமாதிரி 60 சதவிகிதம், 70 சதவிகிதம், 80 சதவிகிதம் என்று ஆக்கிக் கொடுத்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, கலைஞர் ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த காலக்கட்டத்தில் பெற்ற உயர் கல்வியினுடைய வளர்ச்சிதான் இன்று இந்தளவிற்கு உச்சத்தைப் பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞர் அவர்கள் என்னென்ன செய்திருக்கிறார்கள்? 1997–ல், கல்வித் துறையை பள்ளிக் கல்வித் துறை, உயர் கல்வித் துறை என்று பிரித்து முதன் முதலாக மாற்றியமைத்தவரே கலைஞர் அவர்கள்தான். 2006 ஆம் ஆண்டில்தான் உயர் கல்வித் துறைக்கென்று தனியாக என்னை அமைச்சராகவும் நியமித்தார்கள். அந்தளவிற்கு உயர் கல்வியின்மீது அக்கறை கொண்டிருந்தவர், தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை யாராலும் மறுக்க முடியாது. இன்றைக்கு நுழைவுத் தேர்வு 'NEET' பற்றியெல்லாம் பேசுகிறார்கள். நுழைவுத் தேர்வு இரத்து என்பது சாதாரணமான விஷயமா? இங்கேயிருக்கின்ற பலருக்குத் தெரியும். (குறுக்கீடு) நீங்களும் Entrance Exam எழுதினீர்களா? அப்போது அந்த Entrance exam–க்குப் படிக்க வேண்டுமென்றால் மிகக் கடினம். Higher Secondary School–ல் இருப்பவர்கள், கிராமப்புற மாணவர்களெல்லாம் நுழைவுத் தேர்வே எழுத முடியாது. அந்த மாதிரியான ஒரு சூழ்நிலை. அந்த நுழைவுத் தேர்வை இரத்துச் செய்ய வேண்டுமென்பதற்காக ஒரு குழுவை நியமித்து, இரத்து செய்ததனால்தான் உயர் கல்வி தமிழகத்திலே வளர்ந்தது என்பதை மனசாட்சியுள்ள யாராவது மறுக்க முடியுமா? 2007 ஆம் ஆண்டிலே கிராமப்புற மாணவர்கள் அதிக அளவில் பொறியியல் கல்லூரிகளில் உயர் கல்வி பயில நுழைவுத் தேர்வை

2021 ஆகஸ்ட் 26] [முனைவர் க. பொன்முடி]

இரத்து செய்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். அதுமட்டுமல்ல, முன்பெல்லாம் பொறியியல் கல்லூரிகளில் சேர வேண்டுமென்றால், 2008 ஆம் ஆண்டில் குறைந்தபட்ச மதிப்பெண்கள் 60 சதவிகிதத்தில் இருந்தது. அதை OC–க்கு 55 சதவிகிதம் என்று குறைத்தார்; அதேமாதிரி 60 சதவிகிதமாக இருந்ததை BC–க்கு 50 சதவிகிதமாகக் குறைத்தார்; அதுமட்டுமல்ல, MBC–க்கு 55 சதவிகிதத்திலிருந்து 45 சதவிகிதமாகக் குறைத்தார். SC–க்கு எல்லாம் அப்பொழுது ஒன்றும் கிடையாது. 2010 ஆம் ஆண்டு நாங்கள் அதையும் குறைத்தோம். 2010 ஆம் ஆண்டில் OC ஆக இருந்தால் 50 சதவிகிதம் மதிப்பெண்கள் இருந்தால் போதும், Engineering College–ல் சேரலாம் என்றார். BC ஆக இருந்தால், 45 சதவிகிதம் இருந்தால் போதும், Engineering College–ல் சேரலாம் என்றார். அதைப்போல மற்றவர்களுக்கு 40 சதவிகிதம் இருந்தால் போதும் என்று சொன்னவர் தலைவர் கலைஞர் அவர்கள். இது கலைஞர் ஆட்சியில் நடைபெற்றதுதான். இந்த மதிப்பெண்களையெல்லாம் குறைத்ததனால்தான் கிராமப்புறங்களில் அரசு உயர்நிலைப் பள்ளிகளில் படித்த மாணவர்களெல்லாம் இன்று உயர் கல்வி பெற முடிந்தது. அதனுடைய விளைவாகத்தான், இன்று உயர் கல்வி பயில்வோரினுடைய சதவிகிதம் இந்தியாவிலேயே முதல் இடத்தில் தமிழகம் 51.4 சதவிகிதம் என்ற அளவில் உயர்ந்திருக்கிறது. அதற்குக் காரணம் என் தலைவர் கலைஞர் அவர்கள் போட்ட விதை. அவர் செய்த அடிப்படை செயல்கள்தான். அதனால்தான் இந்த வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

அதுமட்டுமல்ல, அரசுப் பொறியியல் கல்லூரிகளிலே அப்பொழுதெல்லாம் கட்டணம் 12,550 ரூபாயாக இருந்தது. 2006–2007 ஆம் ஆண்டிலே அந்த 12,550 ரூபாயை 7,550 ரூபாயாகக் குறைத்து, பொறியியல் கல்லூரிகளில் ஏழை மாணவர்களும் படிப்பதற்கு வழிவகை செய்த தலைவர், எங்களுடைய தலைவர் கலைஞர் என்பதை யாரும் மறுக்க முடியாது.

அதுபோல்தான், கலைக் கல்லூரிகள், Polytechnic கல்லூரிகளில் கல்விக் கட்டணத்தை இரத்து செய்தவரும் கலைஞர் அவர்கள்தான். உயர் கல்வியிலே இவ்வளவு வளர்ச்சி என்று சொன்னார்கள். யாரால் என்றால், தலைவர் கலைஞர் அவர்களால்தான். Polytechnic முதலாமாண்டு மாணவர்களுக்கு இலவச பாடப் புத்தகங்கள் வழங்கியதும் கலைஞருடைய ஆட்சியில்தான்.

[முனைவர் க. பொன்முடி] [2021 ஆகஸ்ட் 26

பிற்பகல் 2–05

இப்போதுகூட கேட்டார்கள். அரசுக் கல்லூரிகள் இத்தனை ஆரம்பிக்கின்றீர்கள். நிறைய பேர் apply செய்கிறார்கள் என்று சொன்னார்கள். அதனால் மாணவர்கள் இடம் கிடைக்காமல் ரொம்ப கஷ்டப்படுகிறார்கள். அரசு கலைக் கல்லூரிகளில் shift system அடிப்படையில், morning shift, evening shift என்று கொண்டுவந்தால், காலையில் 50 பேர் படிக்கின்றார்களென்றால், மதியம் 50 பேர் படிப்பார்கள். அப்படி பார்த்தால் ஒரு நாளைக்கு 100 பேர் படிப்பார்கள். அந்தமாதிரி படிப்பதற்காக shift system–ஐக் கொண்டுவந்து, மாணவர்களுடைய எண்ணிக்கையை அதிகரித்ததும் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நான் இந்த அவையில் இருந்தபோதுதான் சொன்னார். High school செல்கின்ற மாணவர்களுக்கு மட்டும் bus pass கொடுத்தீர்கள். College செல்கின்ற மாணவர்களுக்கும் bus pass கொடுக்க வேண்டுமென்று சொல்லி, பேருந்துச் சலுகையை வாங்கிக் கொடுத்த முதலமைச்சர், அன்று அமைச்சராக இருந்த எங்களுடைய தளபதிதான் என்பதை யாரும் மறுக்க முடியாது. அதனால் கிராமப்புற மாணவர்களுக்கெல்லாம் இன்றைக்கு படிக்கின்ற வாய்ப்புகள் கிடைத்திருக்கின்றன.

திருவாரூரில் மத்திய பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் போன்ற இந்தப் பல்கலைக்கழகங்கள் எல்லாம் முதலில் ஒரே University ஆகத்தான் இருந்தன. இதையெல்லாம் பிரித்து, general education–க்கு என்று ஒரு University, Agriculture–க்கு என்று ஒரு University, கால்நடைப் படிப்புக்கு என்று ஒரு University என்று இந்த மாதிரியெல்லாம் பிரித்துக் கொடுத்தது, சட்டப் பல்கலைக்கழகத்தை உருவாக்கிக் கொடுத்தது; தலைவர் கலைஞர் அவர்கள்தான். ஒன்றே ஒன்றை மட்டும் நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன். சட்டப் பல்கலைக்கழகத்தை அம்பேத்கர் பல்கலைக்கழகம் என்று பெயர் சூட்டுகின்றபோது, அம்பேத்கர் பிறந்த மாநிலமான மகாராஷ்டிராவில் அவருடைய பெயரையே வைக்கக் கூடாது என்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆனால், அந்த ஆர்ப்பாட்டத்தை அப்போதே தலைவர் சுட்டிக்காட்டினார்.

2021 ஆகஸ்ட் 26] [முனைவர் க. பொன்முடி]

பிறந்த மாநிலத்தில் பெயர் வைக்கவில்லை. ஆனால், இங்கே பெயர் வைக்கின்றேன் என்று சொல்லி, சட்டப் பல்கலைக்கழகத்திற்கு அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் என்ற பெயரைச் சூட்டிய தலைவர், எங்களுடைய தலைவர், கலைஞர் என்பதை மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அடித்தளத்து மக்கள் பயில வேண்டுமென்பதற்காக எல்லா வகைகளிலும் உதவி செய்தவர் தலைவர் கலைஞர். கல்வியியல் பல்கலைக்கழகமாக இருந்தாலும், நான் முன்பு குறிப்பிட்டதைப்போல, பல்வேறு துறைகளினுடைய பல்கலைக்கழகங்களாக இருந்தாலும் அவற்றுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்ந்த தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அதனால்தான் நான் சொல்கிறேன். ஆரம்பக் கல்விக்கு எப்படி பெருந்தலைவர் காமராஜர் காரணமாகக் இருந்தாரோ அந்தமாதிரி தமிழ்நாட்டில் உயர் கல்வி வளர்வதற்குக் காரணமாக இருந்தவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்கள் வீட்டில் நான் படிக்கின்றபோது, கண்டாச்சிபுரம், எடையாறு என்ற ஊரில் இரண்டே இரண்டு பட்டதாரிகள் மட்டும்தான் இருந்தார்கள். இப்போது 200 பட்டதாரிகள் இருக்கின்றார்கள். இரண்டே இரண்டு பட்டதாரிகள் இருந்த அந்தக் காலக்கட்டத்தில் எல்லோருமே first generation graduates தான். அப்பா, அம்மா, அண்ணன் தம்பி படித்திருக்க மாட்டார்கள். அந்தமாதிரி படிக்காத அந்தக் குடும்பத்தைச் சார்ந்த முதல் தலைமுறை பட்டதாரியாக படிக்கின்ற அந்த மாணவர்களுக்கு இலவசக் கல்வி என்று அறிவித்து, அவர்களை வளர்த்தவர் தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. First generation graduates மாணாக்கர்களுக்கு இட ஒதுக்கீடு கொடுத்ததும் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

அடுத்து, செவித்திறன் குறைபாடு. அதாவது, கொஞ்சம் காது கேளாதவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று சொல்லி, தனியாக பட்டப் படிப்பை உருவாக்க வேண்டுமென்று இந்தியாவிலேயே முதன்முறையாக Presidency College–சென்னை மாநில கல்லூரியிலேயே அவர்களுக்கு உருவாக்கிக் கொடுத்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள்தான். முன்பெல்லாம் college–ல் சேர விண்ணப்பிக்கின்றபோது, ஒவ்வொரு பாடத்திற்கும் தனி application போட வேண்டும். அதாவது, History என்றால்,

[முனைவர் க. பொன்முடி] [2021 ஆகஸ்ட் 26

அதற்கு தனி application போட வேண்டும். அதற்கு விண்ணப்பக் கட்டணமாக ரூ.50 கட்ட வேண்டும். Politics என்றால் அதற்கு ரூ.50 கட்ட வேண்டும்; Physics என்றால் அதற்கு ரூ.50 கட்ட வேண்டும். அந்தமாதிரி இல்லாமல் எல்லாப் பாடங்களுக்கும் சேர்த்து ஒரே விண்ணப்பத்தில், ஒரே செலவில் விண்ணப்பம் செய்யலாம் என்று சொன்னதும் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில்தான். ஆகவே, ஏழை, எளிய அடித்தளத்து மக்களுடைய உணர்வுகளை உணர்ந்திருந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அதனால்தான் இன்றைக்கு உயர் கல்வியில், மாணாக்கருடைய சேர்க்கை இந்தியாவில் 27.1 சதவிகிதமாக இருக்கின்றபோது, நம்முடைய தமிழ்நாட்டில் 51.4 சதவிகிதமாக இருக்கின்றது.

மாணவியர் சேர்க்கை. மகளிரிடையே கல்வியை வளர்க்க வேண்டுமென்று நினைத்தவர் தலைவர் கலைஞர். அதனால்தான் ஆசிரியைகள் எல்லாம் ஆரம்பக் கல்விக்கூடங்களில் நியமிக்கப்பட்டார்கள். அதுகுறித்து கல்வி அமைச்சருக்குத் தெரியும். ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் பெண்களைத்தான் நியமிக்க வேண்டுமென்று இந்தியாவிலேயே உத்தரவு போட்ட ஒரே முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) பெண்களை ஆசிரியர்களாக நியமித்ததன் விளைவு, பெண் கல்வி வளர்வதற்குக் காரணமாக இருந்தது. அதனால்தான் 27.3 சதவிகிதமாக இருந்த பெண் கல்வி 51 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது. மேலும், பட்டியல் இன மாணவர்களின் கல்வி வளர்ச்சி என்பது இந்தியாவில் 22.8 சதவிகிதம்; தமிழ்நாட்டில் 38.8 சதவிகிதம். மாணவியருடைய எண்ணிக்கை 24.1 சதவிகிதமாக இருந்தது 40.4 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது. இதெல்லாம் எப்படி வந்தது? நீதிக் கட்சி காலந்தொட்டு பெரியார் முதற்கொண்டு, நம்முடைய கலைஞர், அண்ணா போன்றோருடைய வழிகாட்டுதலின்படி, சமூக நீதிக் கொள்கைக்காக, அடித்தளத்து மக்களுக்காக இட ஒதுக்கீடு வழங்க வேண்டுமென்று அந்தக் கொள்கையின் அடிப்படையிலே பெற்ற இட ஒதுக்கீட்டின் காரணமாகக் கிடைத்த வளர்ச்சிதான் என்பதை யாராலும் மறுக்க முடியாது. அந்த அடிப்படையிலே, இங்கே உயர் கல்வி வளர்ந்திருக்கிறது என்று சொன்னால், அதற்கு முதல் காரணம் தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்குக் காலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு அனைத்து இட ஒதுக்கீட்டுப் பிரிவுகளிலும், 7.5 சதவிகித இடங்கள் முன்னுரிமையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்வது பற்றிய சட்டமுன்வடிவை இந்த அவையிலே கொண்டுவந்தார்கள். 2020–2021–ல் Anna University–ல், Government School–ல் படித்துவிட்டு வந்து Engineering College–ல் சேர்ந்த மாணவர்களுடைய percentage எவ்வளவு என்றால், 0.83 சதவிகிதம். இப்பொழுது எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இதுதான் வேலை. எல்லோரையும் படிக்க வைக்க வேண்டுமென்று எந்நேரமும் சிந்தித்துக்கொண்டிருக்கிறார். அதனால் எங்களையெல்லாம் அழைத்து மருத்துவக் கல்லூரியில் மட்டும் 7.5% ஒதுக்கீடு இருந்தால் போதாது, அனைத்துத் தரப்பிலும் கொண்டு வரவேண்டும் என்று சொல்லி அறிவித்திருக்கிறார்கள். இப்போது பொறியியல் கல்லூரி, அண்ணா பல்கலைக்கழகத்தில் மட்டுமல்ல, எல்லா கல்லூரிகளிலும் அதேமாதிரி தான் இருக்கிறது. பொறியியல் கல்லூரியில் Government School–ல் படித்தவர்கள் 6.1 percent தான் இருந்தது. அதேமாதிரி Veterinary College–ல் 3 percentage தான் Government School–ல் படித்தவர்கள். Fisheries College–ல் 3.7 சதவிகிதம்தான், சட்டக் கல்லூரியில் 3.36 சதவிகிதம்தான், Agriculture College–ல் 6.79 சதவிகிதம் பேர்தான் Government School–ல் படித்தவர்கள். அவர்கள் அனைவருக்கும் இட ஒதுக்கீடு என்ற அடிப்படையில், 7.5 சதவிகிதம் இட ஒதுக்கீடு கொடுக்க வேண்டுமென்று இன்று காலையிலே அறிவித்து இருக்கிற, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் உயர் கல்வித் துறை அமைச்சர் என்ற முறையிலே நன்றியோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இது தமிழகத்து மாணவர்கள், இளைஞர்கள் மத்தியில் மிகப் பெரிய உத்வேகத்தை உருவாக்கும் என்பதில் எந்தவித வேறுபட்ட கருத்தும் இருக்க முடியாது. அதேமாதிரிதான், ஜி.கே. மணி அவர்கள் சொன்னதைப்போல், அண்ணா பல்கலைக்கழகத்தில் கிராமப்புறத்து மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு கொடுத்தோம். இது மாதிரி கொடுக்கக் கூடாது என்று Court சொல்லிவிட்டது. கிராமப்புற மாணவர்களையும் படிக்கவைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு ஒரு சட்டத்தை உருவாக்கியவர் நம்முடைய

[முனைவர் க. பொன்முடி] [2021 ஆகஸ்ட் 26

தலைவர் கலைஞர் அவர்கள், அப்பொழுது இட ஒதுக்கீடு இத்தனை percent என்று கொடுத்தார்கள். ஆனால் அதை Court ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் உடனே 5 marks–ஐ கொடுத்து உயர்த்துங்கள், அதில் ஒன்றும் கேட்க முடியாது என்று சொன்னவர்தான் என் தலைவர் டாக்டர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி) அதைச் செய்து காட்டியவர்தான் தலைவர் டாக்டர் கலைஞர். அந்த அடிப்படையில் அவர் செய்தார். அதேபோலத்தான் இப்போது அண்ணா பல்கலைக்கழகத்தில் தேர்வு குறித்து சிக்கல்கள் என்ன நடந்தன என்று உங்களுக்குத் தெரியும். இப்போது முன்னாள் அமைச்சர் வெளியே சென்று விட்டார். அவையில் இருந்திருந்தால் அவருக்கு என்ன என்று தெரிந்திருக்கும். அந்தத் தேர்வை நடத்துவதற்கு அந்த University–ன் VC செய்த வேலையினால் அவர்மீது விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. அதுதொடர்பான விசாரணையெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

துணை வேந்தர்கள் நியமனம் குறித்து விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த தோழர், மிகச் சிறப்பாக எடுத்துச்சொன்னார். துணை வேந்தர் நியமனங்கள் எல்லாம் மாண்புமிகு முதலமைச்சரின் ஆலோசனையில் இருக்கிறது. அதற்கெல்லாம் வழி காண வேண்டிய கட்டாயமும், அவசியமும், நிச்சயம் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

அதேபோல உயர் கல்வியைப் பொறுத்தவரையில், உயர் கல்வி மன்றம் Higher Education Council என்று ஒன்று உள்ளது. அந்த Higher Education Council–ல் 7 வருடங்களாக துணைத் தலைவராக இதுவரையில் யாரும் நியமிக்கப்படவில்லை. இப்பொழுது அதற்கும் நியமனம் செய்து கொடுத்திருப்பவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்கள் தான்.

அதேமாதிரி அண்ணா பல்கலைக்கழகத்தில் தேர்வை தவறான முறையில் நடத்தினார்கள். அதனால் அந்த University–ல் 20 Percent தான் pass செய்தார்கள். University–ல் 20 percent தான் pass என்றால் என்ன அர்த்தம்? அதனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையை ஏற்று, அங்கே மறுபடியும் தேர்வு வைத்து, அந்தத் தேர்வுகளின் முடிவுகள் இன்று அல்லது நாளை வெளியிடப்படவிருக்கின்றன. அதனுடைய விளைவாகத்தான், அங்கே அண்ணா பல்கலைக்கழகத்திலே பல்வேறு மாணவர்கள் தேர்ச்சி பெற இருக்கிறார்கள் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

2021 ஆகஸ்ட் 26] [முனைவர் க. பொன்முடி]

அதுமட்டுமல்ல, அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் ராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி மாணவர்களின் குறைகளை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் சொல்லியிருக்கிறார்கள். அங்கு இருக்கிற மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் வேறுபடுகிறது என்று சொல்லி, மற்ற தனியார் கல்லூரிகளில் வாங்கும் கட்டணம் போலவே, அங்கேயும் வாங்க வேண்டுமென்று அந்தக் கல்லூரி மாணவர்கள் முறையீடு செய்து அவர்களுக்கு அதையும் நிர்ணயிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருப்பதும், இந்த அரசுதான் என்பதை மறுக்க முடியாது.

கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பது கடினமாக இருக்கிறது என்று நீங்கள் எல்லாம் சொன்னீர்கள். நான் அன்றைக்கே பேசும்போது சொல்லியிருந்தேன், நிச்சயமாக இந்த ஆண்டு அரசு கல்லூரிகளிலே 25 சதவிகிதம் மாணவர்களுக்கு இடம் உயர்த்தித் தரப்படும்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. முத்துசாமி அவர்கள் ஒரு கோரிக்கை வைத்திருந்தார்கள். ஈரோடு, சிக்கய்யநாயக்கர் அரசு உதவிபெறும் கலைக் கல்லூரி நிர்வாகத்தை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று சொல்லியிருந்தார். அதையும் ஏற்று நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நேற்று சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார். தென்காசி மேலநீலிதநல்லூர் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் கல்லூரியை தனி அலுவலர்மூலம் நடத்திட வேண்டுமென்று அவர் வைத்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு, இன்று அதுவும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. இதுஎல்லாம் நாங்கள் 100, 105 நாட்களில் செய்திருக்கிற வேலைகள். இன்னும் நிறைய நடக்கவிருக்கின்றன. ஆகவே இவைகளெல்லாம் நடக்க வேண்டும். உங்களுடைய ஆதரவு அதற்கு இருக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொண்டு, இந்தத் துறையின் அறிவிப்புகளை நான் சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 2–15

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10 அரசு கலைக் கல்லூரிகள் துவக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருந்தார்கள். அதனைத் தொடர்ந்து 100–க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன. மாண்புமிகு அமைச்சரிலிருந்து,

[முனைவர் க. பொன்முடி] [2021 ஆகஸ்ட் 26

சட்டமன்ற உறுப்பினரிலிருந்து, எதிர்க்கட்சித் தலைவர்களிலிருந்து எல்லோரும் எங்கள் ஊரில் வேண்டும், எங்கள் தொகுதியில் வேண்டும் என்று விண்ணப்பம் நிறைய கொடுத்திருந்தீர்கள். உங்கள் எல்லோருக்கும் செய்ய முடியவில்லை. தயவு செய்து மன்னிக்க வேண்டும். ஆனால், கண்டிப்பாக வருங்காலங்களில் தமிழக முதல்வர் அவர்களுடைய ஆலோசனையின்படி இவை மேலும் அதிகரிக்கப்படும் என்ற உறுதியை மட்டும் முதலிலேயே உங்களுக்குச் சொல்லிவிடுகிறேன்.

அறிவிப்புகள்

1. புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்குதல் (Opening of New Government Arts and Science Colleges)

தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் சீரான உயர் கல்வி வழங்குவதற்கும், மாணவர் சேர்க்கை விகிதாச்சாரத்தை அதிகப்படுத்துவதற்கும், 10 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தொடங்குவதற்கு வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்காணும் இடங்களில் புதிய கல்லூரிகள் தொடங்கப்படும்.

விருதுநகர் மாவட்டம்–திருச்சுழி, (கை தட்டுகிறார் பாருங்கள்) கள்ளக்குறிச்சி மாவட்டம்–திருக்கோவிலூர், இதற்கு நானே தான் கை தட்டிக்கொள்ள வேண்டும். அடுத்து ஈரோடு மாவட்டம்–தாளவாடி, திண்டுக்கல் மாவட்டம்–ஒட்டன்சத்திரம், திருநெல்வேலி மாவட்டம்–மானூர், திருப்பூர் மாவட்டம்–தாராபுரம், தருமபுரி மாவட்டம்–ஏரியூர், புதுக்கோட்டை மாவட்டம்–ஆலங்குடி மற்றும் வேலூர் மாவட்டம்–சேர்க்காடு ஆகிய இடங்களில் புதிய இருபாலர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், திருவாரூர் மாவட்டம்–கூத்தாநல்லூரில் புதிய அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் தொடங்கப்படும்.

திருவண்ணாமலை கலைக் கல்லூரிக்கு முன்பு கலைஞர் பெயர் இருந்ததாகவும், அதை இப்போது மாற்றிவிட்டதாகவும் மீண்டும் கலைஞர் பெயரை வைக்க வேண்டும் என்று கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் கேட்டார். அப்போது கல்லூரிகளுக்கு பெயர் வைப்பதில், உயிரோடு இருப்பவர்கள் பெயரை மாற்றிவிட்டார்கள். தற்போது அவர் மறைந்துவிட்டதால் அந்தப் பெயர் மீண்டும் வைக்கப்படும்; வைப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

2021 ஆகஸ்ட் 26] [முனைவர் க. பொன்முடி]

2. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள்ள 17 மின்னணு நூலகங்களை மேம்படுத்துதல் (Upgradation of Existing 17 Digital Libraries)

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தொடங்கப்பட்ட 17 மின்னணு நூலகங்கள் 10 ஆண்டுகளுக்கும் மேலாகப் பயன்பாட்டில் உள்ளன.

இந்நூலகங்களை மேம்படுத்தவும் உரிமங்களைப் புதுப்பிக்கவும் ஒரு கல்லூரிக்கு ரூ.5 இலட்சம் வீதம் 17 கல்லூரிகள் ரூ.85 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.

3. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதியதாக 10 மின்னணு நூலகங்களை அமைத்தல் (Setting up of 10 New Digital Libraries)

முதலில் சொன்னது பழையதை மேம்படுத்துவதற்கான அறிவிப்பு. இது புதியதாக மின்னணு நூலகங்கள் அமைக்கப்படுவது குறித்ததாகும். மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்கள், தங்களுக்குத் தேவைப்படும் தகவல்களையும், எல்லையற்ற அறிவுசார் வளங்களையும், உடனுக்குடன் எளிதாகப் பெறுவதற்கு, மின்னணு நூலகங்கள் பாலமாக அமைந்துள்ளன. எனவே, சென்னை–வியாசர்பாடி, தருமபுரி, பரமக்குடி, அரியலூர், முசிறி, விழுப்புரம், சிவகங்கை, கும்பகோணம், திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் அமைந்துள்ள 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மின்னணு நூலகங்கள் ரூ.1 கோடி செலவில் அமைக்கப்படும்.

4. புதியதாக தொடங்கப்பட்ட 4 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல் (Construction of New Buildings for newly opened four Government Arts and Science Colleges

மாண்புமிகு உறுப்பினர், 'நாங்கள் கல்லூரி ஆரம்பித்துவிட்டோம்' என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள். எல்லாம் பெயரளவிற்கு விதி 110–ன்கீழ் அறிவிப்பார்களேதவிர, நிதியொதுக்குவதும் கிடையாது, அதற்கான செயல்பாடுகளும் கிடையாது. இங்கே இருக்கக்கூடிய பழைய உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும். எத்தனை முறை நாம் கேள்வி கேட்டிருக்கிறோம். ஒன்றுமே கிடையாது. நம் எல்லோருக்கும்

[முனைவர் க. பொன்முடி] [2021 ஆகஸ்ட் 26

தெரியும், அவர்கள் சொல்வதோடு சரி, விதி 110–ன்கீழ் அறிவிப்பதோடு சரி; 13 கல்லூரிகள் துவக்கப்படும் என்று சொல்லிவிட்டு, 13 கல்லூரிகளுக்கு இடமும் பார்க்கவில்லை, கட்டடமும் கட்டவில்லை; எல்லாம் வாடகைக் கட்டடத்தில் இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அவர்கள்தான் கொண்டு வந்தார்கள் என்பதால் அதையெல்லாம் நாங்கள் விடவில்லை. பெயர் மாற்றியதற்கு அவ்வளவு தூரம் இங்கே பேசினார்கள். பெயர் மாற்ற வேண்டும் என்ற நோக்கம் எங்களுக்குக் கிடையாது; எங்களுக்கு அண்ணாமலை பல்கலைக்கழகத்தினுடைய 1,000 ஏக்கர் நிலத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அங்கு இருக்கிற நிதிநிலைமையை உயர்த்த வேண்டும். இன்றைய financial sources–ஐயும் நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற உணர்வோடு செய்யப்பட்டதுதானே தவிர, இதன் பெயரை மாற்ற வேண்டும் என்பது எங்களுடைய நோக்கம் கிடையாது. அவர்கள் 13 கல்லூரிகளை அறிவித்தார்கள், வேலை நடக்கவில்லை கல்லூரிகளாக இருந்தால் கட்டிவிடலாம்.

அண்மையில் தொடங்கப்பட்ட 13 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், தற்காலிகக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. முதற்கட்டமாக, சங்கரன்கோவில், ஜம்புகுளம், வானூர் மற்றும் ஆலங்குளம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள 4 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு ஒரு கல்லூரிக்கு ரூ.11.33 கோடி வீதம் மொத்தம் ரூ.45.32 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

5. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஆராய்ச்சிப் பாடப் பிரிவுகள் தொடங்குதல் (Starting Ph.D Research Programs in Government Arts and Science Colleges)

'Ph.D.–யே இங்கே இல்லை. Ph.D.–ஐக் கொண்டு வருவதற்காகத்தான் நாங்கள் விழுப்புரத்தில் பல்கலைக்கழகத்தைக் கொண்டு வந்தோம்' என்று சில பேர் இங்கே சொன்னார்கள். Ph.D.–ஐ பல்கலைக்கழகத்தில்தான் படிக்க வேண்டுமென்பதில்லை; கல்லூரிகளிலேயும்கூட M.Phil. மற்றும் Ph.D. படிப்பை மேற்கொள்ளலாம் என்பது இங்கே இருக்கக்கூடிய எல்லோருக்கும் தெரியும். அந்த அடிப்படையில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணாக்கர்கள் நலன் கருதி, முனைவர் பட்ட

2021 ஆகஸ்ட் 26] [முனைவர் க. பொன்முடி]

ஆராய்ச்சிப் படிப்புகளை மேற்கொள்வதற்கு செங்கல்பட்டு, சேலம், கோயம்புத்தூர், நாமக்கல், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், கும்பகோணம், கோவில்பட்டி, சென்னை–நந்தனம் மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதிதாக ஆராய்ச்சி பாடப் பிரிவுகள் தொடங்கப்படும். அங்கேயே M.Phil., Ph.D., படிப்புகளையும் மேற்கொள்ளலாம். அதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

6. பாடப் புத்தகங்களைத் தமிழில் மொழிபெயர்த்தல் (Translation of Text Books in Tamil)

தமிழ் வழியில் பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், மொழிபெயர்ப்புகளெல்லாம் வர வேண்டும், அதுபோன்ற நிறைய செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் சமது இங்கே பேசும்போது சொன்னார். அந்த அடிப்படையில் தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ் வழியிலே பயிற்றுவிப்பதற்கும், தமிழில்தான் படிக்க வேண்டும் என்பதற்கும் தமிழ்தான் முக்கியம் என்பதிலும் எந்தளவிற்கு முக்கியமாக இருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியும்.

தமிழ் வழியில் பயிலும் மாணாக்கர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்துடன் ஒருங்கிணைந்து வெவ்வேறு பாடப்பிரிவுகளில் 100 பாடப் புத்தகங்கள் ரூ.2 கோடி செலவில் தமிழில் மொழிபெயர்க்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. பட்டயப் படிப்புகளை தமிழ் வழியில் அறிமுகப்படுத்துதல் (Introduction of Diploma Courses in Tamil Medium)

தமிழ் வழியில் கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு, அரசுப் பணிகளில் 20 விழுக்காடு ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. பட்டயப் படிப்பில் பயிற்று மொழியாக ஆங்கிலம் மட்டுமே இதுவரை இருந்து வருகிறது. முதற்கட்டமாக, அடுத்த கல்வியாண்டில், அமைப்பியல் (Civil Engineering) மற்றும் இயந்திரவியல் (Mechanical Engineering) பட்டயப் படிப்புகள் தமிழ் வழியில் தொடங்கப்படும். படிப்படியாக இதர பட்டயப் படிப்புகளும் தமிழ் வழியில் தொடங்கப்படும்.

[முனைவர் க. பொன்முடி] [2021 ஆகஸ்ட் 26

பிற்பகல் 2–20

8. மகளிருக்கான பட்டயம் மற்றும் குறுகியகால சான்றிதழ் படிப்புகள் அறிமுகப்படுத்துதல் (Introduction of Women–Friendly Diploma and Short Term Certificate Courses)

மகளிருக்கான education–ல் நாம்தான் முக்கியமாக நிற்கிறோம். பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் (Polytechnic Colleges) தற்சமயம், மாணாக்கியர் சேர்க்கை விகிதம் குறைவாக உள்ளது.

அதிலும் குறிப்பாகப் பார்த்தால், Engineering Colleges–ல், polytechnic college–ல் ladies அவ்வளவாக சேருவதில்லை. Arts Colleges, மற்ற கல்லூரிகளில் எல்லாம் நிறைய பெண்கள் சேருகிறார்கள். இந்த Technical College–களில் ladies குறைவாக இருக்கிறார்கள்.

எனவே, மகளிரின் சேர்க்கை மற்றும் வேலைவாய்ப்பை உயர்த்துவதற்காக அக வனப்பியல் (Interior decoration), அலுவலக மேலாண்மை மற்றும் கணினிப் பயன்பாடுகள் (Office Management and Computer Applications), இணையவலை வடிவமைப்பு (Web Designing), இயந்திரவிய கணினிகொண்டு வடிவமைத்தல் (CAD), உயிர் மருத்துவ மின்னணுவியல் (Bio Medical Electronics) மற்றும் இதயத் துடிப்புப் பதிவி (ECG) தொழில்நுட்பம் ஆகிய 6 பாடப் பிரிவுகள் தொடங்கப்படுகின்றன.

இவற்றையெல்லாம் உருவாக்கினால் ladies இன்னும் கூடுதலாகச் சேருவார்கள். ஆக, மகளிரின் படிப்பை வளர்ப்பதற்காக இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம்.

9. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் மாணாக்கர்களுக்கு அயல்நாட்டு மொழிகள் கற்பித்தல் (Teaching Foreign Languages to Final Year Students of Government and Government–Aided Engineering Colleges)

அது மிக முக்கியம். தற்போது நம்முடைய கிராமங்களில் படிக்கின்ற மாணவர்களில் அதிகமானவர்கள் இங்கே வேலைவாய்ப்பு இல்லாததால், வெளிநாட்டுக்குப் போய் படிக்கிறார்கள்.

ஆகவே, நமது மாணாக்கர்கள் அயல்நாடுகளில் ஆராய்ச்சி மற்றும் வேலைவாய்ப்பினை அதிகளவில் பெறுவதற்காக,

2021 ஆகஸ்ட் 26] [முனைவர் க. பொன்முடி]

அயல்நாட்டு மொழிகளைக் கற்றல் கூடுதல் நன்மை பயக்கும் என்பதால், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நிதியுதவியுடன், பொறியியல் கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் மாணாக்கர்களுக்கு ஜெர்மானிய, ஜப்பானிய, சீன, ரஷ்ய, பிரென்ச் ஆகிய அயல்நாட்டு மொழிகள் கற்பிக்கப்படும்.

அதுபோன்ற மாணவர்களுக்கு வெளிநாட்டு மொழிகளைக் கற்றுக்கொடுப்பதற்காக ஜெர்மானிய, ஜப்பானிய, சீன, ரஷ்ய, பிரென்ச் ஆகிய அயல்நாட்டு மொழிகளைக் கற்பிப்பதற்கான ஏற்பாடுகளையும் இந்தப் பல்கலைக்கழகங்களிலே செய்யவிருக்கிறோம்.

10. ஈரோடு சாலை மற்றும் போக்குவரத்துப் பொறியியல் கல்லூரியினை அரசுப் பொறியியல் கல்லூரியாக மாற்றுதல் (Conversion of Institute of Road and Transport Technology (IRTT), Erode into Government Engineering College, Erode)

அதுமட்டுமல்ல: ஈரோட்டைப் பொறுத்தவரையில், ஈரோடு சாலை மற்றும் போக்குவரத்து பொறியியல் கல்லூரி, Transport College இருக்கிறது. கலைஞர் அவர்களுடைய ஆட்சியின்போதுதான் அந்தக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. Transport department-ல் பணி செய்கிறவர்களுடைய கோரிக்கையை ஏற்று ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், அந்தக் கல்லூரியை நடத்துவதற்கு அவர்கள் அதிகக் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அந்தக் college-ஐ அரசாங்கமே எடுத்து நடத்துகிறது. அரசாங்கமே எடுத்துக்கொண்டாலும்கூட, போக்குவரத்துத் துறையிலே பணியாற்றுபவர்களுக்கு 35 சதவிகித இட ஒதுக்கீடும் வழங்கப்படும். அதனால், அவர்கள் படிப்பதற்கும் அந்தக் கல்லூரியில் வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்திருக்கிறோம்.

அதனடிப்படையில், மாநிலப் போக்குவரத்துக் கழகத்தின் நிதிநிலைமையினைக் கருத்தில்கொண்டு, அக்கழகத்தால் நிருவகிக்கப்பட்டுவரும் ஈரோடு, சாலை மற்றும் போக்குவரத்துப் பொறியியல் கல்லூரி (Institute of Road and Transport Technology, Erode) இக்கல்வியாண்டு முதல் அரசுப் பொறியியல் கல்லூரியாக மாற்றப்பட்டு, மாணாக்கர் சேர்க்கையில் 35% இடங்கள் மாநிலப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கென தொடர்ந்து ஒதுக்கீடு செய்யப்படும்.

[முனைவர் க. பொன்முடி] [2021 ஆகஸ்ட் 26

11. பொறியியல் பட்டதாரி மாணாக்கர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் மேற்படிப்புக்கான போட்டித் தேர்வுகளுக்குப் பயிற்சி வழங்குதல் (Providing intensive coaching for competitive Examinations to engineering graduates)

முதலில் வேலைவாய்ப்பைக் கருதித்தான் அனைவரும் படிக்க வருகிறார்கள்.

எனவே, பொறியியல் பட்டதாரிகள், பட்ட மேற்படிப்பினை உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ பயிலவும், வேலைவாய்ப்பினைப் பெறும் எண்ணிக்கையை உயர்த்தவும், போட்டித் தேர்வுகளான IES, GATE, CAT, GMAT, GRE, IELTS, TOEFL போன்றவைகளுக்கு சிறப்புப் பயிற்சி வழங்கப்படும்.

12. தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் மற்றும் தொழில் முனைவு மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளுதல் (Memorandum of Understanding (MoU) between Directorate of Technical Education and Entrepreneurship Development and Innovation Institute (EDII))

பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில், மாணவர்களைத் தொழில் முனைவோர்களாக ஊக்குவிப்பதற்கும், உரிய பயிற்சிகளைப் பெறுவதற்கும் தொழில் முனைவு மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் உதவியுடன், 5 மண்டலங்களில் பயிற்சி மையம் நிறுவப்படும். இம்மையங்கள்மூலம் தமிழகத்தில் உள்ள அனைத்து பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கும் மேற்கூறிய பயிற்சிகள் வழங்கப்படும்.

இதற்காக, ஐந்து மண்டலங்களில் பயிற்சி மையம் உருவாக்கப்படும்.

13. தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், கல்லூரிக் கல்வி இயக்ககம் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திற்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளுதல் (Memorandum of Understanding (MoU) between Directorate of Technical Education, Collegiate Education and Tamil Nadu Skill Development Corporation)

மாணாக்கர்களின் வேலைவாய்ப்புத் திறன்களை மேம்படுத்துவதற்காக கூடுதல் பாடங்கள் (add–on courses) பயிற்றுவிக்க தொழில்நுட்பக் கல்வி மற்றும் கல்லூரிக் கல்வி

2021 ஆகஸ்ட் 26] [முனைவர் க. பொன்முடி]

இயக்ககங்கள், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்படும்.

அதற்கான ஒரு திட்டமும் செயல்படுத்தப்படவிருக்கிறது.

14. தமிழகத்தில் 5 மண்டலங்களில் 'செய்கலைஞர் ஆய்வுக் கூடம்' நிறுவுதல் (Establishment of Fab Lab/Maker Space in 5 Regions)

ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர்களின் படைப்பாற்றல் மற்றும் தனித் திறன்களை மேம்படுத்த வேண்டும். முதலில் படைப்பாற்றல் இருக்க வேண்டும்; தனித் திறன்களும் இருக்க வேண்டும். மாணவர்களிடத்தில் என்ன திறமை இருக்கிறது என்று பார்த்து, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், திரு அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் சொன்னதுமாதிரி, மனப்பாடம் செய்து ஒப்புவிப்பது மாதிரி இல்லாமல், அவர்களுடைய திறமைகளை வெளிக்கொணர வேண்டும்.

அதற்காக, ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர்களின் படைப்பாற்றல் மற்றும் தனித் திறன்களை மேம்படுத்த 5 மண்டலங்களில் 'செய்கலைஞர் ஆய்வுக் கூடம்' (Fab Lab/ Maker Space) நிறுவப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

15. பி.காம். பட்டப் படிப்பில் நேரடி இரண்டாம் ஆண்டுச் சேர்க்கை (Lateral Entry to B.Com. Courses)

Commerce படிப்பில் Diploma படித்துவிட்டு வருபவர்கள் முன்பெல்லாம் B.Com Second year–ல் சேர முடியாது. First year–ல்தான் சேர வேண்டும். தற்போது polytechnic college–ல் படித்துவிட்டு வருபவர்கள் second year–ல் சேரலாம். Engineering College–ல் அதுபோன்ற முறை இருக்கிறது. அந்த மாதிரி ஒரு முறையில் Commerce படிப்பில் Diploma படித்துவிட்டு வருபவர்கள் பி.காம். பட்டப் படிப்பில் Second year சேருவதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த நேரத்தில் இன்னும் ஒன்றையும் சொல்கிறேன். முன்பெல்லாம் பொறியியல் கல்லூரிகளில் Second year–ல் fail ஆகிவிட்டார்களென்றால், அடுத்து, third year–க்குப் போக முடியாது. Fourth year–க்குப் போக முடியாது. Second year–ஐ முடித்தால்தான் third year போக முடியும். இப்போது அந்த முறையையும் மறுபரிசீலனை செய்து second year, third year and fourth year continuous

[முனைவர் க. பொன்முடி] [2021 ஆகஸ்ட் 26

ஆகப் போகலாம். அதற்காக அப்போதைக்கப்போது தேர்வுகளை எழுதினால் போதும் என்பதன் அடிப்படையில் அதற்கான பரிசீலனையைச் செய்துகொண்டிருக்கிறோம். அதுகுறித்தும் விரைவில் அறிவிக்கப்படும். இவையெல்லாம் மாணவர்களுக்கான நன்மைகள். கிராமப்புறத்திலே அடித்தட்டிலிருக்கிற மக்களுக்கான நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இட்ட கட்டளையின் அடிப்படையிலே இவற்றையெல்லாம் செய்துகொண்டிருக்கிறோம்.

எனவே, பலவகை தொழில்நுட்பப் பட்டயப் படிப்புகளான, வணிகவியல் பயிற்சி பட்டயப் படிப்பு (Diploma in Commercial Practice), வணிகவியல் பயிற்சி மற்றும் கணினிப் பயன்பாடுகள் பட்டயப் படிப்பு (Diploma in Commercial and Computer Practice) பயின்ற மாணாக்கர்கள், தமிழகத்தின் அனைத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும், நேரடியாக இரண்டாம் ஆண்டில் பி.காம். படிப்பில் சேர்ந்து பயில வழிவகை செய்யப்படும்.

16. தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்திற்கும், மும்பை, இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (IIT–Bombay) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளுதல் (Memorandum of Understanding between Directorate of Technical Education and IIT–Bombay)

மும்பை இந்திய தொழில்நுட்ப நிறுவனத்துடன் (IIT–Bombay) இணைந்து தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்தவும், வேலைவாய்ப்பினை அதிகரிக்கவும் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் நிகழ்நிலைப் பாடங்கள் 51 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும்.

இரண்டு மாநிலங்களுக்கிடையே தொடர்பினை ஏற்படுத்திக்கொள்வதற்காக உருவாக்கப்படுகிற திட்டமாகும்.

17. ரூசா (RUSA) நிதி உதவியுடன் "வாராந்திர நிகழ்நிலைப் பயிலரங்கம்" நடத்துதல் (Conducting Weekly Online Workshop (WOW) through RUSA)

தேசிய உயர் கல்வித் திட்டம் (RUSA) நிதி உதவியுடன், தமிழகத்தில் உள்ள 150 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தொழில் முனைவு குறித்து நிகழ்நிலை பயிலரங்கங்கள் நடத்தப்படும்.

அதற்காகவும் ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

2021 ஆகஸ்ட் 26] [முனைவர் க. பொன்முடி]

18. ரூசா (RUSA) நிதி உதவியுடன் உயர்கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு தொழில்சார் திறன் பயிற்சியளித்தல் (Vocational Training to the students of Higher Education through RUSA)

ரூசா நிறுவனத்தின் நிதி உதவியுடன் தொழில்சார் திறன் பயிற்சியளிக்கிற ஒரு திட்டத்தைச் செயல்படுத்தவிருக்கிறோம்.

அதனடிப்படையில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு தொழில்சார் திறன் பயிற்சி ரூ.3.30 கோடி செலவில் அளிக்கப்படும்.

19. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்திற்கான 4 புதிய மண்டல மையங்கள் நிறுவுதல் (Establishment of 4 New Regional Centres for Tamil Nadu Open University)

Open University-ல் 4 புதிய மண்டல மையங்கள் நிறுவுவதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

அதனடிப்படையில், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் தற்போது 8 மண்டல மையங்கள் வழியாக கல்விச் சேவை வழங்கி வருகிறது. மேலும், கூடுதலாக 4 புதிய மண்டல மையங்கள் ரூ.1 கோடி செலவில் சேலம், திருவண்ணாமலை, மயிலாடுதுறை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் அமைக்கப்படும்.

பிற்பகல் 2–25

20. மாவட்ட மைய நூலகங்களுக்குப் பாட நூல்களை வழங்குதல் (Supply of learning materials to District Central Libraries)

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் சார்பில், கற்போர் நலனுக்காகவும், பல்வேறு போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணாக்கர்கள் பயன்பெறும் வகையிலும் 32 மாவட்ட மைய நூலகங்களுக்கு தலா 750 பாடநூல்கள், ரூபாய் ஒரு கோடி செல்வில் வழங்கப்படும்.

தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதலிலேயே சொல்லிவிட்டார்கள். எனக்கு புத்தகத்தை மட்டும் கொடுங்கள்,

[முனைவர் க. பொன்முடி] [2021 ஆகஸ்ட் 26

சால்வையைக்கூட போட வேண்டாம் என்று சொல்லியிருக்கிற ஒரு முதலமைச்சர் இந்தியாவிலேயே (மேசையைத் தட்டும் ஒலி) நமது தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர், தளபதி அவர்களாகத்தான் இருக்க முடியும். கொடுக்கின்ற புத்தகங்கள் அனைத்தையும் நூலகங்களுக்குக் கொடுத்துக்கொண்டிருப்பவர் தலைவர் தளபதி அவர்கள். 32 மாவட்ட மைய நூலகங்களுக்கு தலா 750 பாடநூல்கள், ரூபாய் ஒரு கோடி செலவில் வழங்கப்படும். நூலகங்களை வளர்க்க வேண்டும். நூலகம் வளர்ந்தால்தான் நாடு வளரும். அந்த அடிப்படையில் அதையும் சொல்லியிருக்கிறோம்.

21. பொறியியல் கல்லூரிகளில் முதுநிலை பட்டப் படிப்பு பயிலும் உதவித் தொகை பெறும் மாணாக்கர்களின் எண்ணிக்கையை 1200 ஆக உயர்த்துதல் (Increasing the number of students availilng Post Graduate Assistantship in Engineering Colleges to 1200)

தமிழகத்தில் உள்ள அரசு பொறியியல் கல்லூரிகளில் அண்ணா பல்கலைக்கழகம் நுழைவுத் தேர்வுமூலம் சேர்க்கை பெற்று முதுநிலைப் பட்டப் படிப்பு பயிலும் 600 மாணாக்கர்களுக்கு மாதம் ஒன்றுக்கு தலா ரூ.6,000/– உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்தக் கல்வியாண்டு முதல் இம்மாணாக்கர்கள் எண்ணிக்கை 1200 ஆக அதிகரிக்கப்படும்.

மாணாக்கர்களின் எண்ணிக்கையை உயர்த்துகிறோம். இப்போது, 600 மாணாக்கர்களுக்கு மாதம் ஒன்றுக்கு தலா ரூ.6,000/– உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. 600 மாணாக்கர்கள் என்பதை இப்போது 1,200 மாணாக்கர்களுக்கு தலா ரூ.6,000/– உதவித் தொகை வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

22. தமிழ்நாடு ஆவணக் காப்பகத்திற்காக புதிய நுண்படச்சுருள் பாதுகாப்புப் பெட்டகம் அமைத்தல் (Construction of Microfilm Repository for Tamil Nadu Archives)

தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் 300 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட ஆவணங்களிலிருந்து உருவாக்கப்பட்ட 31,000 நுண்படச் சுருள்களை நீண்டகாலத்திற்குப் பாதுகாக்கும் பொருட்டு இயற்கையிலேயே குளிர்ந்த தட்பவெப்ப நிலையுள்ள நீலகிரி மாவட்டத்தில், 5000 சதுர அடி பரப்பில் நுண்படச் சுருள் பாதுகாப்புப் பெட்டகம் உருவாக்கப்படும்.

2021 ஆகஸ்ட் 26] [முனைவர் க. பொன்முடி]

இது சென்னையில் மட்டும்தான் இருக்கிறது. இப்போது நீலகிரி மாவட்டத்திலும், 5,000 சதுர அடி பரப்பளவில் நுண்படச்சுருள் பாதுகாப்புப் பெட்டகம் ஒன்று உருவாக்கப்படும்.

23. கோவையில் உள்ள அண்ணா பல்கலைக்கழக மண்டல வளாகத்தில் மாணாக்கியர் விடுதி கட்டடம் கட்டுதல் (Construction of Women's Hostel Building in Anna University Regional Campus, Coimbatore)

கோவையில் உள்ள அண்ணா பல்கலைக்கழக மண்டல வளாகத்தில் 660 மாணவ, மாணவியர் இளநிலை மற்றும் முதுநிலை பாடப் பிரிவுகளில் பயின்று வருகின்றனர். இம்மாணாக்கியர் நலன் கருதி, ரூ.14.00 கோடி செலவில் புதிய மாணாக்கியர் விடுதி கட்டப்படும்.

24. மதுரையில் உள்ள அண்ணா பல்கலைக்கழக மண்டல வளாகத்தில் மாணவர் விடுதி கட்டடம் கட்டுதல் (Construction of Men's Hostel Building in Anna University Regional Campus, Madurai)

மதுரையில் உள்ள அண்ணா பல்கலைக்கழக மண்டல வளாகத்தில் 800 மாணாக்கர்கள் இளநிலை மற்றும் முதுநிலை பாடப் பிரிவுகளில் பயின்று வருகின்றனர். இம்மாணவர்களின் நலன் கருதி ரூ.15.00 கோடி செலவில் புதிய மாணவர் விடுதி கட்டப்படும்.

25. உயர் கல்வித் துறையின்கீழ் இயங்கும் அனைத்து கல்வி நிறுவனங்களின் பாடத்திட்டம் சீரமைத்தல் (Revision of Curricula of all Educational Institutions coming under Higher Education Department)

நவீன தேவைகளுக்கேற்ப பாடத்திட்டங்களைச் சீரமைப்பது கல்வி வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதது. மாணாக்கர்களின் அறிவு, திறன், கற்றல் மற்றும் கற்பித்தல் முறைகளை மேம்படுத்தவும், போட்டித் தேர்வுகளுக்குத் தயார்படுத்தவும், தொழில் துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் மற்றும் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கவும் உயர் கல்வித் துறையின்கீழ் இயங்கும் அனைத்து கல்வி நிறுவனங்களின் பாடத் திட்டங்கள் திருத்தியமைக்கப்படும். முதலில் syllabus correct ஆக இருந்தால்தான் படிக்கும் படிப்பு

[முனைவர் க. பொன்முடி] [*2021 ஆகஸ்ட் 26*

job oriented ஆக இருக்கும். படிக்கும் படிப்பு job oriented ஆக இருக்க வேண்டும். சுய சிந்தனையை வளர்த்துக் கொள்வதாக இருக்க வேண்டும் என்ற உணர்வோடு, பாடத்திட்டங்களை மாற்றியமைப்பதற்காகவும், அந்தப் பல்கலைக்கழகங்களின் மூலமாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

ஆகவே, இந்த அறிவிப்புகளையெல்லாம் நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. வெளியே சென்றிருந்தாலும், அவர்களும் இதைப் படித்து பார்ப்பார்கள். தெரிந்துகொள்வார்கள். எனவே, உயர் கல்வி வளர்ச்சி என்று சொன்னாலே, அது கலைஞர்தான். இன்று கலைஞர் வழியில் நடைபோடுகின்ற எங்கள் தளபதிதான் (மேசையைத் தட்டும் ஒலி) இதன் அடித்தளத்திற்கெல்லாம் காரணம் என்பதை நீங்கள் உணர்வீர்கள், அந்த உணர்வோடு உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன், நீங்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு உங்களை அன்போடு கேட்டு அமருகிறேன், இத்துறையின் செயலர் திரு. தா. கார்த்திகேயன் அவர்களுக்கும் ஒத்துழைத்த கல்வித் துறை அதிகாரிகளுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.5,020,47,44,000/–, மூலதனக் கணக்கில் ரூ.348,61,69,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.3,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு உயர் கல்வித்

துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.32,456,53,81,000/–, மூலதனக் கணக்கில் ரூ.142,70,87,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.29,50,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)